# சிறை அனுபவங்கள்

☆

கி. சடகோபன்

உதவி ஆசிரியர் 'ஹிந்துஸ்தான்'

சக்தி காரியாலயம்

ஜார்ஜ் டவுன் :: சென்னை

உரிமை பதிப்புற்றது] 1941 [விலை அணா 12

First Printed May 1941

*All rights reserved by*
**SHAKTI KARYALAYAM**
G. T. MADRAS.

Shakti Press Ltd., (Shanti Press), Madras.

# பதிப்புரை

ஸ்ரீ கி. சடகோபன் தேச சேவையில் ஈடுபட்டு பன் முறை சிறை சென்றவர். அவருடைய சிறையனுபவங் கள் 'ஹிந்துஸ்தான்' பத் திரிகையில் கட்டுரைகளாக வெளிவந்தன. அவைகளின் தொகுப்பே இந்நூல். இதனை வெளியிட அநுமதியளித்த 'ஹிந்துஸ்தான்' உரிமை யாளர்களுக்கு நன்றி.

☆

சக்தி காரியாலயத்தார்

# பொருளடக்கம்


| எண் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | மனிதன் மாறும் விந்தை | .... | 1 |
| 2. | ஒரு சிறுவனின் வீர மரணம் | .... | 8 |
| 3. | சோற்றுக் கட்டி மகிமை | .... | 16 |
| 4. | ஆசார அனுஷ்டானங்கள் | .... | 24 |
| 5. | வைத்திய விமரிசை | .... | 32 |
| 6. | கொட்டடியும் மண்டபமும் | .... | 38 |
| 7. | உணவு மகாத்மியம் | .... | 46 |
| 8. | தண்ணீரிலும் கட்டுப்பாடு | .... | 54 |
| 9. | நரகலோக தண்டனைகள் | .... | 62 |
| 10. | சாமான் சப்ளை ஊழல்கள் | .... | 71 |
| 11. | சுயம்பாக உரிமை | .... | 79 |
| 12. | சில தமாஷ்கள் | .... | 87 |
| 13. | கானமும் சாவும் | .... | 93 |
| 14. | புண்ணிய ஸ்தலங்கள் | .... | 99 |
| 15. | கைதியிலே ஒரு காவலன் | .... | 105 |
| 16. | இதுவா சீர்திருத்தம்? | .... | 113 |

# சிறை அனுபவங்கள்

## 1. மனிதன் மாறும் விந்தை

மீண்டும் இதோ காங்கிரஸ்காரர்கள் தேச விடுதலை யின் பொருட்டுச் சிறை சென்றுகொண் டிருக் கிறார்கள்; 1931-32-ஆம் வருஷங்களில் சத்தியாக் கிரஹ இயக்கம் நடைபெற்றபோது நான் கண்ட சில சிறை அனுபவங்களை, இச் சமயத்தில் கூற விரும்பு கிறேன். திருச்சிச் சிறையில் சுமார் 500 சத்தியாக் கிரஹிகளுக்குமேல் அப்போது சிறைப்படுத்தப்பட் டிருந்தார்கள். அக்காலத்தில் எந்தச் சிறைக்குப் போனாலும் சத்தியாக்கிரஹிகளே நிறைந்திருப்பார் கள். கிரிமினல் குற்றங்களைச் செய்தவர்களுக்காகச் சிறைகள் கட்டப்பட்டதாகத் தோன்றாது; சத்தியாக் கிரஹிகளுக்காகவே சிறைகள் கட்டப்பட்டனவோ என்றுதான் தோன்றும். அந்த நாள்களில் சிறையில் இருந்த கிரிமினல் கைதிகளுக்குங்கூடக் குதூகலம் ஏற்பட்டிருந்தது. அவர்களுக்கு என்ன குதூகலம் எனில், நேர்முகமாகத் தேசத்துக்குச் சேவை செய்யா விட்டாலும், சிறையிலுள்ள சத்தியாக்கிரஹிகளுக்குப் பணியும் சகாயமும் செய்வதன்மூலம் ஒருவாறு

தேசப்பணி செய்த பிராப்தி தங்களுக்குக் கிடைத்ததே என்று அவர்கள் ஆனந்தப்பட்டார்கள்.

சிறைக்கு வெளியே ஒரு மனிதனுடைய குணத்தையும் மனோபாவத்தையும் மதிப்பிட நம்மால் சாத்தியப்படுவதில்லை யல்லவா? ஆனால், சிறைக்குள்ளே சென்று விட்டால், ஒவ்வொரு மனிதனுடைய இயற்கைக் குணமும் சுபாவமும் உள்ளங்கை நெல்லிக் கனிபோல் தெரிந்துவிடும். நாட்டில் பஞ்சம் ஏற்பட்டால் ஜனங்கள் எப்படி மிருக சுபாவம் வாய்ந்தவர்க ளாகிவிடுவார்களோ அப்படியே, சிறைக்குள் இருக்கும் கைதிகளும் மாறிவிடுவார்கள். சிறைக்கு வெளியே கோடி பொன் கிடைத்தால் ஒரு மனிதன் எவ்வளவு ஆனந்தப்படுவானோ அதே ஆனந்தத்தை, சிறைக்குள் ளிருக்கும்போது ஒரு உப்புக்கல் கிடைத்த மாத்திரத்திலேயே அவன் அடைவான். மனிதனை இம்மாதிரி மிருகமாக்கிவிடக்கூடிய நிலைமை வாய்ந்த இடத்தில் அவனைச் சிறைப்படுத்தி வைத்தால், அவனுடைய அற்ப குணங்களெல்லாம் மேல் மட்டத்துக்கு வந்துவிடும்; சிறைக்கு வெளியே அவன் செய்து வந்த பாவனைகளெல்லாம் மறைந்து போகும். அவன் பச்சையாகவே அற்பத்தனம் செய்யவும் தொடங்குவான்.

யதார்த்தமாகவே நல்ல குணம் வாய்ந்தவர்கள் சிறைக்குச் சென்றால், அங்கேயும் அவர்களுடைய நல்ல குணமே பிரதிபலிக்கும். 'சங்கு சுட்டாலும் வெண்மை தரும்' என்பதைப்போல, நல்லோர்கள்

சிறைக்குள்ளும் கஷ்டத்திலும் தங்களுடைய நல்ல குணங்களையே காட்டிக்கொண் டிருப்பார்கள். இந்த அற்புதக் காட்சியையும் சிறைக்குள்ளே கண்டு ஆனந்திக்க முடியும். ஒரு உப்புக் கல்லுக்காகக் கொலை செய்யவும் தயாராக இருந்த ஜன்மங்களையும் நாங்கள் பார்த்தோம்; தங்களுக்குக் கொடுத்த ஆகாரத்தைப் பிறருக்குத் தானம் செய்துவிட்டுப் பட்டினி கிடந்த ஆத்மாக்களையும் பார்த்தோம்.

ஒரு நாள் என் நண்பர் ஒருவர் ஏதோ ஒரு அற்பப் பொருள் தமக்குக் கிடைக்கவில்லை யென்று பிற நண்பர்களுடன் மனஸ்தாபப்பட்டார். நண்பர்களெல்லாம் ரகசியமாகச் சதியாலோசனை செய்து தமக்கு ஒரு வஸ்து கிடைக்காமல் செய்துவிட்டதாகவே அவர் கருதினர். நான் எவ்வளவோ அவருக்கு உபதேசம் செய்து பார்த்தேன். ஹிதமாகப் பேசி நண்பர்களின் மனதை வசியப்படுத்துவதில் நான் மிகவும் சாமர்த்தியக்காரன் என்று, சிறைக்கு வெளியே இருந்தபோது என் நண்பர்கள் சொல்லுவார்கள்; அவர்கள் சொன்னதை நானும் நம்பியிருந்தேன். ஆனால், சிறைக்குள்ளே என்னுடைய திறமை பலிக்கவில்லை யென்பதை உணர்ந்தேன். என் நண்பருக்கு நான் எவ்வளவோ உபதேசம் செய்து பார்த்தும், அவர் மனதைக் கொஞ்சங்கூட மாற்றவே முடியவில்லை.

பாரத சமுதாயத்திலுள்ள 40 கோடி மக்களும் சுகமாக வாழ்வதற்காக, உடல், பொருள், ஆவி மூன்

றையும் தத்தம் செய்வதாகக் கூறிக்கொண்டு சிறைக்குள் வந்தவர்கள், சிறையிலே ஒரு சிறிய வஸ்துவுக்காக நண்பர்களிடம் மனஸ்தாபப்படுவது தவறு என்றும், அம்மாதிரியான மனப்பான்மையுடன் சிறைவாசத்தைக் கழிப்பதனல் நாம் கோரிய பலன் கிடைக்காமல் போய்விடுமென்றும் எவ்வளவோ எடுத்துக் கூறினேன். அது என் நண்பருக்கு உறைக்காமல் போனதை எண்ணி, என் மனம் வியாகூலப்பட்டது. எனக்கு ஒருவருடனும் பேசத் தோன்றவில்லே. எது எதையோ பற்றிச் சிந்தித்துக் கொண்டே, சிறையின் மைதானத்தைச் சுற்றி வந்து கொண்டிருந்தேன்.

நான் சுற்றிவரும் வழியில் ஒரு கிரிமினல் கைதி ஓரிடத்தில் உட்கார்ந்திருந்தான். அவனுடன் பேசிச் சிறிது காலம் கழிக்கலாம் என்று எனக்குத் தோன்றிற்று. "நீ என்ன குற்றம் செய்து தண்டிக்கப்பட்டாய்?" என்று அவனைக் கேட்டேன். இம்மாதிரி யாராவது கேட்கமாட்டார்களா என்று அந்தக் கைதி பல நாட்களாகக் காத்திருந்தான் என்றே தோன்றியது. நான் அவனைக் கேள்வி கேட்டுவிட்டு, புல் தரையில் உட்கார்ந்தேன். அந்தக் கைதியும் எனக்கு எதிரே உட்கார்ந்து, தன் கதையைச் சொல்லத் தொடங்கினன். அவன் சொன்ன கதையில் ஒரு விஷயம் ரொம்ப ருசிகரமானது. அந்தக் கைதிக்குங் கூடச் சட்ட ஞானம் இருந்திருக்கிறதென்பது அவன் சொன்ன விஷய மொன்றிலிருந்து தெரிந்தது.

"நான் கொலை செய்ததாக என்மீது குற்றம் சாட்டி என்னைத் தண்டித்து விட்டார்கள், சாமி" என்று கைதி தன் கதையைச் சொல்லத் தொடங்கினான்: "கோர்ட்டார் நியாயமாகத் தீர்ப்பு வழங்கவில்லை, சாமி. நானும் என் விரோதியும் என் கிராமத்தில் கிணற்றங் கரையின்மீது நின்று சண்டையிட்டோம். ஆரம்பத்திலே பேச்சளவிலே இருந்தது சண்டை. ஆனால், போகப் போகப் பேச்சு முற்றி அடிதடி வந்துவிட்டதுங்கோ. நான் என் விரோதியைக் காலால் எட்டி உதைத்தேனுங்கோ. என் விரோதி, பாருங்கோ, கிணற்றிலே விழுந்துவிட்டான். தண்ணீரில் விழுந்து உள்ளே போனவன் மேலே வரவேயில்லை. 'சரி, செத்துவிட்டான்' என்று நான் போய்விட்டேன். பிறகு, போலீஸ்காரன் வந்து, என்னைக் கைது செய்து, கொலை செய்ததாகக் குற்றம் சாட்டி விட்டான்.

"இந்த வழக்கு கோர்ட்டிலே விசாரணையாகும் போது, என் வக்கீலுக்கு ஒரு விஷயம் சொல்லி வைத்திருந்தேன். நீதிபதியிடம் அதைத் தெரிவிக்குமாறு சொல்லியிருந்தேன். அவர் சொன்னாரோ இல்லையோ, எனக்குத் தெரியாது. அவர் சொல்லி யிருந்தால், ஜட்ஜு என்னைச் சிறைக்கு அனுப்பி யிருக்கமாட்டார் என்று இப்போதுகூட நான் நினைக்கிறேன். அந்த விஷயம் என்னவென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். உங்களுடைய அபிப்பிராயத்தைச் சொல்லுங்கள். நான் விரோதியை எட்டி உதைத்தது வாஸ்தவம்.

என் விரோதி தண்ணீரில் விழுந்தான். 'நான் உதைத்ததனால் இறந்தானா? தண்ணீரில் மூழ்கி இறந்தானா?' என்னும் விஷயத்தைக் கோர்ட்டார் கவனிக்க வேண்டாமா? என் எதிரியை எட்டி உதைத்ததற்காக எனக்குத் தண்டனை விதிப்பதுதான் நியாயம். அவனைக் கொலை செய்ததாகத் தண்டனை விதித்தது நியாயமா? நீங்களே சொல்லுங்கள்" என்று என்னுடைய தீர்ப்பைக் கேட்டான்.

"நியாய மில்லைதான். ஆனால் தலைவிதி அப்படி இருக்கே! என்ன செய்வது" என்று கூறிவிட்டு, நான் அவனிடம் விடைபெற்றுக் கொண்டேன். நான் அவ்வாறு தீர்ப்புச் சொல்லி யிராவிட்டால், அவனது மனம் நிம்மதி யடையாது. சிறையில் அவனுக்கு ஏதோ துளிச் சந்தோஷம் ஏற்படுவதை நான் ஏன் கெடுக்கவேண்டு மென்று நினைத்தே, அவ்வாறு கூறினேன்.

மற்றொரு சமயம் மற்றொரு கிரிமினல் கைதியுடன் சம்பாஷித்துக் கொண்டிருந்தேன். தான் திருச்சிப் பாலத்தின்மீது உற்சவத்துக்குச் சென்று கொண்டிருந்த ஒரு பெண்ணின் கழுத்திலிருந்த பொன் சங்கிலியை அறுக்க முயற்சி செய்ததற்காகத் தண்டனை பெற்றதாக, அவன் கூறினான். நடந்த விஷயங்களைக் கொஞ்சங்கூட மறைக்காமல் என்னிடம் சொன்னான். "நான் எத்தனையோ தடவை சங்கிலி அறுத்திருக்கிறேன். சங்கிலி அறுப்பதிலே எனக்குச் சமானம் யாருமே யில்லை. எத்தனை பவுன் வடமாக இருந்தா

லும் பாதகமில்லை; ஒரே 'ஜட்கா'விலே அறுத்து விடுவேன். ஆனால், அன்றைக்கு என் தலைவிதி பாருங்கோ, முதல் தடவை 'ஜட்கா'விலே அடித் தேன். சங்கிலி அறவில்லை. சங்கிலி கழுத்தில் புதைந்து விட்டது. மூன்று தடவை பிரயத்தனம் செய் தேன். மூன்று தடவையும் பலிக்கவில்லை. அவள் போட்ட கூச்சலில் கும்பல் கூடிவிட்டது. என்னை ஜனங்கள் பிடித்துக்கொண்டார்கள்" என்று தன் கதையைச் சொன்னான்.

நான் பல கிரிமினல் கைதிகளுடன் சம்பாஷணை செய்திருக்கிறேன். அவர்களில் ஒருவன்கூடப் பொய் சொன்னதை நான் பார்க்கவில்லை. சிறைக்குள் வந்த மாத்திரத்தில் அவர்கள் அவ்வளவு பேர்களும் எப்படி அரிச்சந்திரர்களாகி விட்டார்கள் என்னும் ஆச்சரியம் என் மனதில் பல தடவை எழுந்ததுண்டு. அதற்கு ஒரே ஒரு சமாதானந்தான் எனக்குத் தோன்றுகிறது. அது இதுதான்: சிறையில் பொய் பேசவேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு ஏற்படவில்லை. சிறைக் குள்ளே அமைந்திருக்கும் சமூகத்தில் பொய் பேசுகிற வனுக்குத்தான் உணவு கிடைக்கும் என்னும் நிலைமை ஏற்படுவதில்லை. ஆகவே அவர்கள் பொய் பேசுவ தில்லை. ஆனால், வெளிச் சமூகத்தின் அமைப்பிலே தோஷமிருக்கிறது. சூது வாது செய்பவனுக்கே இதில் சம்பாத்தியம் கிடைக்கிறது. ஆகையால்தான், நல்லவர்கள்கூட இங்கே பொல்லாதவர்கள் ஆகிவிடு கிறார்கள்.

# 2. ஒரு சிறுவனின் வீர மரணம்

முன் தடவை சிறைக்குச் சென்ற சத்தியாக்கிரஹி களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர், சிறை வாசத்தை முடித்துக்கொண்டு வெளியே வரும்போது ஹிந்தி பாஷையில் பூர்ண ஞானத்தோடு வருவதென்று வைராக்யமாக இருந்தார்கள். சிறையினின்று வெளியே வந்ததும் ஹிந்தி தெரியாத நண்பர்களுடன் ஹிந்தியில் பேசி அவர்களைத் திணறும்படி செய்து விடுவதென்றும், கூட்டங்களில்கூட ஹிந்தி பாஷையி லேயே பேசுவதென்றும் மனக் கோட்டை கட்டி னார்கள். ஆளுக்கு ஒரு ஹிந்தி அரிச்சுவடியை வாங்கினார்கள். ஹிந்திப் பிரசார சபையாருக்கு நல்ல வியாபாரம் நடந்தது. அவ்வளவுதானே யன்றி, ஹிந்தியைக் கற்றுக் கொண்டவர்கள் வெகு சிலரே யாவர். மற்றவர்களுடைய வைராக்கியமெல்லாம் ஆரம்ப சூரத்தனமாகிவிட்டது.

அரிச்சுவடிப் புத்தகத்தை வாங்கினதோடு ஹிந்தி வாசிப்புக் கடையைக் கட்டிக் கொண்டவர்களை, வெகு புத்திசாலிகளென்றே சொல்லவேண்டும். ஏனெனில், இன்னும் சிலர் அரிச்சுவடிப் புத்தகத்தி லிருந்து 'மேவாத் பட்டான்' என்னும் உயர்ந்த ஹிந்திக் காவியம் வரையில், சுமார் இருபது புத்தகங் களை வாங்கி அடுக்கி வைத்துக் கொண்டார்கள்.

இந்தப் புத்தகக் கட்டில் துளசி ராமாயணமும் ஒன்று. இந்தக் கட்டுப் புத்தகங்களும் அவர்களுக்கு ஒருவிதத்தில் பிரயோஜனமாக இருந்தது. சிறையில் தலையணை கொடுக்க மாட்டார்கள்; புத்தகக் கட்டு தலையணையாக உபயோகப்பட்டது! இது மாத்திரமல்ல; அவர்கள் மற்றொரு விதத்திலும் பிரயோஜன மடைந்திருப்பார்களென்றே நான் கருதுகிறேன். எப்படியெனில், தலை அடியில் புனிதமான ராமாயணத்தை வைத்துக் கொண்டதனால், ராமாயணப் புத்தகத்திலுள்ள புண்ணியமெல்லாம் தலைக்குள் ஏறி யிருக்கு மல்லவா? ராமாயணத்தைப் பாராயணம் பண்ணாமலே, பாராயணம் செய்த புண்ணியத்தை, சுலபமான முறையில் அவர்கள் சம்பாதித்து விட்டார்கள்!

ஹிந்தி கற்கவேண்டுமென்று சில நண்பர்கள் நினைத்ததுபோலவே ஆங்கிலம் கற்கவேண்டுமென்றும் ஒரு சிலர் பிரயத்தனம் செய்தார்கள். இவ்வாறு பிரயத்தனம் செய்தவர்களில் ஸ்ரீ அண்ணாமலைப் பிள்ளையும் ஒருவர். அவர் ஆங்கில பாஷையைக் கற்றுக் கொள்ளும்போது செய்த அட்டகாசத்தைப் பார்த்தால், ஆங்கில பாஷைக்கு முடிவு காலம் வந்துவிட்டாற் போல் இருந்தது. 'இல்லாவிட்டால் இந்த மனிதனுக்கு ஏன் ஆங்கிலம் கற்கவேண்டுமென்னும் எண்ணம் தோன்றிற்று!' என்றே நாங்கள் நினைத்தோம். அவர் ஒரு ஆங்கிலப் புத்தகத்தை எடுத்துக்கொண்டு படிக்கத் தொடங்கும்போதே, குஸ்திக்குப் போகிறவரைப் போல, அட்டகாசமாய் ஆர்ப்பாட்டங்கள் பண்ணிக்

கொண்டுதான் படிக்க ஆரம்பிப்பார். அவருக்கு உபாத்தியாயராக இருந்தவர்களில் நானும் ஒருவன். அவர் அருகில் உட்கார்ந்து பாடம் சொல்ல எனக்குக் கொஞ்சம் அச்சந்தான். உடம்பை நெரித்துக்கொண் டும் கண்களை விழித்துக் கொண்டும் நெஞ்சைக் கனைத்துக் கொண்டும் புத்தகத்தை அவர் கையில் எடுக்கும்போதே, இவருக்குப் புத்தகத்தின் மேல் கோபமா, பாஷையின்மீது கோபமா, உபாத்தியாயர் மீதுதான் கோபமா என்று சந்தேகம் தோன்றும்.

படிக்க ஆரம்பித்ததும், ' அண்டு ' என்னும் பதம் வந்துவிட்டால், அந்தச் சொல் சுக்கு நூறாக உடைந்து சிதறிப்போகும் வண்ணம் உச்சரிப்பார். " அப்பா, அந்தப் பதத்தை அப்படி ஏன் உச்சரிக் கிறாய்? அந்தப் பதத்துக்கு 'மேலும்' 'கூட' என் னும் அர்த்தத்தைத் தவிர, வேறு ஒன்றுமில்லையே. 'கர்ஜனை' என்னும் பதத்தை உச்சரிப்பதுபோல் உச் சரிக்கிறாயே!" என்று நான் எத்தனையோ தடவை சொன்னாலும், அவருக்கு அந்தச் சொல்லின்பேரில் இருந்த கோபம் போகவேயில்லை.

'அண்டு' என்னும் சொல்லை மேற் சொன்ன வாறு உச்சரித்தார் அல்லவா? காரமாகவும் கம்பீர மாகவும் அழுத்தமாகவும் உச்சரிக்கவேண்டிய சொற்கள் வந்து விட்டாலோ, இதற்கு நேர் விரோத மாய், அவற்றை வெகு மிருதுவாகவும் நோகாமலுந் தான் உச்சரிப்பார். இம்மாதிரி ஆங்கில பாஷா லட் சணத்தை ஹதம் செய்ய, அவருக்கு இயற்கையாகவே

ஒரு குணம் அமைந்திருந்தது. அவர் இந்தத் தடவை யும் சிறைக்குச் சென்றிருக்கிறார். "அடே, நீங்க ளெல்லாரும் முட்டாள் பயல்கள். எனக்கு ஆங் கிலம் சொல்லிக் கொடுக்கும் திறமை உங்களுக்கு இல்லை. இந்தத் தடவை நான் ராஜாஜியிடம் ஆங்கிலம் கற்கப்போகிறேன்" என்று கூறிவிட்டே, அவர் சென்றிருக்கிறார். ராஜாஜிக்கு என்ன சோதனைக் காலம் வந்திருக்கிறது பாருங்கள்!

நாங்கள் அண்ணாமலைக்கு ஆங்கில உபாத்தியாய ராக இருந்ததற்குக் குரு தக்ஷிணை கொடுப்பதற்கு ஈடாக, எங்களுக்குக் குஸ்திப் பயிற்சியைக் கற்றுக் கொடுக்கப்போவதாக அவர் கூறினார். சரி, தினம் மாலையில் குஸ்தி வகுப்பு நடத்துவதென்று தீர்மானித் தோம். முதல் வாரத்தில் நாங்கள் குஸ்தி கற்பவர் களைப் பார்த்துக்கொண் டிருப்பதென்றும், இரண் டாவது வாரத்திலே எங்களுக்கும் அதை ஆரம்பிப்ப தென்றும் ஏற்பாடு ஆயிற்று. முதல் வாரத்தில் குஸ்தி கற்றுக்கொண்ட மாணவர்களில் பாதிப் பேர்களுக்கு உடம்பில் ஏதாவது ஒரு அங்கமாவது பின்னமடையா மல் அவர்கள் தப்பவில்லை. இரண்டாவது வாரமும் பிறந்தது. "இன்று முதல் உங்களுக்குப் பயிற்சி" என்று குருநாதர் கூறினார். "அப்பா, உனக்கு நாங் கள் ஆங்கிலம் கற்றுக்கொடுப்பதில் திருப்தி இல்லை யென்றால், 'நீங்கள் கற்றுக் கொடுத்தது போதும்' என்று வாயினால் சொல்லி விடு. உன்னை நாங்கள் பலாத்காரம் செய்யப் போவதில்லை. குஸ்தி கற்றுக்

கொடுக்கும் சாக்கில் எங்களைச் சிட்சை செய்யவேண்டாம்" என்று நாங்கள் கூறினோம். இம்மாதிரி அரைகுறைப் படிப்புக்களும் தமாஷ்களுமாகவே கொஞ்சகாலம் கழிந்தது.

கடைசியாக ஒருநாள், எங்களைத் திருச்சிச் சிறையிலிருந்து பெல்லாரி அலிபுரம் சிறைக்கு மாற்றப் போகும் செய்தி ரகசியமாகக் கிடைத்தது. இந்த மாறுதல் துர்ப்பாக்கியத்துக்கு உள்ளாகாத நண்பர்கள் சிலர் எங்களைத் துக்கம் விசாரித்தார்கள். "அலிபுரம் சிறைக்கா மாற்றிவிடப் போகிறார்கள்? உங்களை ஆண்டவனே ரக்ஷிக்கவேண்டும்! அந்தச் சிறை அதிகாரி ராக்ஷஸ சுபாவம் வாய்ந்தவராமே? அதுவுமில்லாமல் பெல்லாரியில் மழை பெய்து இருபது வருஷங்களாயிற்றாமே? சகிக்க முடியாத வெயிலை நீங்கள் எவ்வாறு சகிக்கப் போகிறீர்கள்? அந்த ஊரிலுள்ள தேள்களும், எலிகளும் யானைப் பருமன் பருத்திருக்குமாமே?" என்றெல்லாம் கூறி எங்களைத் திகிலடையச் செய்து, எங்களுக்காகப் பச்சாதாபப் பட்டார்கள். ஆனால், நாங்கள் அலிபுரம் சிறைக்கு வந்தபிறகு, ஒருவர் கூட ஒரு தடவையாவது ஒரு தேளைப் பார்க்கவில்லை. நாங்கள் அந்தச் சிறையில் இருந்த வருஷம் கொட்டு கொட்டென்று மழைபெய்தது. சிறை அதிகாரியும் எங்களிடம் மிக அன்பாகவே நடந்து கொண்டார்.

அலிபுரம் சிறையில் ஸ்ரீ அடியோடி என்னும் பதினைந்து வயதுச் சிறுவன் காலமான கதையை அச்

சிறையின் ஸ்தலபுராண விசேஷமாகக் கருத வேண்டும். ஸ்ரீ அடியோடி என்னும் சிறுவன் பள்ளிக்கூடத்தை விட்டுவிட்டு, ஒத்துழையாமை இயக்கத்தில் கலந்து சிறைப்பட்டான். அவன் அலிபுரம் சிறைக்கு வந்து இறந்தான். அவனுக்கு 'டைபாயிட் ஜுரம்' கண்டது. பத்து தினங்களில் ஜுரம் அதிகமாகி விட்டது. பெற்றோர் முகத்தில் விழிக்காமல் அந்தப் பச்சைக்குழந்தை சிறையில் இறக்கப் போகும் பரிதாபத்தை, சிறையதிகாரியினுல் சகிக்க முடியவில்லை.

ஒரு நாள் சிறை அதிகாரி, அடியோடியின் அருகில் உட்கார்ந்து, "அப்பா, உனக்கு நான் விடுதலை வாங்கித் தருகிறேன். வீடுபோய்ச் சேர். நீ மன்னிப்புக் கேட்க வேண்டியதில்லை. மன்னிப்புக் கேட்க மாட்டாய் என்பது எனக்குத் தெரியும். உன் உடல் நிலைமையைச் சர்க்காருக்கு அறிவித்து விடுதலை செய்விக்கிறேன். உனக்கு இஷ்டந்தானு?" என்று கேட்டார்.

"நீங்கள் என் மீது இவ்வளவு கருணை காட்டினதற்கு நான் சந்தோஷப் படுகிறேன்" என்று பதிலளித்த அந்தச் சிறுவன், மேலும் சொன்ன வீரமொழிகளைப் பாருங்கள்: "நான் இனி உயிர் பிழைக்கப் போவது இல்லையென்று எனக்குத்தெரியும். சாகும் போது என் மனதில் சிறையிலே வீரச் சாவு கிடைத்தது என்னும் எண்ணத்தோடு சாவேனுகில், அதுவே எனக்குப் பேரானந்தத்தைக் கொடுக்கும். அப்பேர்ப்

பட்ட ஆனந்தத்தை அனுபவிக்கப் பாக்கியமில்லாத வனாக, என்னை ஏன் செய்கிறீர்கள்? வீட்டுக்குச் சென்றாலும் சாகத்தானே போகிறேன்?"

இந்த உத்தமயான வேதாந்தத்தைச் சிறுவன் சொல்லிக் கொண்டிருந்தபோது, ஓர் அற்புதம் நடந்தது. கல்மனம் படைத்தவர் என்று திருச்சிச் சிறையிலிருந்த சகோதரர்கள் சொன்னார்களே, அந்தச் சிறை அதிகாரியின் கண்களிலிருந்து நீர் பிரவாகமாகப் பெருகிவிட்டது. "உன்னை நான் வீட்டுக்கு அனுப்பவில்லை. உன் நோயும் சொஸ்தமாகிவிடும். கவலைப் படாதே" என்று அவனை அதிகாரி உற்சாகப்படுத்தி விட்டுச் சென்றார். அன்று முதல் அந்தச் சிறுவனுக்கு ராஜபோகமான வைத்திய சிகிச்சை நடைபெற்றது. ஒரு நாள் இரவு பன்னிரண்டு மணிக்கு 'ஐஸ்' கட்ட வேண்டுமென்று, சிறை அதிகாரிக்கு டாக்டர் டெலி போன் பண்ணினார். சிறை அதிகாரி அந்தவேளையில் தம் படுக்கையிலிருந்து எழுந்து கிளப்புக்கு வண்டியில் ஓடி, கிளப்பில் இருந்த 'ஐஸ்' கட்டிகளைக் கட்டி எடுத்துக் கொண்டு விரைந்து வந்து கொடுத்தார். அன்று இரவெல்லாம் அச் சிறுவன் உயிருக்கு மன்றாடினான். பொழுது விடியுமுன் உயிர் துறந்தான்.

சிறைக்குள்ளே மரித்த அந்த வீரனுக்குப் பிரேத ஊர்வலம் நடத்த, சிறை அதிகாரி அனுமதி கொடுத்தார். சிறையில் இருந்த சகல விதமான புஷ்பங்களையும் கொய்து, மாலைகள் கட்டி, வீரனுக்குச் சூட்டினோம். ஊர்வலம் வெளிவாயிலண்டை வருவதற்கு,

நான்கு மணி நேரமாயிற்று. சவம் வெளி வாயிலுக்கு வந்ததும், இரண்டொரு வார்த்தைகள் சொல்லுமாறு, சிறை அதிகாரியை நாங்கள் கேட்டுக்கொண்டோம். "இந்த வீரன் இறந்தான். இம்மாதிரியான வீரச் சாவு எனக்குக் கிடைக்குமானால், நான் எத்தனை தடவை வேண்டுமானாலும் பிறந்து பிறந்து சாகத் தயார்" என்று அவர் கூறினார்.

# 3. சோற்றுக் கட்டி மகிமை

சிறையில் கைதிகளுக்குக் கொடுக்கும் சோறு உதிர் உதிராக இருக்காது. 'பிக்-பென் டைம்பீஸ்' இருக்கிற தல்லவா? அந்த வடிவத்தில் கில்லைகள் செய்து, ஒவ்வொரு கைதிக்கும் ஒரு கில்லை கொடுப்பார்கள். இந்த கில்லைகளை மடப்பள்ளியி லிருந்து, கைதிக ளிருக்குமிடத்துக்கு, காலையிலும் மாலையிலும் எடுத்துக்கொண்டு வருகிற ஒரு வைபவத்தைப் பார்த்துவிட்டால், எவருக்கும் அந்தச் சோற்றைத் தின்னவே பிடிக்காது. ஒரு இரும்புப் பலகையின் மீது வரிசை வரிசையாக கில்லைகளைப் பரப்பி வைத்து, பலகையின் இரு ஓரங்களிலும் இரு கம்பிகளைக் கட்டி, நான்குபேர் அந்தப் பலகையைத் தூக்கி வருவார்கள். அம்மாதிரி தூக்கி வரும்போது நோக்கினால், அசல் பிணத்தைத் தூக்கி வருவதுபோல் இருக்கும். ஆமாம்! அந்தச் சோற்றை ஒரு சலவைச் சல்லாவால் போர்த்தியு மிருப்பார்க ளென்பதைச் சொல்ல மறந்துவிட்டேனே!

மண்டபத்தில் சோற்றுப் பலகை வந்து இறங்கியதும், கைதிகள் தங்களிஷ்டம்போல் சென்று ஒவ்வொரு கில்லையையும் ஒவ்வொரு குவளை குழம்பையும் பெற்றுக்கொண்டு வந்துவிட முடியுமென்று எண்ணிவிட வேண்டாம். அவர்கள் வரிசையாக நின்று சோற்

றுப் பலகை இருக்குமிடத்துக்கு ஊர்வலம் செல்ல வேண்டும். ஊர்வலத்தில் முதலில் நிற்பவன் சோற்றுப் பலகையண்டை நின்று கையில் ஏந்தின தட்டை நீட்டினால், ஒரு வில்லை 'பொத்'தென்று அந்தத் தட்டில் வந்து விழும். ஒரு குவளை குழம்பும் அந்த வில்லையின் பேரில் ஊற்றப்படும். அந்தக் குழம்பின் நிறமும், அதன் மணமும், அதை ஊற்றும்போது மண்டையவ்வளவு பருமனுக்குப் பொத்துப் பொத்தென்று காய்கள் வந்து விழுந்து குழம்பைச் சிதறச் செய்யும் அழகும், அகோரமாகப் பசியெடுத்தவனுக்குங்கூடப் பசியை அணைத்துவிடும்.

வரிசையில் முதலிலே சென்றவன் மேற்சொன்ன மாதிரி நின்று தன் வில்லையைப் பெறும்போது, அவனுக்குப் பின்னால் வரிசையாக இருப்பவர்கள் நின்றுகொண்டே யிருக்கக் கூடாது; கால்மேல் காலைப் போட்டுக்கொண்டு உட்கார்ந்துவிடவுங் கூடாது. குந்திக்கொண் டிருக்க வேண்டும். முதலில் சென்றவன் தன் உணவைப் பெற்றுக்கொண்டு வந்த வழியே திரும்பிச் சென்றுவிடுவான். இப்பொழுது இரண்டாவது கைதி எழுந்து சோற்றுப் பலகையண்டை சென்று நிற்பான். இதற்குள் இரண்டாவது கைதிக்குப் பின்னால் உள்ளவர்கள் எழுந்து நடந்து வந்து, சோற்றைப் பெற்றுக்கொள்ளும் கைதிக்குப் பின்னால் முன்போலவே குந்திக்கொள்ள வேண்டும். இம்மாதிரியான அனுஷ்டானத்தில் ஒரு விசேஷக் காட்சி யிருக்கிறது. இவ்வளவு வியர்த்தமாக இந்த

அனுஷ்டானத்தை வர்ணனை செய்வதன் நோக்கம் அந்த விசேஷக் காட்சியை வாசகர் ரசிக்கும் பொருட்டுத்தான்.

வரிசையில் முதலில் சென்றவன் அதிர்ஷ்டசாலி. இரண்டாவது செல்லுகிறவன் ஒரு தடவை உட் கார்ந்து எழுந்து நிற்கவேண்டும். வரிசையில் மூன்று வது கைதி இரண்டு தடவை உட்கார்ந்து உட்கார்ந்து நிற்கவேண்டும். இதேமாதிரி, வரிசையில் கடைசியாக வரும் துரதிர்ஷ்டம் பிடித்த கைதி எத்தனை தடவை தோப்புக்கரணம் போட நேரும் பாருங்கள்! இது தான் மேலே பிரஸ்தாபித்த விசேஷக் காட்சி. வரிசையில் கடைசியாகச் செல்லும் கைதி உபவாச மிருந்து விடலாமா என்றுகூட நினைப்பான். ஆனால் சிறையில் உபவாசமிருக்கவும் முடியாது. உபவாச மிருப்பது சிறை விதிகளுக்கு விரோதமானது. உண்மை தான்! அந்தத் துர்நாற்றக் குழம்புச் சோற்றைத் தினம் இரு வேளையும் சாப்பிடவேண்டு மென்று தண் டனை விதிக்கப் பெற்றிருக்கும்போது, ஒரு பொழு தேனும் அந்தத் தண்டனையினின்று மீண்டுவிடப் பிர யத்தனம் செய்பவனை அதிகாரிகள் சும்மா விட்டு விடலாமா?

சிறையில் கொடுக்கப்படும் சோற்று வில்லையை விண்டால், அதில் அரிசிச் சாத மிருப்பதோடு, கல்லும் மண்ணும் உமியும் ரோமங்களும், சில சமயங்களில் இறந்துபோன ஜீவராசிகளுங்கூட, இருக்கும். அதைப் பார்த்தவுடன் பிரமித்துவிடக் கூடாது. வீட்டில் இலை

அடியில் உட்கார்ந்து சாப்பிடும்போது தற்செயலாக ஒரு சிறு கல்லைக் கடிக்க நேர்ந்துவிட்டால், பெற்ற தாயையும் கட்டின பெண்டாட்டியையும், எத்தனை தடவை 'வெள், வெள்'ளென்று விழுந்து பிடுங்கி யிருப்போம். அந்த அபசாரத்துக்குப் பிராயச்சித்த மாக இருக்கட்டுமென்று, கைதிகளின்மீது கருணை கூர்ந்தே, சிறைக்குச் சாமான்கள் 'சப்ளை' செய்யும் கண்டிராக்டரும் மளிகைக் கடைக்காரனும் சிறையி லுள்ள சிப்பந்திகளுமாகச் சேர்ந்து, ஆளுக்கு ஒரு கை கல், மண், உமி முதலிய பண்டங்களை அரிசியுடன் கலந்து, அந்த அளவுக்கு அசல் அரிசியைச் சுயப் பிரயோஜனத்துக்கு ஸ்வீகரித்துக்கொள்ளுகிறார்கள்! இந்தத் தத்துவத்தைக் கைதிகள் உணர்ந்து, சாதத்தி லுள்ள கல்லையும் மண்ணையும் ரோமங்களையும் கூடிய வரையில் விலக்கிவிட்டு, தட்டில் ஊற்றியுள்ள குழம் பில் சோற்றைக் கரைத்துக் கரைத்து, பகவானுடைய நாமத்தை ஸ்மரித்துக்கொண்டே, ருசி பாராமல் விழுங்கிவிட வேண்டும்.

கல்லும் மண்ணும் உமியும் அரிசியுடன் கலந்த விதத்தைத் தெரிவித்தேனல்லவா? ரோமம் வந்த விதம் எப்படி என்ற பிரச்னை எழக்கூடும். சிறையில் ஒவ்வொரு கைதிக்கும் ஒரு கம்பளம் கொடுப்பார் கள். 'நின்றால் குடையாம்; இருந்தால் சிங்காசன மாம்' என்று ஒரு ஆழ்வார் ஆதிசேஷனது வைபவத் தைக் குறித்துப் பாடினதுபோல, சிறையில் கொடுக் கும் கம்பளமானது குளிர்ந்தால் போர்வையாம்;

படுக்க விரிப்பாம்; தலைக்குத் தலையணையாம். இந்தக் கம்பளத்தைப் பிரித்து உதறவேகூடாது. உதறினால் அதிலுள்ள ரோமங்கள் உதிர்ந்து பரவும். அந்த ரோமங்களுக்கு அறிவும் உணர்ச்சியும் உண்டோ என்னவோ தெரியவில்லை. அவை யனைத்தும் எவ்வாறோ நமது கொட்டடியிலிருந்து புறப்பட்டு, சமையல் கூடத்தில் நமக்காகத் தயாராகும் சோற்றிலே போய்ப் புகுந்து விடுகின்றன. இதுதான் அரிசியில் ரோமம வந்தவிதம்.

சிறையில் கொடுக்கப்படும் கம்பளத்தில் அநேகமாக ஒருவிதமான பூச்சிகள் இல்லாம லிருக்கமாட்டா. அந்தக் கம்பளத்தைத் தொட்டால், அதில் 'பிசு பிசு' வென்று எண்ணெய்ப் பிசுக்கு இருப்பதுபோல் தோன்றும். எத்தனையோ கைதிகள் போர்த்திக் கொண்டு அவர்களுடைய உடல் வியர்வையும் அழுக்குமெல்லாம் அதில் ஊறியிருக்க வில்லையா? இப்பேர்ப்பட்ட கம்பளத்தைக் காங்கிரஸ் கைதிகள் என்ன செய்தார்கள் தெரியுமா? அவற்றைச் சுருட்டி ஒரு மூலையிலே பத்திரமாக வைத்திருந்து, விடுதலை யாகும் போது சிறை யதிகாரிகளிடம் நலுங்காமல் திருப்பிக் கொடுத்து விடுவார்கள்.

மேலே தெரிவித்த சங்கடமான அனுபவங்களையெல்லாம் இங்கே நான் பிரஸ்தாபம் செய்வதற்கு ஒரு காரணம் இருக்கிறது. அது என்னவெனில், இவ்வளவு சங்கட மிருந்தபோதிலும சிறையில் சில நண்பர்கள் வெகு உற்சாகமாகவே இருந்தார்கள். என்னுடைய

நண்பர் ஒருவர்—அவர் பெண்ணாகப் பிறந்திருக்க வேண்டுமென்று நான் பல முறை எண்ணியதுண்டு—எங்களுக்குத் தாய்போல் இருந்தார். சிறையில் கொடுக்கும் சோற்று வில்லையை ஒரு மனிதன் பூரணமாகச் சாப்பிட முடியாது. நாங்கள் பாதி வில்லையைச் சாப்பிட்டு விட்டு மிகுந்ததை அந்த நண்பரிடம் கொடுத்து விடுவோம். அவர் அதை வாங்கி, ஒரு மண் கலயத்தில் போட்டுத் தண்ணீர் விட்டு வைப்பார். காலையில் எழுந்திருந்ததும் நாங்கள் அந்த நண்பரைச் சுற்றி உட்காருவோம். அவர் அந்தப் பழையதை நன்றாகப் பிசைந்து கவளம் கவளமாக எங்கள் கையில் இடுவார். கொஞ்சம் புளிப்பு ஏறிய அந்தச் சோற்றை, நாங்களும் பேசிக்கொண்டே ஒரு மூச்சுப் பார்த்துவிடுவோம். அவரைப் போன்ற சில நண்பர்கள் சிறையில் இருந்தால், 'சி' வகுப்பாக இருந்தாலும் லட்சியமில்லை; அதற்கும் கீழான வகுப்பாக இருந்தாலும் பயமில்லை. அப்பேர்ப்பட்ட நண்பருடன் நான் நரகத்தில் இருந்தாலும், எனக்கு அது நரக வாசமாக இருக்காது ; சொர்க்கபோகமாகவே யிருக்கும்.

மேலே பிரஸ்தாபம் செய்துள்ள நண்பருக்கு எங்களிடம் எவ்வளவு பட்சமென்பதைச் சொன்னேன் அல்லவா ? எங்களுக்கு அவரிடம் எவ்வளவு பட்சமிருந்த தென்பதையும் ஒருவாறு தெரிவிக்கிறேன். அந்த நண்பர் நிறையப் புத்தகங்கள் படித்தவர். ரசமான கதைகள் சொல்லுவார் ; அரசியல் துறையில் நிகழ்ந்த ருசிகரமான சம்பவங்களையும்

சொல்லுவார். தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டிக் காரியா லயத்தில் பிரதான உத்தியோகத்தில் இருந்தவர் ஆகை யால், அவருக்குத் தலைவர்களுடைய பரிச்சயம் அதி கம். அவர் சொல்லும் விஷயங்களைக் கேட்கக் கேட்க ருசிகரமாகவே இருக்கும். ஆனால், அவருக்கு ஒருவித சுபாவ மிருந்தது. அதுதான் நம்மால் சகிக்கமுடி யாதது.

அது என்னவெனில், அவர் பேசும்போது இரண்டு சொல்லுக்கு ஒருதரம் இடை இடையே ஒரு 'என்ன' என்னும் சொல்லையும் புகுத்தியே பேசுவார். ஒரு விஷயத்தைப் பூராவும் சொல்லி முடிப்பதற்குள் அவர் பிரயோகித்த பிரயோஜனமான சொற்களையும் எண்ணி, 'என்ன' என்ற சொல்லையும் எண்ணிப் பார்த்தால், இரண்டும் சரி சமானமாகவே இருக்கு மென்று நான் நினைக்கிறேன். ஆனால், ஒரு அதிசய மான சம்பவம் இப்போது நிகழ்ந்தது. அதையும் இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்து விடுகிறேன். அந்த நண்பர் சமீபத்தில் வானொலி மூலம் பேசினார். 'என்ன' என்ற சொல்லை அப்படி அநாவசியமாக ஒரு தடவை கூட உபயோகிக்க வில்லை. அவர் அம்மாதிரி பேசியதை ஹடயோக சாதகமென்றே நான் கருதுகிறேன். நான் சொல்ல வந்த விஷய மென்னவெனில், சிறையில் இருந்த நண்பருடைய 'என்ன' என்ற சொல்லின் தொந்திரவை நாங்கள் சகித்துக்கொண்டோம். எங் களுக்கு அவர் மீது இருந்த பட்சத்துக்கு இதுவே அடையாளம்.

மனித சுபாவம் எல்லோருக்கும் ஒரேமாதிரியாக இருப்பதில்லை யல்லவா? சிறைக்குள்ளேயும் சரி, சிறைக்கு வெளியேயும் சரி, மனித சுபாவம் மனிதனுக்கு மனிதன் வேறுபட்டிருப்பது இயற்கையாகும். சிறைக்குள் சாத்வீகர்களும் இருந்தார்கள்; தாமஸ சுபாவம் வாய்ந்தவர்களு மிருந்தார்கள். ஒருநாள் கோயமுத்தூர் நண்பர்கள் இருவர் சண்டையிட்டுக் கொண்டார்கள். வாய்ச் சண்டை முற்றிற்று; கை கலந்து விட்டார்கள். சண்டை மேலும் முற்றிற்று. அதில் ஒரு நண்பர் ஒரு மண் சட்டியை எடுத்து மற்ற நண்பரின் மண்டையில் மோதினார். மண் பாண்டம் உடைந்த சத்தத்தைக் கேட்டு, நாங்கள் சண்டை நடந்த இடத்துக்கு ஓடினோம். நாங்கள் செல்வதற்குள் சண்டை ஓய்ந்துவிட்டது. "என்ன நடந்தது?" என்று, என் பக்கத்து அறையிலிருந்த ஸ்ரீ நரசிம்மனை (ராஜாஜீ குமாரர்) கேட்டேன். "ஒரு நண்பருடைய தலையின் உதவியால் ஒரு மண்பாண்டம் உடைந்தது" என்று அவர் பதில் கூறினார். நாங்கள் எல்லோரும் சம்பூர்ணமாகச் சிரித்தோம். சற்று நேரத்துக்கு முன் சண்டையிட்ட நண்பர்களும் இந்த ஹாஸ்யத்தை அனுபவித்தார்கள்; அவர்களும் சாந்தமடைந்து, எங்கள் சிரிப்பிலே பங்கெடுத்துக் கொண்டார்கள்.

# 4. ஆசார அனுஷ்டானங்கள்

சிறைக்குச் செல்லும் அரசியல் வாதிகள் சிறை சம்பந்தமான சில ஆசாரங்களையும் அனுஷ்டானங்களையும் தெரிந்துகொண்டு செல்வது நலம். சிறையிலே ஆசாரமும் அனுஷ்டானமும் இருக்கின்றனவா என்ன என்று அதிசயப்பட வேண்டியதில்லை. ஒவ்வொரு ஸ்தாபனத்துக்கும் பிரத்தியேகமாகச் சில ஆசாரங்களும் அனுஷ்டானங்களும் இல்லாமலிருக்க முடியாது. சிறையிலுள்ள கைதிகள் சிறை அதிகாரிகளுக்குத் திருப்திகரமாக நடந்துகொண்டால், சிறைவாசத் தண்டனைக் காலத்திலிருந்து ஒரு மாதத்துக்கு நான்கு நாட்கள் விகிதம் அவர்களுடைய சிறைத் தண்டனைக் காலத்தில் கழித்து விடுவார்கள். இதற்கு 'மார்க்கு' என்று சிறையிலுள்ள கிரிமினல் கைதிகள் சொல்வார்கள். கைதிகளை அடக்கி வைக்க, இது ஒரு நல்ல உபாயம். இந்த மார்க்கைப் பூர்ணமாய்ப் பெறுவதற்காக, அதிகாரிகளிடம் கிரிமினல் கைதிகள் இச்சகம் பேசுவார்கள். பள்ளிக்கூடத்தில் படிக்கும் மாணவன் தனக்கு 'மார்க்கு' குறைந்து விடுமென்று வாத்தியாரிடத்தில் எவ்வளவு அச்சப்படுவானோ, அதேமாதிரியே கிரிமினல் கைதிகளும் சிறை உத்தியோகஸ்தர்களிடம் அச்சப்பட்டு, அவர்கள் இட்ட வேலைகளை ஒழுங்காய்ச் செய்து கொண்டிருப்பார்கள்.

கிரிமினல் கைதிகள் ஏதாவது குற்றம் செய்து விட்டால், அவர்களுக்கு எப்பேர்ப்பட்ட தண்டனை விதித்தாலும் லட்சியம் செய்யமாட்டார்கள். இந்த 'மார்க்கு' இருக்கிறதல்லவா? இதற்குக் கிரஹணம் பிடிக்கிறதென்றால் மட்டில், நடுங்கிப் போவார்கள். இந்த ரகசியத்தை அறிந்த உத்தியோகஸ்தர்களும், "ஏண்டா, மார்க்கு வாயிலே மண் விழணுமோ?" என்று அடிக்கடி மிரட்டுவார்கள். பத்து வருஷ காலம் சிறைவாசத்தை அனுபவிக்கத் தயாராக இருக்கும் ஒரு கைதி, 'கூட ஒரு வருஷம் தண்டனையை அனுபவித்தால் என்ன குடிமுழுகிப் போகிறது' என்று எண்ணிச் சிறை அதிகாரியை எதிர்க்கத் துணிய மாட்டான்.

நீதிமன்றத்தில் ஆயுள் தண்டனை விதிக்கிறார்களே தெரியுமா? அந்த ஆயுள் தண்டனையைப் பெற்று வரும் ஒரு கைதி சிறைச்சாலையின் வாயிற்படியைத் தாண்டின மறுநிமிஷம், அவன் பெற்ற தண்டனையில் நான்கு வருஷம் கழிந்துபோகும். இது ராணி விக்டோரியா அளித்த தானமாம். இதற்கு 'ராணி மார்க்கு' என்று கைதிகள் சொல்வார்கள். இந்த 'ராணி மார்க்கு' ஒவ்வொரு நீண்டகாலத் தண்டனைக் கைதிக்கும் கிடைத்தே தீரும். இதற்காகக் கைதி தவமிருக்க வேண்டிய அவசிய மில்லை; உத்தியோகஸ்தர்களை ஸ்தோத்திரம் செய்யவேண்டிய அவசியமு மில்லை.

சிறைக்குள்ளே கைதிகளுக்குத் தலையணை கொடுக்க மாட்டார்கள். இரவு படுத்துத் தூங்கும்

போது, தன் கையே தனக்குத் தலையணை. ஒரு கல்லைத் தலைக்கு வைத்துக் கொள்ளலாமென்று நினைத்துக் கல்லைச் சிறை அறைக்குள் ஒரு கைதி எடுத்து வைத்துக் கொண்டிருப்பதை அதிகாரிகள் பார்த்து விட்டால், நன்னடத்தை மார்க்குக்கு ஆபத்து வந்து விடும். கல்லைத் தலையணையாக உபயோகிப்பதில் சிறை அதிகாரிகளுக்கு என்ன நஷ்டம் என்றுதான் நமக்குத் தோன்றுகிறது. ஆனால், அதிலே ஒரு ரகஸ்யம் இருக்கிறது.

சிறைக்குள் இருக்கும் கைதிகளின் சுகாதாரத்துக்கும் பிராணனுக்கும் சிறை அதிகாரிகளே ஜவாப்தாரிகளாம். ஆகவே, கைதிகள் கல்லைச் சாதனமாகக் கொண்டு நள்ளிரவில் தற்கொலை செய்து கொண்டால் என்ன செய்வது? அவர்கள் தற்கொலை செய்துகொள்ளாமல் காக்கும் பொருட்டுத்தான், கல், கயிறு, கத்தி, கம்பு முதலிய சாமான்கள் எதையும் வைத்திருக்கக் கூடாதென்று சிறையில் விதி செய்திருப்பதாக அதிகாரிகள் கூறுகிறார்கள். ஆனால் கைதிகள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா? "அதிகாரிகளுக்கு எங்களிடம் திகில். அவர்களைக் கல்லால் அடித்து விடுவோம் என்று பயந்து, எங்களை நிராயுதபாணிகளாக வைத்திருக்கிறார்கள்" என்றே சொல்லுகிறார்கள்.

கைதிகளைச் சிறையிலுள்ள வார்டர்கள் மிரட்டுவதை நான் பார்த்திருக்கிறேன். கையில் தண்டாயுதம் ஏந்தி நாய் அடிப்பவன் நாயைத் துரத்திச் செல்

வது போலத்தான், கைதிகளை வார்டர் மேய்ப்பான். 1921-ஆம் வருஷத்தில் சிறைக்குச் சென்ற அரசியல் கைதிகளையுங்கூட மேற் சொன்னவாறே வார்டர்கள் மேய்த்தார்களாம். ஆனால், இப்பொழுது, அரசியல் கைதிகள் சம்பந்தப்பட்ட மட்டில், அவ்வளவு அட்ட காசம் நடப்பதில்லை. இந்த மாறுதலுக்குக் காரணம் என்ன? அரசியல் கைதிகளிடம் வார்டர்களுக்குக் காதல் ஏற்பட்டு விடவில்லை. அரசியல் கைதி கள் கண்ணியமானவர்கள், அவர்கள் மூர்க்கத்தன மாக நடந்துகொள்ள மாட்டார்கள் என்பதை வார் டர்கள் தெரிந்து கொண்டார்கள். இப்பேர்ப்பட்ட நம்பிக்கை கிரிமினல் கைதிகளிடம் அவர்களுக்கு உண்டாகவில்லை. கிரிமினல் கைதிகளின் மூர்க்கத் தனத்துக்குப் பயந்தே, வார்டர்களும் மூர்க்கத் தனமாக நடக்கிறார்கள்.

திருச்சிச் சிறையில் நாங்கள் இருந்தபோது, ஒரு துக்ககரமான சம்பவம் நடந்தது. அந்தச் சமயத்தில் ஒரு வார்டர் நடந்துகொண்ட விதத்தை நாங்கள் பார்த்தபோது, அவனுக்குக் கைதிகளிடம் எவ்வளவு அச்சமென்பதைத் தெரிந்துகொண்டோம். ஒரு நாள் இரவு தனி அறையில் அடைத்துப் பூட்டிவைக்கப் பட்டிருந்த கிரிமினல் கைதி ஒருவன், பூலோக வாசத்தைத் தியாகம் செய்து விண்ணுலகம் ஏகுவ தென்று தீர்மானித்துக்கொண்டான். ஒருவருக்கும் தெரியாமல், அவன் ஒரு துண்டுக் கயிற்றைத் தேடி எடுத்து மறைத்து வைத்துக் கொண்டான். இரவு

நேரத்தில் எல்லோரும் தூங்கும் சமயத்தில் அந்தக் கயிற்றை இரும்புக் கதவின் உச்சியில் கட்டிச் சுருக்குப் போட்டுக்கொண்டு இறந்து விட்டான். அவனுடைய சவம் தொங்கிக் கொண்டிருந்த மாதிரியைப் பாருங்கள். வார்டர் எப்பொழுது வந்து கதவைத் திறப்பான் என்று ஆவலுடன் கதவண்டை நின்று காத்திருப்பவன் போல இருந்தது அவனது சவம் தொங்கிய கோலம். அவனுடைய கால்கள் பூமியில் படாமல் இருந்ததையும் அவனுடைய கழுத்தில் கயிறு இருந்ததையும், கதவுக்கு வெளிப்புறத்தி லிருந்து பார்க்க முடியவில்லை.

இந்தக் கைதியின் அறையைத் திறக்க, வார்டர் வந்தான். கைதி கதவோடு கதவாக ஒட்டிக்கொண்டு நிற்பதைப் பார்த்ததும், "அடே, ஏண்டா இப்படி நிற்கிறாய்? தள்ளி நில்; கதவைத் திறக்கவேண்டும்" என்று மிரட்டினான். கைதி பதில் சொல்லாமல் நிற்பதைப் பார்த்ததும், வார்டருக்குத் திகில் அதிகமாகி விட்டது. "உனக்கு இன்றைக்கு என்னடா கேடு காலம்? தள்ளி நிற்கப் போகிறாயா இல்லையா?" என்று மீண்டும் அதட்டினான். கைதியோ அசைய வில்லை. "அடே, உனக்கு இவ்வளவு திமிரா? உன் திமிரை அடக்கி விடுகிறேன்" என்று உறுமி விட்டு, வெகு ஜாக்கிரதையாகக் கதவுக்கு வெகு தூரத்தில் நின்றுகொண்டு, கையை நீட்டித் திறவு கோலை விட்டுப் பூட்டைத் திறந்து, கதவையும் வேக மாக உட்புறம் தள்ளினான். "பயலே, வா வெளியே"

என்று கத்தினன். ஆனல், கைதியின் உடல், கத வோடு கதவாக நகர்ந்து சென்றது! இதைப் பார்த்ததும் வார்டருக்கு ஏதேதோ சந்தேகங்கள் தோன்றத் தொடங்கின. ஊதுகுழலை ஊதினன். திடுதிடு வென்று பத்துப் பதினைந்து வார்டர்கள் ஓடிவந்தார்கள். கடைசியிலே, கைதி தற்கொலை செய்து கொண்டதைக் கண்டுபிடித்து விட்டார் கள். வார்டர்களுக்குக் கைதிகளிடம் எவ்வளவு பயம் என்பதை நாங்கள் திருஷ்டாந்தமாகப் பார்த் தோம்.

மனிதனைக் கண்டு பாம்பு பயப்படுகிறது. பாம் பைக் கண்டு மனிதன் பயப்படுகிருன். பாம்பு மனித னைக் கடித்தால் மனிதன் இறப்பது போலவே, மனித னும் பாம்பைக் கடித்தால் பாம்பும் இறந்துவிடுமாம். சிறைக்குள்ளே, வார்டர்களுக்குக் கைதிகளிடம் பயம்; கைதிகளுக்கு வார்டர்களிடம் பயம். இம்மாதிரி யான பரஸ்பர பயத்தோடுதான் சிறை நிர்வாகம் நடைபெறுகிறது. ஆனல், யதார்த்தத்தில் கைதிகளை மூர்க்கர்கள் என்று சொல்லிவிட முடியாது. திருச்சிச் சிறைக்குள்ளே தூக்குப்போடும் காரியத்தைச் செய்ய ஒரு ஆயுள் தண்டனைக் கைதி நியமிக்கப்பட்டிருந் தான். அவனேடு நான் பேசியிருக்கிறேன். ஆமாம், சிறைக்குள்ளே தூக்குப் போடும் வேலைக்குக் கைதி களைத்தான் பிரயோஜனப் படுத்திக் கொள்கிருர்கள். தூக்கிடும் வேலையைச் செய்யும் கைதிக்குக் கூலியும் உண்டு.

அது மாத்திரமல்ல. அந்த வேலையைச் செய்ப வன் சுய அறிவோடு இருந்தால் மற்றொரு மனிதனைக் கொல்லச் சம்மதிக்கமாட்டான் என்பதற்காக, இர விலே அவனுக்குப் பிராந்தியை நிறைய ஊற்றுவார்கள். பிராந்தி மயக்கத்தில், பொழுது விடியுமுன், பாதி இரு ளில், அந்தக் கொடிய வேலையை அவன் செய்து முடிப் பான். "தூக்கு மேடையில் சாகிறவன் அச் சமயம் கை கால்களை உதைத்துக்கொண்டு தவிப் பதை நீ பார்த்திருக்கிறாயா?" என்று, தூக்கிடும் கைதியை நான் ஒரு சமயம் கேட்டேன். "அந்தக் கோரத்தை யாரால் பார்த்துச் சகிக்கமுடியும்? அந்தப் பக்கம் திரும்பிப் பார்க்காமல், பலகையைத் தட்டிவிட்டு ஓடிவந்து விடுவேன்" என்று அவன் சொன்னான்.

சிறைக்கு வெளியே கொலை செய்தால், கொலை யாளிக்கு நீதிபரிபாலன அதிகாரிகள் தூக்குத் தண் டனை விதிக்கிறார்கள். ஆனால், சிறைக்குள்ளே அந்தச் சர்க்காரின் அதிகாரிகளே, பிராந்தி அளித்து, உபசாரம் செய்து, கூலி கொடுத்து, ஒருவனை மற் றொருவன் தூக்கிடச் செய்கிறார்கள்! இது விசித்திர மாகத் தோன்றவில்லையா? ஆனால், வெளியே கொலை செய்வது சுய லாபத்தைக் கருதி; உள்ளே செய் வதோ சமூக நன்மைக்காக, சர்க்காரின் ஆக்ஞையை முன்னிட்டு. இந்தத் தத்துவம் நமக்குத் தெரிந்திருந் தும், மனது சமாதானப்படவில்லை. ஆண்டவன் செய்த சிருஷ்டியை அழிக்க, தனி மனிதனுக்கும்

சரி, மக்கள் பலர் சேர்ந்த கோஷ்டிக்கும் சரி, மக்களால் நடத்தப்படும் சர்க்காருக்கும் சரி, அதிகாரமில்லை. சிருஷ்டிக்கும் திறமை இல்லாதவர்களுக்குக் கொலை செய்ய அதிகாரம் ஏது?

---

# 5. வைத்திய விமரிசை

திருச்சிச் சிறையில் ஒரு வைத்தியர் இருந்தார். அவருக்குக் கண்ணியமாக நடந்து கொள்வதென்னும் விஷயமே தெரியாதென்று நாங்கள் தீர்மானித்திருந்தோம். அவருடைய போக்கைக் கண்டு, எங்களுக்குக் கோபம் ஏற்படவில்லை. ஏனென்றால், அவர் என்ன செய்வார்? கிரிமினல்களுடன் பழகிப் பழகி, அவருக்குச் சில முரட்டுக் குணங்கள் ஏற்பட்டு, அவரது பிறவிக் குணங்கள் போல் ஆகிவிட்டன. உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு அவரிடம் சிகிச்சைக்குச் சென்றாலும், "என்னடா பாசாங்கு! இது என்ன, பாலுக்காகப் போடும் வேஷமா? ரொட்டிக்காகப் போடும் வேஷமா?" என்று கேட்டுவிடுவார். சிறையில் இருக்கும் கைதிகளுக்குக் கொடுக்கும் ஆகாரத்தைப் பார்த்தாலே, குமட்டல் வரும்; மூக்கண்டை கொண்டுபோனால், குடல் வெளியே வந்து விழுந்து விடுவது போன்ற குமட்டல் வரும். இப்பேர்ப்பட்ட ஆகாரத்தைச் சாப்பிட்டே விட்டால், என்ன ஆகுமென்று நான் சொல்ல வேண்டியதில்லை. இம்மாதிரியான ஆகாரத்தை மனிதர்களுக்குத் தினம் தினம் கொடுக்கிறார்கள். பசியின் கொடுமையாலேயே, அந்த ஆகாரத்தை அவர்கள் தின்கிறார்கள். அப்படித் தின்றவர்கள், நோய் வந்ததாகப்

பாவனை செய்து, ரொட்டிக்கும் பாலுக்கும் ஏன் பறக்கமாட்டார்கள்? உடல் தத்துவ சாஸ்திரத்தைப் படித்த அந்த வைத்தியர்களுக்கு இந்த விஷயம் தெரிந்தேயிருந்தாலும், ஏனோ ஒப்புக்கொள்ள மாட்டார்கள்.

கிரிமினல்களைச் சீர்திருத்துவதற்கே அவர்களைச் சிறைப்படுத்தி வைத்திருப்பதாக, சர்க்கார் சொல்லிக் கொள்ளுகிறார்கள். குற்றம் செய்தவர்களைச் சிறையில் வைப்பதன் தத்துவம் என்ன? குற்றம் செய்ததற்காகத் தண்டனை அனுபவிக்கச் செய்யவேண்டும்; தவிர, மீண்டும் குற்றம் செய்யாதவாறு, அவர்களுடைய மனோபாவத்தையும் சீர்திருத்த வேண்டும் என்பதுதானே? சிறையில் குற்றவாளிகளுக்குத் தினம் பக்ஷண பாயசங்களுடன் விருந்து செய்து வைக்க வேண்டுமென்று நான் கூறவில்லை. குற்றவாளிகளுக்குக் கொடுப்பது கூழே யானாலும், அதை மணத்துடனும் ருசியுடனும் செய்துகொடுக்கக் கூடாதா?

அந்த வைத்தியரிடம் நானும் ஒரு நாள் செல்லவேண்டியதாகிவிட்டது. எனக்கு ரத்தக்கடுப்பு உண்டாகி, சிகிச்சைக்காக ஆஸ்பத்திரிக்குச் சென்றேன். ஒவ்வொரு நோயாளியும் தினம் அந்த வைத்தியரிடம் சென்று, கைகட்டி வாய் புதைத்து நின்று, மருந்துக்கும் ஆகாரத்துக்கும் சீட்டுப் பெறவேண்டும். "என்ன உடம்பு?" என்று அவர் கேட்பார். உடம்பு அசௌகரியங்களைச் சொல்லி முடிப்பதற்

குள், சீட்டில் மருந்தின் பெயரை எழுதி விடுவார். ஆமாம், அப்படித்தான் அவர் மருந்து கொடுப்பார். 'தலை யெழுத்துக் கெட்டியாக இருந்தால், மருந்தால் ஆகப்போகிற தென்ன?' என்று சொல்லுவதுண்டு அல்லவா? அதைச் சிறையிலே திருஷ்டாந்தமாகப் பார்த்துவிடலாம். மருந்தின் பெயரைச் சீட்டில் எழுதி யானதும், நமது வைத்தியர் தலை நிமிர்ந்து நோயாளி யின் முகத்தை நோக்குவார். "ஆகாரம் என்ன வேண்டும்? பால் வேண்டுமோ, ரொட்டி வேண்டு மோ?" என்று கிண்டல் பண்ணுவார். கிண்டல் செய்தால் செய்யட்டும். அதற்கப்புறமாவது 'பால், ரொட்டி ஆகாரம்' என்று எழுதித் தொலைக்கக் கூடாதோ! எழுதவே மாட்டார்! "பாலில்லாத, உப் பில்லாத ஜவ்வரிசிக் கஞ்சி" என்று வாயினால் பயங் கரமாகச் சொல்லிக்கொண்டு, அவ்வாறே எழுதவும் எழுதிவிடுவார். வாஸ்தவத்திலேயே ரத்தக்கடுப்பு வியாதிக்கு, பாலில்லாத, உப்பில்லாத ஜவ்வரிசிக் கஞ்சி நல்ல ஆகாரந்தான். அதை ஹித வார்த்தைகள் சொல்லி, கொடுக்கக் கூடாதோ? "இப்பொழுது கஞ்சி சாப்பிடு. நோய் தீர்ந்த பிறகு, பால் சாப்பிட லாம்" என்று ஏன் சொல்லக் கூடாது? வைத்தியர் மிரட்டுகிற மிரட்டலிலே, கஞ்சி குடிப்பதற்குப் பயந்து, வியாதியை மறைத்து, சோற்றைத் தின்று, உயிருக்கே ஆபத்து ஏற்படும்படியாக, எத்தனையோ குற்றவாளிகள் நடந்துகொண் டிருக்கிறார்கள்.

நானும் அந்த வைத்தியரிடம், எல்லோரையும்

போல், வணக்கமாகத்தான் போய் நின்றேன். அவரும் எல்லோரையும் கேட்பதுபோலவே, "என்ன உடம்பு?" என்று என்னையும் கேட்டார். "ரத்தக் கடுப்பு" என்று நான் ஆங்கிலத்தில் பதில் சொன்னேன். எனக்கு ஆங்கிலம் தெரிந்ததாகக் காட்டிக் கொண்டால், வைத்தியர் என்னைக் கண்ணியமாக நடத்துவார் என்பது என் மனதுக்குள்ளே எண்ணம். ஆனால், அந்த வைத்தியரோ எனக்கும் பயப்படக் காணோம்; என் ஆங்கிலத்துக்கும் பயப்படக் காணோம். சீட்டில் மருந்தின் பெயரை எழுதிவிட்டு, என் முகத்தை நோக்கினார். அடுத்தபடியாக என்னை அவர் என்ன கேட்கப்போகிறார் என்பது எனக்கு ஏற்கனவே தெரியும் அல்லவா? ஆகையால், கேள்வி கேட்க, அவரை நான் விடவில்லை. "வைத்தியரே, எனக்குப் பால், ரொட்டி ஆகாரம் கொடுத்துவிட வேண்டாம் என்று மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். உப்பில்லாத ஜவ்வரிசிக் கஞ்சி அல்லது வெறும் தீர்த்தம் கொடுத்தால் கூடப் போதும்" என்று சொன்னேன்.

நான் சொன்னதைக் கேட்டு வைத்தியர் திணறிப்போய் விட்டார். இம்மாதிரி எந்தக் குற்றவாளியும் அவரைக் கேட்டதில்லை. அவரால் எனக்கு உடனே பதில் சொல்ல முடியவில்லை. சத்தியாக்கிரஹத்துக்கு ஒரு சிறிய வெற்றியென்று என் மனதில் நினைத்து மகிழ்ந்தேன். கொஞ்ச நேரம் கழித்து, அவர் சமாளித்துக் கொண்டார். என்னை மீண்டும்

ஒரு முறை கடாக்ஷித்தார். 'ஜவ்வரிசிக் கஞ்சி' என்று சீட்டில் எழுதினார். "உங்களுக்கு ஆஸ்பத்திரியில் கட்டில் கொடுத்திருக்கிறார்களா?" என்று என்னை உபசாரத்துடன் விசாரித்தார். "தரையில் படுத்துக் கொள்வதுதான் எனக்குச் சௌகரியமாக இருக்கிறது. நோய் உபத்திரவத்தை அனுபவிப்பதுடன், கட்டிலில் படுத்து மூட்டைப் பூச்சியின் கடியையும் சேர்த்து என்னால் அனுபவிக்க முடியாது" என்று நான் பதில் சொன்னேன். இதைக் கேட்டதும் அவர் முகம் மலர்ந்தது. என்னை நோக்கிச் சிரித்தார். அவர் சிரித்து யாரும் பார்த்ததில்லையென்றும் இதுதான் முதல் தடவையாகச் சிரித்திருக்கிறார் என்றும், அந்தச் சிறையிலுள்ளவர்கள் பின்னால் என்னிடம் கூறினார்கள்.

சிறைக்குச் சென்ற சத்தியாக்கிரஹிகளில் பெரும்பான்மையோர் ரத்தக் கடுப்பு வியாதிக்கு உட்படாமல் தப்ப முடியவில்லை. நான் திருச்சிச் சிறையில் இருந்தபோது "வெகு பேருக்கு ரத்தக் கடுப்பு நோய் ஏற்படுவதற்குக் காரணம் என்ன?" என்று அதிகாரிகளைக் கேட்டேன். "ஆகாரத்தில் ஒன்றும் 'மிஸ்டேக்கு' இல்லை. மண்வாசிதான் காரணம்" என்று பதில் கூறிவிட்டார்கள். மிக ஆபாசமான ஆகாரத்தைச் சிறையிலுள்ளவர்களுக்குக் கொடுத்து அதன், பயனாக அவர்கள் நோய்வாயில் விழுந்த பிறகு மருந்துச் செலவு செய்வதைவிட, அந்தப் பணத்தை ஆகாரத்தில் செலவிட்டால் நோயே வராது. இந்தக்

கணக்கு சர்க்காருக்கும் தெரிந்தே இருக்கும்; ஆனால் அக்கறைதான் ஏற்படவில்லை. உண்மையில் நரகலோகம் என்ற ஒன்று இல்லையென்றாலும், ஜனங்கள் பாவம் செய்யாமலிருக்கும்படி பயப்படுத்துவதற்காக, அந்தக் கோரமான கதையை முன்னோர் எழுதி வைத்திருப்பதாகச் சிலர் கூறுகிறார்கள். அந்த விஷயம் எப்படியாவது போகட்டும். நரக லோகத்திலுள்ள கோரங்களைக் கற்பனை செய்தார்களே, அவர்கள் மனதில் எவ்வாறு அப்பேர்ப்பட்ட எண்ணங்கள் உதித்தனவென்று நான் ஆச்சரியப்படுவதுண்டு. ஆனால், சிறைவாசத் தண்டனையை அனுபவித்த பிறகு, 'நரகத்தைத் திருஷ்டாந்தமாகச் சிருஷ்டித்துக் காட்ட வல்ல மகான்கள் இக்காலத்திலேயே இருக்கும் போது, அக்காலத்தவர்கள் கற்பனை செய்ததில், அதுவும் நல்லதொரு நோக்கத்தை உத்தேசித்து அதைச் செய்ததில், ஆச்சரியமில்லை' என்றே எனக்குத் தோன்றிற்று.

# 6. கொட்டடியும் மண்டபமும்

சிறையில் 'தனிக் கொட்டடி' என்றும் 'அஸோஸியேஷன் பிளாக்' என்றும் இரண்டு வகையுண்டு. தனிக் கொட்டடி என்றால், ஒவ்வொரு கைதியையும் தனித் தனியாக வைக்கும் தனி அறைகள் என்று அர்த்தம். 'அஸோஸியேஷன் பிளாக்' என்றால், இருபது அல்லது முப்பது பேர்களைச் சேர்த்து வைத்திருக்கும் ஒரு பெரிய ஹால் என்று அர்த்தம். இவ்விரண்டில் எது சௌகர்யமானதென்று சொல்ல முடியாது. ஏனெனில், இரண்டிலும் அசௌகரியங்களும் சௌகரியங்களும் கலந்துதான் இருக்கும். ஆகவே, அவரவர் மனோபாவத்தின்படி, சிலருக்குத் தனிக் கொட்டடியில் இருப்பது சௌகரியமாகத் தோன்றலாம்; சிலருக்கு அஸோஸியேஷன் பிளாக்கில் இருப்பது சௌகரியமாகத் தோன்றலாம்.

ஏகாந்தமாக இருக்கவும் சிந்தனை செய்யவும் படிக்கவும் இஷ்டப்படுகிறவர்களுக்கு, தனிக் கொட்டடியே சௌகரியமானது. சிலருக்குக் கும்பலின் மத்தியில் படுத்துத் தூங்கவே முடியாது. குறட்டை விடுவான் ஒருவன்; உளறுவான் ஒருவன்; தூக்கத்தில் பிரசங்கம் செய்வான் இன்னொருவன். இம்மாதிரியான கோஷங்களுக்கு மத்தியில், தூக்கம் எப்படி வரும்! ஆனால், பூகம்பம் வந்து ஊர் அமர்க்களப்

பட்டாலும் ஸ்மரணையற்றுத் தூங்கக்கூடிய புண்ணிய வான்களுமிருக்கிறார்கள், அப்பேர்ப்பட்டவர்களுக்கு எந்தவிதமான பிளாக்காக இருப்பினும் பாதகமில்லை தான்.

அஸோஸியேஷன் பிளாக்கில் இன்னும் ஒரு பெரிய அசௌகரியம் உண்டு. அதை யாராலும் சகிக்கவே முடியாது. இருபது அல்லது முப்பது கைதிகளை ஒரு பெரிய பிளாக்கில் தள்ளி மாலை 6 மணிக்குப் பூட்டிவிட்டால், அடுத்த தினம் காலை 6 மணிக்குத் தான் கதவைத் திறப்பார்கள். இதன் மத்தியில் இந்த முப்பது கைதிகளும் மல ஜல உபாதைகளை அந்தக் கொட்டடிக்குள் இருக்கும் தனி விடுதியில்தான் கழிக்கவேண்டும். இரவு எட்டு மணிக்குள், அந்த இடம் நரகத்தைத் தோற்கடிக்கக் கூடிய நிலைமைக்கு வந்துவிடும். அதிலிருந்து வீசும் வாடைக் காற்றைத் தான், நித்திரை செய்யும் கைதிகள் சுவாசிக்கவேண்டும். ஆனால், நல்லவேளையாக, அந்தக் கொட்டடிகளில் காற்றோட்டம் அதிகம் இருக்காது. நாழிகை ஆக ஆக, உள்ளே யிருக்கும் துர்க்கந்தம் விடுதி முழுவதும் பரவி, மூக்கைத் துளைக்கும். மனிதருக்குத்தான் இந்தத் துர்க்கந்தம் பிடிப்பதில்லை; கொசுக்களுக்கு இது சுகந்தம் அல்லவா? ஆகவே, கொசுக்கள் அந்த ஸ்தலத்துக்கு ஏராளமாகப் படையெடுத்து வரும். சத்தியாக்கிரஹக் கைதிகளைக் கடித்துத் துன்புறுத்த வேண்டுமென்னும் எண்ணத்தோடு அவை வரவில்லை; உல்லாச சஞ்சாரம் செய்வதற்காக, அந்த நந்தவனத்

துக்கு வருகின்றன. வந்த இடத்தில், விழுந்து கிடக்கும் சத்தியாக்கிரஹிகளையும் மொய்த்து முத்தமிட்டுத் தாலாட்டுப் பாடிவிட்டுச் செல்லுகின்றன!

அஸோஸியேஷன் பிளாக்கில் உள்ள மேற் சொன்ன சங்கடங்கள் ஒன்றும் தனிக் கொட்டடியில் கிடையாது. தனிக் கொட்டடியில் தனியாக இருக்க வேண்டிய சங்கடம் ஒன்றுதான். தனிக் கொட்டடிகள் காற்றேட்டம் வாய்ந்தவையாகவும் இருக்கும். இந்த இடங்களில் இருக்க, கிரிமினல் கைதிகள் இஷ்டப்படமாட்டார்கள். தனிக்கொட்டடியில் அடைபட்டிருப்பதை, ஏதோ ஒரு பெரிய தண்டனையை அனுபவிப்பதுபோலவே, அவர்கள் கருதுவார்கள்; வேதனைப்படுவார்கள். மேலும், கொலை செய்த கைதிகளைத் தனிக் கொட்டடியில் வைப்பார்களாகையால், அவற்றில் தூக்குத் தண்டனை யடைந்த கைதிகளின் ஆன்மாக்கள் சஞ்சாரம் செய்து கொண்டிருக்குமென்பது, கிரிமினல் கைதிகளின் மூட நம்பிக்கை. ஆகவே, தனிக் கொட்டடியில் இருக்க, அவர்கள் பெரிதும் நடுங்குவார்கள்.

சத்தியாக்கிரஹம் செய்து திருச்சிச் சிறைக்குச் சென்ற எங்களில் பெரும்பான்மையோரை, தனிக் கொட்டடிகளிலேதான் வைத்திருந்தார்கள். அதை விட்டு எங்களை மாற்ற வேண்டாமென்று அதிகாரிகளை நாங்கள் வேண்டிக் கொண்டோம். அஸோஸியேஷன் பிளாக்கில் வைக்கப்பட் டிருந்தவர்கள் தங்களுக்கும் தனிக் கொட்டடி வேண்டும் என்று போட்டி போட்

டார்கள். இவ்வாறு தனிக் கொட்டடிக்கு வந்த 'கிராக்கி'யைக் கண்டு, சிறை அதிகாரிகளுக்கு அதிசயமாக இருந்தது.

கிரிமினல் கைதிகளுக்கு மனோ நிம்மதி கிடையாது. அவர்கள் குற்றம் செய்துவிட்டுச் சிறைக்கு வந்தவர்கள். அப்பேர்ப்பட்டவர்களைத் தனி இடத்தில் வைத்தால், தனிமையிலே உள்ளத்துடன் தர்க்கம் செய்ய வேண்டியவர்களாக அவர்கள் ஆகிவிடுகிறார்கள். குற்றம் செய்தவனுக்குச் சர்க்கார் விதிக்கும் தண்டனை பெரிது அல்ல; பிரதி நிமிஷமும் மனமானது, 'நீ குற்றம் செய்தவன்' என்று கண்டனம் செய்கிறதல்லவா, அதுதான் அவர்களுக்குப் பெரிய தண்டனை. அந்த மனோ வேதனையைச் சகிக்க முடியாது. அவர்கள் பத்துக் கைதிகளுடன் பேசிக் கொண்டிருக்கவோ, வேலைசெய்து கொண்டிருக்கவோ, தூங்கவோ இஷ்டப்படுவதற்குக் காரணம், தங்கள் மனத்துடன் தனியே இருக்கப் பயந்துதான். 'அஸோஸியேஷன் பிளாக்கி'ல் இருக்க அவர்கள் விரும்புவதற்கும்,முக்கிய காரணம் இதுதான். விழித்திருக்கும் காலத்தை மனோ வேதனையில்லாமல் நண்பர்களுடன் பேசிக்கொண்டே கழித்துவிட்டு, பாக்கியுள்ள காலத்தைத் தூங்கிக் கழித்துவிடலாமென்பது அவர்களது விருப்பம். சத்தியாக்கிரஹிகளுக்குத் தனிக் கொட்டடி பிடித்திருப்பதற்குக் காரணம், மனோவேதனை இல்லாமைதான்.

இந்த சந்தர்ப்பத்தில் திருச்சிச் சிறையில் நாங்கள் இருந்தபோது நிகழ்ந்த ஒரு சம்பவத்தைக்

குறிப்பிட விரும்புகிறேன். ஒருநாள் இரவு மணி 12 இருக்கும். தனிக் கொட்டடி ஒன்றில் ஒரு பாம்பு புகுந்துவிட்டது. கொட்டடிக்குள் இருந்த அந்த சத்தியாக்கிரஹியைத் தேடிக்கொண்டு அது வரவில்லை. இராக்காலங்களில் கிராமப் புறங்களில் பாம்புகள் சஞ்சரிப்பது சகஜம். சிறைப்பிரதேசத்துக்குள் சஞ் சரிக்கும் பாம்புகளில் ஒன்று மேற்சொன்ன கொட் டடிக்குள் பிரவேசித்தது. அந்தக் கொட்டடியில் இருந்த சத்தியாக்கிரஹி நண்பர், அந்தச் சமயத்தில் கண் விழித்துக் கொண்டிருந்தார். பாம்பு உள்ளே வருவதை அவர் பார்த்ததும், "பாமு! பாமு!" என்று கத்தினர். அவர் ஆந்திரர். தெலுங்கு பாஷை யில் 'பாமு' என்றால் பாம்பு. அவர் போட்ட கூச்ச லைக் கேட்டு, தனித் தனிக் கொட்டடிகளில் இருந்த நாங்களெல்லோரும் கண் விழித்தெழுந்து விட்டோம். 'வார்டர் வார்டர்' என்று நாங்களும் கத்தினோம். வார்டரும் ஓடி வந்தான். ஆனல், அவனும்தான் என்ன செய்ய முடியும்? கொட்டடிகளின் கதவுகள் பூட்டப் பட்டிருக்கின்றனவே! திருநேத்திரன் வந் தாலும் பொழுதுவிடிவதற்கு முன் கதவுகள் திறக்கப் படமாட்டா. அவனும் வெளியே நின்றபடி கூச்சல் போட்டு, கையைத் தட்டி, மிரட்டி அரட்டினான். உள்ளே இருந்த நண்பரும் தம்மால் இயன்ற மட்டும் கூச்சலிட்டார். இந்தக் கோஷங்களைக் கேட்ட பாம்பு, 'சர்க்கார் கட்டின இடத்திற்கும் பஞ்சம் வந்து விட்டதா? இவர்களின் சொந்த சொத்தை அபகரிப்

பதைப் போல் அல்லவா நினைத்துத் துரத்துகிறார்கள்?" என்று எண்ணிக்கொண்டே கோபத்துடன் செல்வது போல், கொட்டடியின் சுவர் ஓரத்திலுள்ள ஒரு சாக்கடைச் சந்தின் வழியாக வெளியே சென்று விட்டது.

கொட்டடிக்குள் பாம்பு வந்த அன்று முதல், அநேகமாக எல்லோரும் ஒரு தடி இல்லாமல் கொட்டடிக்குள் படுக்கச் செல்வதில்லை. ஆனால், சிறையில் தடி அகப்படாது. அகப்பட்டாலும், அதைக் கொட்டடிக் குள் அதிகாரிகளுக்குத் தெரியும்படி வைத்திருக்க முடியாது. ஆகவே, கொட்டடிகளுக்கு எதிரே இருந்த பல ஈச்சஞ் செடிகள் மொட்டையாகி விட்டன. அவை அனைத்தும் எங்கள் படுக்கைகளின் அடியில் பதுங்கிவிட்டன. ஆனால், ஈச்சஞ் செடிகள் மொட்டையானதுதான் மிச்சம்; பாம்பை அடிக்க வேண்டிய சந்தர்ப்பம் பின்னால் ஒருபோதும் எங்களுக்குக் கிடைக்கவே யில்லை.

மேலே கூறிய 'சொர்க்கலோக' வர்ணனைகள் அனைத்தும் 'சி' வகுப்புக் கைதிகளுக்கு உரித்தானவை. "உங்கள் வீடுகளில் இதைவிடப் பேஷான குழம்பு செய்து விடுகிறார்களா?" என்று கோபதி நாராயணசாமி செட்டியார், சென்னைச் சிறையில், ஒரு சத்தியாக்கிரஹியைக் கேட்டார். அந்தச் செட்டியார் 'சி' வகுப்புக் குழம்பைச் சாப்பிட்டுக்கொண்டு ஒரே வாரம் இருக்கட்டுமே பார்க்கலாம்! உடம்பிலுள்ள சதை பாரக் கணக்கில் கரைந்து போவதைக் காண்

பார். "பேஷான 'சி' வகுப்புக் குழம்பு" என்று சென்னைச் சிறையில் கூறினார் செட்டியார். பெல்லாரி அலிபுரம் சிறைக்கு அவர் வந்தபோது, அவருக்குப் போதும் போதும் என்றாகிவிட்டது. அவர் சிறைக்குள்ளே வந்து ஜமா பந்தி செய்துவிட்டுத் திரும்பிச் செல்லுகிற வரையில், கைதிகள் காத்திருந்தார்கள். அவர் திரும்பி வரும் மார்க்கத்தில், இரண்டு வரிசைகளாக இவர்கள் நின்று கொண்டார்கள். சுமார் 1500 கைதிகள்! இந்த இரண்டு வரிசைகளுக்கும் நடுவே ஸ்ரீ செட்டியார் நடந்து செல்லுகிறார். அவர் அந்த வரிசைகளைத் தாண்டிச் செல்லும் வரையில், கைதிகள் பரிஹாசமாகக் கோஷம் போட்டுக் காதைச் செவிடு பண்ணிவிட்டார்கள்.

'ஏ', 'பி' வகுப்புக்களில் குறையில்லை என்று சொல்வதற்கில்லை. ஆனால் 'சி' வகுப்பிலுள்ள குறைகள் ஒழியாத வரையில், 'ஏ', 'பி' வகுப்புக்களின் குறைகளும் நீங்கமாட்டா. 'சி' வகுப்புத்தர்மம் சத்தியாக்கிரஹிகளுக்கு மாத்திரம் ஒழிந்தால் போதாது; மனித ஜன்மம் எடுத்த எவனுக்கும் அது தகுந்ததன்று. சகோதர மனிதனுக்கு அப்பேர்ப்பட்ட கொடுமைகளைச் செய்ய, மனிதனாகப் பிறந்த எவனுக்கும் சுதந்திரமில்லை. மனித சமுதாயத்தின் மத்தியில் இருந்தபோது குற்றம் செய்தவர்களைச் சிறைக்கனுப்பி, அவர்களைச் சமுதாய வாழ்க்கைக்கு லாயக்கானவர்களாகச் சீர்திருத்தி அனுப்புவதற்குப் பதிலாக, சமுதாயத்துக்கு அபாயமான மிருகங்களாக்கி அனுப்புவதற்கே, 'சி'

வகுப்பு முறை சிருஷ்டிக்கப்பட்டிருப்பதாக, எங்களுக்குத் தோன்றிற்று.

விஷத்தை விழுங்கிக் கண்டத்தில் வைத்துக் கொண்டார் சிவபெருமான். அதுபோலவே சிறையில் 'சி' வகுப்புத் தண்டனையின் சித்திரவதை போன்ற சிரமத்தை, கூசாமல் விழுங்கிக் களிப்புடன் இருந்தார்கள் சில சத்தியாக்கிரஹ சிம்மங்கள். கோயமுத்தூரிலிருந்து வந்த ஸ்ரீ பாலாஜி ராவ், திருச்சிச் சிறையிலும் அலிபுரம் சிறையிலும் இருந்தார். அவர் திருச்சிச் சிறையில் இருந்தபோது, அவருக்குச் சீதக் கடுப்பு உண்டாகிவிட்டது. இதை யாரிடமும் அவர் சொல்லவேயில்லை. சர்வ சாதாரணமாக எல்லோரிடமும் பேசிக்கொண்டும் தமாஷ் பண்ணிக்கொண்டுமிருந்தார். ஆனால், அவர் சாதம் சாப்பிட்டு மூன்று தினங்கள் ஆகிவிட்டன. இந்த விஷயத்தை நாங்கள் தற்செயலாகத்தான் தெரிந்துகொண்டோம். "என்ன, சார், உங்களுக்கு உடம்பு?" என்று நான் அவரைக் கேட்டேன். "ஒன்றுமில்லை; கொஞ்சம் சீதக் கடுப்பு" என்று பதில் சொன்னார். "மருந்து வேண்டாமா? வியாதிக்குத் தகுந்த ஆகாரம் வேண்டாமா?" என்று கேட்டேன். "ஒன்றும் வேண்டியதில்லை. தானே போய்விடும். கொஞ்சம் மோர் மாத்திரம் கிடைக்க ஏற்பாடுசெய்யுங்கள்" என்று அவர் தெரிவித்தார். இப்பேர்ப்பட்ட சாத்வீகரிடம் அந்த வியாதியும் பரிதாபப்பட்டு விலகி யோடிவிட்டது.

# 7. உணவு மகாத்மியம்

சென்னைக் கொத்தவால் சாவடி மார்க்கெட்டில் காய்கறி விற்கும் கடைக்காரர்கள் மட்டில், அஸ்தமனத்துக்குப் பிறகுகூட, 'மினுக்கு மினுக்கு' என்று ஒரு மண் எண்ணெய் விளக்கை ஏற்றி வைத்துக் கொண்டு உட்கார்ந்திருப்பார்கள். வியாபாரத்துக்கு அவர்கள் வைத்திருக்கும் வஸ்துக்களோவெனில், காலையிலும் பகலிலும் வியாபாரம் செய்தவர்கள் நல்ல வஸ்துக்களாகப் பொறுக்கி எடுத்துக் கொண்டுபோனதுபோக மிச்சமுள்ள சொத்தை,புழுத்தல், அழுகல், வெம்பல் ஆகியவையாகவே இருக்கும். சென்னையில் தெருக்களின் ஓரங்களில் சிலர் குடித்தனம் பண்ணுகிறார்கள் அல்லவா? அவர்கள் சமைப்பதும் அங்கே, தின்பதும் அங்கே, தூங்குவதும் அங்கே, கலியாணமும் அங்கே, பிள்ளை பெறுவதும் அங்கே--இப்பேர்ப்பட்ட ஏழைகள் கூட, கொத்தவால் சாவடி அந்திக் கடையில் கறிகாய் வாங்கிச் சமைக்க மாட்டார்கள். அவ்வாறு இருக்க, யாருக்காகத்தான் இந்தக் கடைகளை மண் எண்ணெய்க்குக் கேடாக வைத்திருக்கிறார்கள்? சிறையில் 'பி' வகுப்புக் கைதிகளுக்குத் தினம் கறிகாய் சமைத்துப் போடவேண்டுமென்று சர்க்கார் விதி செய்திருக்கிறார்கள் அல்லவா; அவர்களுக்காகவே கொத்தவால் சாவடியில் அந்திக்

கடைகள் இருக்கின்றனவென்று எனக்குத் தோன்றிற்று.

நான் 'பி' வகுப்பிலும் இருந்திருக்கிறேன். சிறையில் 'பி' வகுப்புக் கைதிகளுக்குப் பரிமாறப்படும் காய்கறி பதார்த்தங்களைப் பார்க்கும்போது, 'இவர்களுக்குப் புழுத்தலும் அழுகலுமாகச் சிரமப்பட்டுப் பொறுக்கி யார்தான் கொடுக்கிறார்கள்!' என்று எங்களுக்கு ஆச்சர்யமாக இருக்கும். புழுத்தல் இல்லாத பதார்த்தம் சாஸ்திரத்துக்காக ஒன்றுகூடக் கிடைக்காது. க்ஷாத்திரக்காரன் பழிவாங்கும் நோக்கத்துடன் தயார் செய்த பதார்த்தங்களெனவே அவை தோன்றும்.

'பி' வகுப்புக் கைதிகளுக்குத்தான் இந்தக் குறை. 'சி' வகுப்புக் கைதிகளுக்குக் குறையே கிடையாது. பகவான் சிருஷ்டி செய்த ஜீவ ஜந்துக்களில் ஆடு ஒன்றுதான் எல்லாவிதமான தழைகளையும் பட்சபாதமில்லாமல் தின்னுமாம். ஆனால், அதுகூட, ஒரே ஒரு தழையைத் தின்னாதாம். 'ஆடு தின்னாப் பாளை' என்று அந்தத் தழைக்குப் பெயராம். சிறையிலுள்ள 'சி' வகுப்புப் 'பிராணிகள்', ஆடுகளுக்கும் கேவலமான நிலைமையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஊற்றப்படும் குழம்பில் வந்து விழும் தழைகள் நானாவிதமாக இருக்கும். ஆண்டவன் சிருஷ்டியில் உள்ள தழையில் எதுவும் 'சி' வகுப்பு 'மிருகங்'களுக்கு விலக்கு இல்லை. சிறையை அலங்காரம் செய்வதற்காக வைக்கப்பட்டிருக்கும் 'குரோ

டன்ஸ்' செடிகளின் தழைகள்கூட, 'சி' வகுப்புக் கைதிகளின் குழம்பை அலங்கரிக்க வந்துவிடும். ஆகவே, 'சி' வகுப்புக் கைதிகளுக்குக் குறை ஏது? கொஞ்சம் கொடுத்து இன்னும் கொஞ்சம் கொடுக்காமல் போனலல்லவோ, குறை ஏற்படப்போகிறது?

சிறையில் 'சி' வகுப்புக் கைதிகள் அனுபவிக்கும் சித்திரவதைகளை நோக்கும்போது, சர்க்கார் எந்தத் தத்துவத்தை லட்சியமாகக் கொண்டு இவ்வாறு ஹிம்சை செய்கிருர்களென்பது நமக்கு விளங்கவே விளங்காது. சிறைக்குள்ளே, புலால் உண்ணல், மது பானம் செய்தல், லாகிரி வஸ்துக்களை உபயோகித்தல் ஆகிய எதுவும் கூடாதென்று தடுத்திருக்கிருர்கள். ஆனல் சிறைக்குள்ளே அடைபட்டிருக்கும் கைதிகளுக்கோ, விலக்கப் பட்டிருக்கும் அந்த வஸ்துக்களிடமே மோகம் ஏற்பட்டு விடுகிறது. இது மனித இயல்பு. சுலபமாகக் கிடைக்கும் வஸ்துக்களின் பேரில் மனிதர்களுக்கு ருசி ஏற்படுவதில்லை. சத்தியாக்கிரஹிகளிலுங்கூட, சிலர் இந்தமாதிரி ஆசைகளுக்குப் பலியாகிவிட்டார்கள். வெளியே மூக்குத் தூள் போடாமலிருந்தவர்களும் பீடி பிடிக்காதிருந்தவர்களும், சிறைக்குள் ரகசியமாகப் பீடியையும் பொடியையும் தருவித்து; அவற்றை ஆனந்தமாக உபயோகித்து அனுபவித்தார்கள். சத்தியாக்கிரஹிகளே இந்தப் பாடு பட்டால், சாதாரணக் கைதிகளுக்கு எவ்வளவு வெறி பிடிக்குமென்பதை நீங்களே ஊகித்துத் தெரிந்துகொள்ள வேண்டும்.

இம்மாதிரி பொடி, பீடி வஸ்துக்களிடம் வெறி கொண்ட கைதிகள், ஒரு வேளைச் சோற்றையும் விற்று ஒரு துண்டுப் பீடியை வாங்கிக்கொள்வ துண்டு. இப் பேர்ப்பட்டவர்களுக்குச் சர்க்காரே பீடியும் பொடியும் கொடுக்க ஏற்பாடு செய்தால், எவ்வளவோ விதத்தில் நன்மை ஏற்படும். முக்கியமாக, திருட்டுத்தனமாகப் பொடியையும் பீடியையும் கைதிகள் தருவிப்பது நின்று விடும். சிறையிலுள்ள சேவகர்கள் கைதிகளின் திருட்டுத்தனத்துக்கு உடந்தையாக இருப்பதும் ஒய்ந்துவிடும்.

சிறையிலுள்ள கைதிகள் பஞ்சத்தில் அடிபட்டவர்களைப் போல் ஆகிவிடுகிறார்கள் என்பதற்குத் திருஷ்டாந்தமாக, அங்கே நடந்த சம்பவமொன்றைக் கூறுகிறேன். ஒரு நாள் எங்களோடு இருந்த நண்பர் ஒருவர்—இது அலிபுரம் சிறையில் நடந்த சம்பவம்—பகல் போஜனம் செய்துவிட்டு, சிறைப் பிரதேசத்தைச் சுற்றிவரக் கிளம்பினார். அந்த நண்பர் செட்டிமார் குலத்தில் பிறந்த வாலிபர். அவருடைய சுபாவம் ஒரு நிமிஷ நேரம் ஒரு இடத்தில் உட்கார்ந்திருக்க முடியாது; பேசாமலுமிருக்கமுடியாது. தூங்கும்போதுகூட, அவர் பேசிக்கொண்டே யிருப்பார். தினம் சிறைப் பிரதேசம் முழுவதையும் இரண்டு மூன்று தடவையாவது சுற்றி வருவது அவருடைய வழக்கம். அலிபுரம் சிறையில் சிறையைச் சேர்ந்த தோட்டமொன்று உண்டு. அந்தத் தோட்டத்தில் கத்தரிக்காய், முள்ளங்கி, கொத்தமல்லி, புதினா முதலிய

பயிர்கள் செய்யப்பட்டிருந்தன. அன்று வெளியே சென்ற நண்பர் இந்தத் தோட்டத்துக்குள் புகுந்தார். அங்கே பசுமையாக வளர்ந்திருந்த கொத்தமல்லியையும் புதினாவையும் பார்த்தபோது, அவருக்கு நாக்கில் ஜலம் ஊறிற்று. ஒரு பிடி கொத்தமல்லியைப் பறித்துக் கொண்டார்; ஒரு பிடி புதினாவையும் பறித்துக் கொண்டார். அருகே இருந்த புளியமரத்திலிருந்து கொஞ்சம் புளியங்காயையும் பறித்துக் கொண்டார். அங்கேயிருந்து சிறை உக்கிராணத்துக்குச் சென்று, உக்கிராண அதிகாரியிடம் பல்லைக் காட்டி, அவனை முகஸ்துதி செய்து, கொஞ்சம் உப்பு வாங்கிக்கொண்டார். இவற்றை யெல்லாம் ஒரு கல்லின்மேல் வைத்து, அரைத்துத் துவையல் செய்தார். அந்தத் துவையலை எங்களிடம் கொண்டுவந்து காட்டி, பச்சையாகத் தின்ருர்; எங்களுக்கும் கொடுத்தார். பச்சையாகத் துவையலைத் தின்ன வேண்டுமானால், எவ்வளவு நாக்கு செத்துப் போயிருக்கவேண்டும்?

புலால் உண்ணும் வழக்க முள்ளவர்களுக்கு மாத்திரம், சிறையில் கொஞ்சம் புலால் கொடுக்கவும் ஏற்பாடு செய்யலாம். சர்க்காருக்கு வைதீக சைவர்களின் ஆசாரத்தில் எவ்வளவு பக்தி யிருக்கிறதென்பது சிறை விதிகளைப் பார்க்கும்போதுதான் தெரிகிறது! ஆனால், உணவு விஷயத்தில்தான் அந்தப் பக்தி இருப்பதாகத் தோன்றுகிறது; ஸ்நான விஷயத்தில் மேல்நாட்டு நாகரிகத்தையே புகுத்தி யிருக்கிருர்கள். அவர்களுடைய பக்தி எப்படியாவது இருந்துவிட்டுப்

போகிறது. புலால் உண்ணும் வழக்கமுள்ளவர்களுக்குச் சிறையிலே புலால் கிடைக்காததால், அவர்கள் தவியாய்த் தவிக்கிறார்கள்; சுவரில் ஓடும் பல்லியையும் தரையில் ஓடும் எலியையும்கூடப் பிடித்துத் தின்றுவிடக்கூடிய வெறி பிடித்தவர்களாகிவிடுகிறார்கள். சில சமயம் நரபட்சணமும் செய்யத் துணிந்து விடுவார்களோ என்ற சந்தேகமும் ஏற்படுகிறது. இதில் சர்க்கார் தங்களுடைய சைவ பக்தியைக் கொஞ்சம் தளர்த்திக்கொண்டால், ஒன்றும் குடி முழுகிப் போகாது!

சில சமயம் சிறையில் கைதிகள் ஒரு ஆழாக்குத் தண்ணீரில் துணியையும் துவைத்து ஸ்நானமும் செய்துவிட்டு, அதிலேயே கொஞ்சத்தைக் குடிக்கவும் வைத்துக்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டு விடுகிறது. சர்க்கார் இப்பேர்ப்பட்ட அநாகரிகப் பழக்கத்தைச் சிறைகளில் வெகு சிரத்தையுடன் பிரயாசைப்பட்டு வளர்க்கிறார்கள்! இது மாத்திர மல்ல. காலையில் மாடுகளை வயலுக்கு ஓட்டிச் செல்வதுபோல், கைதிகளை மல உபாதை நீக்க அழைத்துச் செல்லுகிறார்கள். கைதிகள் ஜோடி ஜோடியாய் வரிசையாக நிற்கவேண்டும். "மார்ச்" என்று உத்திரவு பிறக்கும். இந்த வரிசை தப்பாமல் அளந்து அடி வைத்து நடந்து செல்லவேண்டும். கக்கூஸுக்குச் சென்றதும், "ஒன்று" என்று உத்திரவு பிறக்கும். எல்லோரும் உட்காரவேண்டும். அவர்களுக்குக் கூச்சம், சங்கோஜம் ஒன்றும் இருக்க

லாகாது. ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டு தான் உட்காரவேண்டும். "இரண்டு" என்று வார்டர் எங்கே சொல்லிவிடப் போகிருரோ என்ற திகிலுடன் உட்கார்ந்திருக்கும்போது, "இரண்டு" என்று உத்திரவு பிறந்துவிடும். அந்தச் சமயத்தில் கைதி எந்த நிலைமையில் இருந்தாலும் சரி, தண்ணீரால் சுத்தம் செய்து கொள்ளவேண்டும். "மூன்று" என்று சொன்னதும், எழுந்து நிற்கவேண்டும். மீண்டும் "மார்ச்" என்ருல், வரிசையாக நடக்கவேண்டும். இதைவிட அநாகரிகமும் ஆரோக்கிய ஹீனமும் வாய்ந்த அனுஷ்டானமுண்டா? மாடுகளைக்கூட இவ்வளவு கேவலமாக யாரும் நடத்துவதில்லையே!

திருச்சிச் சிறையிலிருந்து சுமார் 300 சத்தியாக்கிரஹிகளை அலிபுரம் சிறைக்கு மாற்றினுர்கள். நாங்கள் திருச்சிச் சிறையிலிருந்தபோது, எங்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த உடைகளைத் தினம் துவைத்துச் சுத்தமாக வைத்திருந்தோம். சிறை மாற்றத்துக்காக எங்களைத் திருச்சிச் சிறைக்கு வெளியே அழைத்துச் செல்வதற்குமுன், எங்களுடைய சிறை உடைகளையெல்லாம் அதிகாரிகள் திருப்பி வாங்கிக்கொண்டார்கள். எங்களுடைய சொந்த உடைகளை உடுத்திக் கொள்ளச் சொன்னுர்கள். ஆனுல், எங்களிடமிருந்து பெற்றுக்கொண்ட சிறை உடைகளை அவர்கள் வைத்துக்கொண்டு, அங்கேயுள்ள பழைய கைதிகள் போட்டுக் கழற்றின பழைய, கறைகள் படிந்த, துர்நாற்றம் வீசும் உடைகளை ஒரு பெரிய மூட்டை

யாகக் கட்டி, எங்களுடன் அலிபுரம் சிறைக்கு அனுப்பி வைத்தார்கள்.

எந்தப் படையும் மேக வியாதியும் உள்ள அசங்கியமான வியாதியஸ்தர்கள் உடுத்தின ஆடைகளோ அவை! அலிபுரத்திலே அவற்றை நாங்கள் அணிந்து கொள்ளவேண்டுமென்று கூசாமல் கூறினார்கள். உடை என்றால் எம்மாதிரியான உடை தெரியுமா? ஏதோ ராஜாங்க உடுப்பாக்கும் என்று நினைத்துவிடாதீர்கள். உடுக்க ஒரு அரைச் சட்டையும், உடம்புக்கு மற்றொரு அரைச் சட்டையுமே எங்களுக்கு அளிக்கப்பட்ட உடை. பலர் அணிந்து அணிந்து அழுக்கும் அழுகலும் தோய்ந்த இந்த உடையை நாங்கள் எவ்வாறு போட்டுக்கொள்வது? தேச சுதந்திரத்துக்காக இந்த நரக வேதனையையும் அனுபவிக்கலாமே என்று மனதைத் தேற்றிக்கொண்டாலும், சமாதானப்படவில்லை. இதை உடுத்திக்கொள்ள முடியாதென்று நாங்கள் கூறிவிட்டோம். நல்ல வேளையாக அந்த அலிபுரம் சிறை அதிகாரிக்கு, எங்கள் ஆட்சேபனை நியாயமென்று உறைத்தது. எங்களுடைய சொந்த உடையையே உடுத்திக்கொள்ளவும், சுத்தம் செய்த பிறகு அந்தச் சிறை உடைகளை உடுத்திக் கொள்ளவும் அனுமதி தந்தார்.

# 8. தண்ணீரிலும் கட்டுப்பாடு

சென்னை நகரத்திலுள்ள சிறைச்சாலைக்கு மாத்திரம் 'பெனிடென்ஷியரி' என்று பெயர். அதாவது, குற்றம் செய்தவன் தான் செய்த தவறை உணர்ந்து அதற்குப் பிராயச்சித்தமாகத் தண்டனையை அனுபவித்து மனச்சாந்தி பெறுவதற்காக அமைக்கப் பட்டுள்ள சிறைக்கூடம் என்பது அந்த வார்த்தைக்குப் பொருள். இந்தப் பெயரைச் சென்னையிலுள்ள சிறைச்சாலைக்கு மாத்திரமே சூட்டியிருக்கிறார்கள். மாகாணத்திலுள்ள மற்றச் சிறைகளையெல்லாம் 'சிறைச்சாலை' என்றுதான் சொல்லுகிறார்கள். சென்னை நகரத்தில் வசிக்கும் மக்கள், தாங்கள் அதிகமாக ஆங்கிலக் கிரந்தங்களைப் படித்தவர்களென்றும் விவேகம் உள்ளவர்களென்றும் தங்களைத் தாங்களே மதித்துக்கொண்டு, அநாகரிகம் வாய்ந்த நாடென்று இந்த நாட்டுக்கு இழிவு ஏற்படாமலிருக்கவேண்டிய பொறுப்பு தங்களுடைய தோள்களின்மீதே கிடப்பதாக எண்ணுகிறார்கள் அல்லவா? நகரத்தில் வசிக்காமல் கிராமப்புறங்களில் வசிப்பவர்களுக்குத் தாங்கள் 'கார்டியன்கள்' என்பதல்லவா அவர்களுடைய ஞாபகம்? அப்பேர்ப்பட்ட நகரவாசிகள் வசிக்குமிடத்தில் உள்ள சிறையை, 'சிறை' என்று சொன்னால் உலகம் நகைக்குமே

என்று அச்சப்பட்டே, அதிகாரிகள் இதற்கு 'பெனிடென்ஷியரி' என்று ஒருவேளை பெயர் வைத்திருக்கிறார்களோ என்று தோன்றுகிறது.

உண்மையில் சிறைச்சாலைகளெல்லாமே 'பெனிடென்ஷியரி'களாக இருக்க வேண்டியதுதான் நியாயம்; அதுதான் நாகரிகமுமாகும். அது ஒருபுறமிருக்கட்டும். இருக்கிற இந்த ஒரு 'பெனிடென்ஷியரி'யின் லட்சணத்தைப் பார்ப்போம். பெரிய மனிதன் என்று பெயர் வைத்துக்கொண்டு அழுக்கு நிறைந்த மனசு வாய்ந்தவர்கள் எத்தனையோ பேர்கள் இருக்கின்றனர் அல்லவா? அந்த ரகத்தில் சேர்ந்தது தான் சென்னை 'பெனிடென்ஷியரி'யும். மற்றச் சிறைகளில் இல்லாத விசேஷக் குறைகள் இச் சிறையில் இருப்பதாக நான் கூறவில்லை. எந்த விதத்திலும் இந்தச் சிறை மற்றச் சிறைகளுக்குத் தோற்றதில்லை என்றே தெரிவித்துக் கொள்ளுகிறேன். சிறை வாய்ப்பட்ட கைதிகளை மானிடத் தன்மையை இழக்கச் செய்து மிருகங்களாக்கும் அனுஷ்டானம் இந்தச் சிறையிலுந்தான் சர்வாங்கமாக நடைபெற்று வருகிறது.

திருச்சி நகரத்திலும் சென்னை நகரத்திலும் குழாய் வசதிகள் ஏதேஷ்டமாக இருக்கின்றன வல்லவா? அவ்வளவிருந்தும் இவ்விரு நகரங்களிலும் உள்ள சிறைகளுக்குள் மாத்திரம் குழாய்கள் இல்லை. கிணற்றிலிருந்து தண்ணீரைப் பம்பு மூலம் இறைத்து எடுத்துக்கொள்ளத்தான் அதிகாரிகள்

ஏற்பாடு செய்திருக்கிறார்கள். மின்சார சக்தியினால் தண்ணீரை எடுத்துக்கொள்ள ஏற்பாடு செய்திருக்கலாம் அல்லவா? அதுவுமில்லை. கைதிகள் கையினால் 'பம்பு' அடித்துத்தான், தண்ணீரைத் தொட்டிகளில் நிரப்பிக் கொள்ளவேண்டும். இம்மாதிரியான மனோபாவத்தை என்னவென்று சொல்வது? சிறையிலுள்ள கைதிகளைச் சிரமப்படுத்த வேண்டுமென்னும் கொள்கையை உத்தேசித்தே, இம்மாதிரியான அனுஷ்டானங்களை அதிகாரிகள் ஏற்பாடு செய்து வைத்திருப்பதாகத் தோன்றவில்லையா?

திருச்சிச் சிறையில் கைதிகள் குளிப்பதற்கென்று வரிசையாகத் தொட்டிகள் கட்டியிருக்கிறார்கள். இந்தத் தொட்டிகள் அரை அடி ஆழமுள்ளவை. இந்த அரை அடி ஆழத்துக்குள்ளும் இரண்டு அங்குலம் உயரத்துக்குப் பாசி படர்ந்திருக்கும். கைதிகள் கைப் 'பம்பி'னால் ஒரு மணி அல்லது இரண்டு மணி நேரம் ஜலம் அடித்து இந்தத் தொட்டிகளை நிரப்புவார்கள். 400 அல்லது 500 சத்தியாக்கிரஹக் கைதிகளும் இந்தத் தண்ணீருக்குள்ளேயே தாங்களும் குளித்து, தங்களுடைய வஸ்திரங்களையும் துவைத்துக் கொண்டு விடவேண்டும். ஒவ்வொரு சத்தியாக்கிரஹியும் அபாரச் சிக்கனப் புத்தியுடன் தண்ணீரை உபயோகித்தாலும், குளித்த பிறகு முழங்கையும் முழங்காலும் நனையாமலிருக்கும். இவ்வளவோடு சங்கடம் தீர்ந்துவிடவில்லை. பாதித் தொட்டி காலியாகும் வரையிலும், தொட்டியிலே மேலாக உள்ள தண்ணீர்

தெளிவாக இருக்கும். அதற்குப் பிறகு தண்ணீர் கலங்கிவிடும். அந்தத் தண்ணீரை எடுத்து உடம்பில் ஊற்றிக்கொள்ளும்போது, பாசியும் அடை அடையாக உடம்பில் வந்து விழும். குளிக்கப்போன சத்தியாக்கிரஹிகள் சேற்றைப் பூசிக்கொண்டதுபோல் நிற்பார்கள் !

குளிக்கும் தொட்டியில் பாசி படர்ந்திருப்பதைக் குறித்தும் குளிக்கும்போது உடம்பெல்லாம் பாசியாகி விடுவதைக் குறித்தும், நாங்கள் சிறை அதிகாரிகளிடம் புகார் செய்துகொள்ளாமல் போகவில்லை. நாங்கள் எந்த விதமான புகார் செய்தாலும், ஒவ்வொன்றுக்கும் அதிகாரிகள் 'ஜவாபு' தயாராக வைத்திருந்தார்கள். "பாசியைச் சர்மத்தில் தேய்த்து உடம்பைக் கழுவிவிட்டால், அந்தச் சர்மம் பளபளப்பாக இருக்குமே" என்று அதிகாரி பதில் சொன்னார். "இரும்புப் பாத்திரத்தில் குழம்பையும் கஞ்சியையும் தயார் செய்தால் இரும்பு வாடை அடிக்கிறதே" என்று கேட்டால், "இரும்பு ரத்த சுத்தியாயிற்றே" என்று பதில் வரும். "கஞ்சிக்கு உப்பு குறைவாக இருக்கிறது" என்று புகார் செய்தால், "உப்பைக் குறைவாகச் சாப்பிட்டால் வைராக்கிய புத்தி வளரும்" என்று உபதேசம் செய்வார்கள். இம்மாதிரியான பதில்களைச் சொல்ல, மூளையைப் பிரயோகித்து அதிகாரிகள் ஏதோ புதிதாய்க் கற்பனை செய்வதாக நினைக்கவேண்டாம். அவர்கள் கை இருப்பில் 'ரெடிமேட்' ஆக, இவைகள் இருக்கின்றன.

நாம் அவர்களைக் கேள்வி கேட்டவுடன், தங்கள் அம்பறாத் தூணியில் உள்ள இம்மாதிரியான பல அஸ்திரங்களில் ஏற்ற ஒன்றை எடுத்து எய்து விடுவார்கள்.

கிரிமினல் கைதிகள் இரண்டு மூன்று மணி நேரமே 'பம்பு' அடிப்பார்கள் என்று சொன்னேன் அல்லவா? அவர்கள் அடிக்கும் தண்ணீர் எங்களுக்குப் போதாமல் போய்விடும். நாங்களே 'பம்பு' அடித்துத் தண்ணீரை எடுத்துக்கொள்ள அனுமதி தருமாறு, அதிகாரிகளை நாங்கள் மிகப்பணிவோடு வேண்டிக்கொண்டோம். ஆமாம்! அவர்களுடைய அனுமதி இல்லாமல் 'பம்பை'த் தொடக் கூடாது. "நாம் சிரமப்பட்டு வேலை செய்வதற்குக் கூடவா அதிகாரிகளின் உத்திரவைப் பெறவேண்டும்?" என்று சிறைக்கு வெளியே இருப்பவர்கள் அதிசயப்படலாம். ஆனால், சிறை சென்று அனுபவித்தவர்களுக்கு இதில் அதிசய மொன்றுமில்லை. நாங்கள் கேட்ட இந்த வரத்தை அதிகாரிகள் கொடுத்தார்கள். அன்று முதல் நாங்களே 'பம்பு' அடித்து தண்ணீர்ப் பஞ்சத்தை ஓரளவு தீர்த்துக்கொண்டோம்.

சிறைக்குத் தண்ணீர் வசதி செய்து கொடுக்க முடியாதென்று முனிஸிபாலிடியார் சொல்வதாக, சிறை அதிகாரிகள் ஒரு சமாதானம் சொல்லக் கூடும். ஆனால், இது நொண்டிச் சமாதானமேயாகும். அதிகாரிகளுக்கு மனமிருக்குமானால், தண்ணீர்க் குழாயில் மின்சார சக்தியைப் பூட்டிவிடக் கூடாதா? மின்சார சக்தியினால் 'பம்பு' அடித்து, சிறையை வெள்ளக்

காடு ஆக்கிவிட முடியுமே? அப்படிச் செய்ய அவர்களுக்கு மனமில்லை. காரணம் என்ன? அவ்வாறு செய்துவிட்டால், கைதிகளுக்குக் கொடுக்கப்பட்டு வந்த கஷ்டமான வேலைகளில் ஒன்று குறைந்து விடுமே என்பதுதான் அவர்களுடைய யோசனை.

'பம்பு' அடியில் சத்தியாக்கிரஹிகள் வேலை செய்த காட்சியையும் கொஞ்சம் வர்ணிக்க வேண்டுமென்று விரும்புகிறேன். "நம் வேலையை நாம் செய்து கொள்வோம், வாருங்கள். முதலில் நான் 'பம்பு' அடிக்கிறேன்" என்று நண்பர் ஒருவர் முதலிலே சூரத்தனமாகச் சென்று, 'பம்பு'ச் சக்கரத்தைச் சுழற்றித் தமது மனவேகத்தைக் காட்டினார். அவர் கொஞ்சம் பலஹீனமான பேர்வழிதான். அவருக்கு உடல் சக்தியைவிட மனோ சக்தி அதிகமாக இருந்தது. அவர் ஐந்து நிமிஷங்கள் 'பம்பு' அடித்தார். அதற்குள் அவருக்குச் சுவாசம் வாங்கிவிட்டது. பம்பின் சக்கரம் சுழலும் வேகமும் குறைந்துவிட்டது. அருகிலிருந்த மற்றொருவர் அவர் மீது பரிதாபங் கொண்டு, "நீர் அடித்தது போதும்! தண்ணீர் காவேரி வெள்ளமாக ஓடுகிறது!! தள்ளி நில்லும்" என்று கூறிவிட்டு, தாம் அடிக்கத் தொடங்கினார். அதற்குப்பின், பல நண்பர்கள் மாறி மாறிப் 'பம்பு' அடித்தார்கள். சிலர் மார்வலி எடுத்தும் படுத்துக் கொண்டார்கள்.

ஒவ்வொரு சிறையைச் சுற்றியும் கட்டப்பட்டிருக்கும் மதில் சுவரையும் அந்தச் சிறைக்குள் நடக்-

கும் அனுஷ்டானங்களையும் நோக்கினால், சிறை என்பது கைதிகளை ஹிம்சை செய்வதற்கென்றே நிர்மாணிக்கப்பட்ட அமைப்பென்னும் எண்ணந்தான் உண்டாகிறது. அம்மாதிரியான எண்ணம் ஏன் உண்டாகாது? சென்னை நகரத்திலே ஒவ்வொரு வீட்டுக்காரரும் பம்பாய்க் கக்கூஸ்களைக் கட்டாயமாகக் கட்டிக்கொள்ள வேண்டுமென்று கார்ப்பொரேஷன் அதிகாரிகள் விதி செய்திருக்கிறார்கள். பம்பாய்க் கக்கூஸ் கட்டிக்கொள்ளாத வீட்டுக்காரர்கள் மீது கிரிமினல் பிராதும் தொடுக்கிறார்கள். ஆனால், சென்னைச் சிறைச்சாலையில் இன்னும் 18-வது நூற்றாண்டு மோஸ்தர் கக்கூஸ்கள்தான் இருக்கின்றன. சிறையில் பம்பாய்க் கக்கூஸ் கட்டுமாறு, கார்ப்பொரேஷன் அதிகாரிகள் ஏன் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லையென்பது தெரியவில்லை. ஆனால், சிறை அதிகாரிகள் ஏன் பம்பாய்க் கக்கூஸ் கட்டாமலிருக்கிறார்களென்பதற்குக் காரணம் விளங்குகிறது. கக்கூஸ் சுத்தம் செய்யும் வேலை இப்பொழுது கிரிமினல் கைதிகளுக்குக் கொடுக்கப் படுகிறதல்லவா? பம்பாய்க் கக்கூஸ் கட்டிவிட்டால், அந்த வேலையை அவர்களுக்குக் கொடுக்க முடியாமல் போய்விடுமே என்ற கவலைதான் அதிகாரிகளைப் பிய்க்கிறதென்று தோன்றுகிறது!

சிறையில் கக்கூஸ் வேலை செய்பவர்களெல்லாம் வெளியே இருந்தபோது அந்த வேலையில் பழகினவர்களல்ல. நாங்கள் திருச்சிச் சிறையில் இருந்தபோது, ஒரு கிரிமினல் கைதி கக்கூஸ் சுத்தம் செய்யும் வேலை

யில் ஈடுபட்டிருந்தான். அவன் வெகு திறமையுடன் அந்த வேலையைச் செய்து வந்தான். ஆயுள் காலம் பூராவும் அதே தொழிலில் ஈடுபட்டவன் போல் வேலை செய்தான். நான் ஒரு நாள் அவனுடன் பேசிக்கொண்டிருந்த போது, திடுக்கிடும்படியான ஒரு செய்தியைக் கேட்டேன். வெளியே அவன் விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருந்ததாகவும், சுமார் ஐம்பதினாயிரம் ரூபாய் ஆஸ்தியுள்ள தனவந்தன் என்றும் தெரிய வந்தது. அப்பேர்ப்பட்ட மனிதனைச் சீர்திருத்தும்முறை இதுதானா வென்று என் மனம் துவண்டது. தொழிலில் உயர்ந்ததென்றும் ஈனமென்றும் இல்லை, எல்லாத் தொழிலும் உயர்ந்ததுதான் என்று சொல்லும் தத்துவத்துக்கு விரோதமாக நான் வாதிப்பதாக யாரும் எண்ணக் கூடாது. தொழில் செய்வது கௌரவம் என்றும் எல்லாத் தொழில்களும் கௌரவம் வாய்ந்தவையே என்றும் கருதி, மனப்பூர்வமாகவும் உற்சாகத்துடனும் சுயேச்சையாகவும் ஒருவன் கக்கூஸ் சுத்தம் செய்தால், அதைத் தெய்வீகத்தொழில் என்று நான் கருதுவேன். ஆனால், அந்தத் தொழில் மிக இழிவான தொழில் என்று கருதி, தண்டனையளிப்பதற்காகவும் மனதை முறிப்பதற்காகவும் ஹிம்சை செய்வதற்காகவுமே அத் தொழிலைச் செய்யுமாறு, சிறையில் கைதிகளை அதிகாரிகள் கட்டாயப்படுத்துகிறார்கள். கைதிகள் சுயேச்சையாக அதைச் செய்வதில்லை. அந்தத் தோரணை தான் கண்டிக்கத் தகுந்தது.

# 9. நரகலோக தண்டனைகள்

நரக லோகத்தைக் குறித்தும் நரக லோகத்திலுள்ள தண்டனைகளைக் குறித்தும் நாமெல்லோரும் கேள்விப்பட் டிருக்கிறோம். நெருப்புத் தூண்கள், தீக் குழிகள், பாம்புகளும் தேள்களும் நிறைந்த குழிகள் ஆகியவைபோன்ற பல பயங்கரமான தண்டனை வசதிகள் நரகத்திலே நிறைந்திருப்ப தாகச் சொல்வார்கள். இப்பேர்ப்பட்ட பயங்கரமான கற்பனைகள் யாருடைய மூளையில் உதித்தனவோ என்று நமக்கு ஆச்சரிய முண்டாகிற தல்லவா? இந்தியச் சிறைகளில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் தண்டனைகளைப் பார்க்காதவரையில்தான், அப்படிப்பட்ட வியப்பு நமக்கு ஏற்படும். இந்தியச் சிறைகளில் கைதிகளைத் தண்டிப்பதற்காகத் தண்டனை முறைகளைக் கற்பனை செய்த கர்த்தாவினிடம், நரக தண்டனைக் கர்த்தா பிச்சை வாங்கவேண்டும். நரகத்தில் குழிகளைத் தோண்டி, அவற்றில் பாம்புகளையும் தேள்களையும் கொண்டு நிரப்பவேண்டும். அந்தப் பாம்புகளும் தேள்களும் தீர்க்காயுள் வரம் பெற்று வந்தவை யல்ல. அவைகள் இறக்க இறக்க, குழிகளை மீண்டும் மீண்டும் வேறு பாம்பு தேள்களைக் கொண்டு பூர்த்தி செய்துகொண்டே யிருக்க வேண்டும். இந்த உத்தியோகத்தை ஏற்பதற்கு, யாரும் இசைய மாட்

டார்கள். ஆகவே, உத்தியோகஸ்தர்கள் கிடைக்காத சங்கடம் யமதர்ம ராஜாவுக்கு அதிமாகிவிடும்.

இந்தியச் சிறைகளில் பாம்புக்குழி, தேள் குழித் தண்டனைகளுக்குப் பதிலாக, வேறு ஒன்றைச் சிருஷ்டி செய்திருக்கிறார்கள். சிறைக்குள்ளே போயும் குற்றம் செய்த குற்றவாளியை, கோணிப் பைக்குள் விட்டு வெயிலில் நிற்கவைத்து விடுவார்கள். வெயிலின் உஷ்ணத்தினால் குற்றவாளியின் உடம்பு வியர்க்கும். வியர்த்த உடம்பில் கோணிப்பையின் ஸ்பரிசம் ஏற்பட்டால், சொள்ளு சொள்ளென்று பிடுங்கும்; ஆயிரம் பாம்புகளும் தேள்களும் சேர்ந்து கடிப்பதுபோல் இருக்கும். எவ்வளவு நேர்த்தியாகக் கைதிகளுக்கு நாகரிகத்தைப் போதிக்கிறார்கள் பார்த்தீர்களா? உண்மையில் நரக மென்பது இருநதது, அங்கே தேள் குழிகளும் பாம்புக் குழிகளும் உண்டானால், அவைகள் பாவம் செய்த சாதாரண மனிதர்களுக்காக ஏற்படுத்தப்பட் டிருக்க முடியாது; பூமியில் மக்களுக்கு நரக வேதனைகளைத் தந்து அந்தக் கஷ்டங்களைக் கண்டு ஆனந்தப்படும் அசாதாரண ஜன்மாக்களுக் கென்றே ஏற்பட்டிருக்குமென எனக்குத் தோன்றுகிறது.

இரண்டு கைகளையும் உயரத் தூக்கி இழுத்து இரும்பு வளையங்களால் கட்டி விடுகிறது; அல்லது இதே மாதிரி இரண்டு கால்களிலும் இரும்பு வளையங்களை மாட்டி, கால்களைப் பரப்பிச் சுவரில் கட்டி விடுகிறது—இந்த 'ஆஸனங்களில்' அசைய முடி

யாமல், உடல்சோர்ந்து விழும்வரையில் கைதிகளை வைத்திருப்பது. இதுவும் சிறைகளிலே பிரயோகிக் கப்படும் தண்டனைகளில் ஒன்றாகும்.

இதன்றி, இருள் சூழ்ந்த தனிக் கொட்டடியிலும் கைதியைத் தள்ளிப் பூட்டிவிடுவார்கள். ஆகாரம் கொண்டு வரும் வார்டர்கூட அந்தக் கைதியுடன் பேசமாட்டான். ஆகாரத்தை உள்ளே வைப்பதற் காகவும் அவன் அந்தக் கொட்டடியின் கதவுகளைத் திறக்கமாட்டான்; சுவரில் உள்ள ஒரு துவாரத்தின் வழியாகவே ஆகாரத்தைக் கொடுப்பான். இந்தத் தண்டனைக்கு 'ஸாலிடரி கன்பைன்மெண்டு' (soli-tary confinement - ஏகாந்த அடைப்பு) என்று பெயர். இந்த மாதிரியான ரகங்களில் டஜன் கணக் கில் தண்டனைகள் சிருஷ்டித்து வைத்திருக்கிறார்கள். சத்தியாக்கிரஹிகள்கூட மேற் சொன்ன தண்டனை களில் சிலவற்றை ருசி பார்த்திருக்கிறார்கள். காந்தி சகாப்தத்துக்கு முன்பு சிறைக்குச் சென்ற பல தேச பக்தர்கள், மேற் சொன்ன தண்டனைகளில் பலவற்றை அனுபவித்திருக்கிறார்கள்.

ஆனால், இப்போது ஒரு தமாஷ் தெரியுமா? சத்தியாக்கிரஹிகள் சிறைக்குச் செல்ல ஆரம்பித்த பிறகு, 'ஸாலிடரி கன்பைன்மெண்டு' என்ற சிறைத் தண்டனையை, அவர்கள் சின்னாபின்னப்படுத்தி விட் டார்கள். காங்கிரஸ்காரனுக்கு இந்தத் தண்டனையை விதிக்கும் உத்தியோகஸ்தன் அசட்டுப்பட்டம் பெற்று விடுகிறான். அந்த மாதிரி அதை வியர்த்தமாக்கி விட்

டார்கள் சத்தியாக்கிரஹிகள். இந்த அதிசயத்தை விளக்கிச் சொல்லுகிறேன். சாதாரணக் கிரிமினல் கைதிகள் சிறைவாசத்துக்குப் பயந்தவர்கள். அவர்கள் பலவந்தமாகச் சிறைக்குள்ளே தள்ளப்பட்டவர்கள்; ஆகவே, சிறைவாசத்தைக் கண்டு, அவர்கள் நடுங்குவார்கள். ஆனால், காங்கிரஸ்காரர்கள் சுயமாகவே சிறைத் தண்டனை பெற்று வருகிறார்கள் ; ஆகவே, சிறைத் தண்டனைக்கு அவர்கள் நடுங்கவில்லை. அதை உற்சாகத்துடனேயே கழித்து விடுகிறார்கள். காங்கிரஸ்காரர்கள் சிறைக்குள்ளே வந்த பிறகு, கிரிமினல்களுடன் வசிப்பதைத்தான் சிரமமாகக் கருதுகிறார்கள். இப்பேர்ப்பட்டவர்களைத் தனிக் கொட்டடியில் போட்டால், தங்களுடைய மனோரதம் பூர்த்தியாயிற்றென்று தானே எண்ணுவார்கள்? இந்த ரகசியத்தைச் சிறையதிகாரிகள் நாளடைவில்தான் தெரிந்துகொண்டனர். பிறகு, காங்கிரஸ்காரர்களுக்குத் தனிக் கொட்டடித் தண்டனை விதிப்பதை, அவர்கள் கைவிட்டு விட்டார்கள்.

சிறைக்குள்ளே சிறகு ஒடிந்த பட்சிகளைப் போன்ற கைதிகள் மேலே குறிப்பிட்ட பயங்கரமான தண்டனைகளை அனுபவிக்கும்படியான குற்றங்களையா செய்துவிடுகிறார்கள் என்று உங்களுக்குச் சந்தேகம் தோன்றுகிறதல்லவா? சிறை அதிகாரிகளின் கண்களுக்குத்தான் அதெல்லாம் என்னவோ நியாயமென்று தோன்றுகிறது. நமது சாதாரணக் கண்களுக்கு அவற்றின் நியாயம் புலப்படவே இல்லை;

என்ன செய்வது? சிறைக்குள்ளே 'கால் பட்டால் தோஷம்; கை பட்டால் குற்றம்' என்னும் நிலைமையில் கைதிகள் இருந்துவருகிறார்கள். ஆகவே, அவர்கள் ஏதாவது ஒரு தோஷத்துக்குப் பலியாகாமல் தப்பமுடியாது. ஆனால், 'அவர்கள் செய்த குற்றத்துக்கு ஏற்ற தண்டனையை விதிக்க வேண்டாமா?' என்று நீங்கள் கேட்கலாம். சிறை அதிகாரிகள் என்ன செய்வார்கள்? கைதிகளுக்கென்று தண்டனைகள் சிருஷ்டிக்கப் பட்டிருக்கின்றனவே! அவற்றில் பெரியது சிறியது என்பதே இல்லை; எல்லாம் ஒரே நிறை.

இதுவரையில் எழுதியவை சிறையில் விதிக்கப் படும் தண்டனையின் லட்சணங்கள். சிறையில் குற்றவாளிகளுக்குக் கொடுக்கப்படும் வேலைகளின் லட்சணத்தைப் பார்த்தால், அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு தண்டனையாகவே தோன்றும். கல் உடைப்பது, செக்குத் தள்ளுவது, மாவு அரைப்பது போன்ற வேலைகளைக் கைதிகளுக்குக் கொடுப்பார்கள். கைதிகள் மாவு அரைக்கும்போது, கேழ்வரகுடன் கொஞ்சம் மண்ணையும் கலந்து கலந்து யந்திரக்கல் வாயில் போடுவார்கள். கைதிகள் அரைத்த அந்த மாவைக் கொண்டு தான் கூழ் காய்ச்சப்படுகிறது. மண்ணைப் போட்டு மாவு அரைப்பவர்களுக்கும் இந்த விஷயம் தெரிந்தது தான். யந்திரக் கல்லின் வாயில் மண்ணைப் போடுவது தங்கள் வாயில் மண்ணைப் போட்டுக் கொள்வது போலவே ஆகுமென்பதையும் அவர்கள் அறிவார்கள். ஆயினும் அவர்கள் என்ன செய்வார்கள்? அஸ்த

மனத்துக்குள் இவ்வளவு கேழ்வரகை அரைத்துக் கொடுக்க வேண்டுமென்று வார்டர் சொல்லிவிட்டானே! மாலையில் மாவு அளவு குறைந்தால் தண்டித்து விடுவார்களே என்பதற்குப் பயந்து, மண்ணைக் கலந்து அளவு காட்டிவிடுகிறார்கள். அரைபடாமல் மிகுந்த கேழ்வரகைப் பூமிக்குள் புதைத்து மூடிவிடுவார்கள். இவ்வாறு தினந்தோறும் சிறைகளில் மண் கலந்த மாவு உற்பத்தியாகி வருகிறது; நல்ல கேழ்வரகு புதைக்கப் படுகிறது. கைதியின் சக்திக்கேற்ற வேலையையே கொடுப்பதென்னும் சாதாரண தர்மத்தை அதிகாரிகள் கடைப்பிடித்தால், மேற்சொன்ன நஷ்டத்தையும் சீர்கேட்டையும் விலக்கி விடலாம்.

சிறைக்குள்ளே எந்த விஷயத்தை நோக்கினாலும், தண்டனை சொரூபமாகவே காட்சியளிக்கும். சிறையிலுள்ள ஆஸ்பத்திரியிலாவது பட்சம், பச்சாதாபம் என்னும் குணங்களைக் காண முடியுமோவென்று நினைத்தால், அங்கேயும் காணமுடியாது. சிறைக்குள்ளே கைதிகளுக்கு வைத்தியம் பண்ணுகிறவர்களும் சிறைக்கு வெளியே உள்ள வைத்தியர்கள் படித்த கலாசாலையில்தான் படித்தார்கள். பாடமும் ஒரே பாடம்தான். பாடம் கற்றுக்கொடுத்த உபாத்தியாயரும் ஒருவரேதான். வாங்கும் சம்பளத்திலும் அதிக வித்தியாசமில்லை. ஆயினும் சிறையிலுள்ள வைத்தியர்களைப் பார்த்தால், சிகிச்சை செய்பவர்களாகவே தோன்றமாட்டார்கள்; கசாப்புக் கடைக்காரர்களாகத்தான் தோன்றுவார்கள்.

சிறைக்கு வெளியே ஒரு வைத்தியனிடம் ‘தலை வலி’ என்று சொல்லிக்கொண்டு போனால், பற்களைப் பரிசோதனை செய்து பார்க்கிறான்; கண்களைப் பரிசோதனை செய்துபார்க்கிறான். “இரவு தூங்கினாயா? நேற்று என்ன சாப்பிட்டாய்? கலியாணமாகி எத்தனை வருஷமாகிறது? இன்றைக்குத் தேதி என்ன? உன் பெயரென்ன? சட்டைப் பையில் எவ்வளவு பணம் இருக்கிறது?” என்பவை போன்ற ஆயிரம் கேள்விகளைக் கேட்பான். அதன் பிறகு, “இந்த மருந்தைச் சாப்பிடு. தலைவலி நீங்கிப் போகும். ஆனால் நிரந்தரமாகத் தலைவலி நீங்கவேண்டுமென்றால், இரண்டு பற்களைப் பிடுங்கியாக வேண்டும்” என்று சொல்லி மருந்து கொடுக்கிறான். இவ்வளவு விசாரணைக்கும் பிறகு கொடுத்த மருந்தைச் சப்பிட்டால், தலைவலியும் நீங்கித்தான் போகிறது. “வைத்தியருக்கு நம்முடைய தேக ஆரோக்கியத்தில் எவ்வளவு கருத்து, பார்!” என்னும் எண்ணத்தால், ஒரு நேசமும் வைத்தியரிடம் நமக்கு உண்டாகிறது. உட்கொள்ளும் மருந்தைவிட, மேற்சொன்ன நேசமே பெரிய மருந்து. தலைவலியை நீக்குவது அதுதான்.

சிறைக்குள் இருக்கும் வைத்தியர்களோ, நோய் வாய்ப் பட்ட கைதி தள்ளாடித் தள்ளாடி உயிர் போகும் நிலைமையில் வந்து நிற்கும்போதுங் கூட, தங்கள் ஜபர்தஸ்துகளைக் கைவிட மாட்டார்கள். தங்கள் முன் கூற்றுவன் வந்து நின்று வா வென்று அழைக்கும் போதாயினும் தம் ஜபர்தஸ்துகளைக் கை

விட்டு அவர்கள் விம்மி அழுவார்களோ! அல்லது அப்போதுங்கூடத்தான் அவற்றை விடமாட்டார்களோ!! அது நமக்குத் தெரியாது. வியாதியஸ்தர்களைப் பரிசோதனை செய்து என்ன வியாதியென்று தெரிந்து கொள்ளவேண்டிய அவசியமே சிறை வைத்தியர்களுக்கு இல்லைபோலிருக்கிறது. ஒரு வியாதியஸ்தனின் கை நாடியைப் பார்த்துவிட்டு, மற்றொரு வியாதியஸ்தனுக்கு மருந்து கொடுப்பார்கள். ஒருவன் வாயில் 'தர்மாமீட்டரை' வைப்பார்கள்; மற்றொருவன் நாடியைச் சோதிப்பதுபோல் இருப்பார்கள். வேறொருவனைக் கண்ணால் கடாட்சித்து விடுவார்கள். மூவருக்குமே மருந்து கொடுத்துவிடுவார்கள்.

சிறை ஆஸ்பத்திரியில் நான்கு அல்லது ஐந்துவிதமான மருந்துகளைத்தான், பல புட்டிகளிலும் திருப்பித் திருப்பி நிரப்பி வைத்திருப்பார்கள். அந்த மருந்துகளின் தன்மைகளுக்குத் தகுந்தவாறு கைதிகளுக்கு வியாதிகள் வந்தால்தான் போச்சு; இல்லையென்றால், அவர்களைப் பகவானே காப்பாற்றவேண்டும். ஆனால் மருந்து சாப்பிடாமல் இறந்துபோகிறோமே என்னும் மனக்குறை எந்தக் கைதிக்கும் ஏற்படாது. ஆஸ்பத்திரிக்கு வரும் வியாதியஸ்தர்களுக்கெல்லாம் அங்கே வைத்திருக்கும் நான்கு, ஐந்து தினுசு மருந்துகளில் ஏதாவது ஒன்று கிடைப்பது நிச்சயம். "அடே, இரண்டாம் நம்பரை இவனுக்கு ஊற்றிக் கொடு" என்று வைத்தியர் சொன்னால், மூன்றாம் நம்பர் மருந்தைக் 'கம்பவுண்டர்'க் கைதி ஊற்றிக் கொடுத்து

விடுவது முண்டு. ஆனால், "இரண்டாம் நம்பர் மருந்து செய்யப்போகும் வித்தையை மூன்றாம் நம்பர் மருந்து செய்யாதா என்ன ?" என்று நான் என் மனதுக்குள்ளே எண்ணிக்கொள்வேன்.

---

# 10. சாமான் சப்ளை ஊழல்கள்

போன தடவை நாங்கள் சத்தியாக்கிரஹம் செய்துவிட்டுச் சிறை சென்றபோது, சிறையில் முதல்தினம் எங்களுக்கு முதல் முதலாக ஊற்றின குழம்பில் புழுக்கள் இல்லை. இதைக் கண்டு நாங்கள் அதிசயப்பட்டோம். அது மாத்திர மல்ல; எங்களுக்குக் கொஞ்சம் மனச் சோர்வும் ஏற்பட்டது. புழுக்கள் இல்லாத குழம்பை ஊற்றுகிறார்களே, இது என்ன விபரீதத்துக்கோ என்று தயக்கமுற்றோம். நான் இவ்வாறு எழுதுவது பலருக்கு அதிசயமாகத் தோன்றக்கூடும். ஆனால், எங்களுக்கு அவ்வாறு எண்ணம் ஏற்பட்டதற்கு ஒரு காரணம் இருந்தது. அந்தக் காரணத்தைச் சொன்னால், இந்த எண்ணம் எங்களுக்குத் தோன்றியது சரி என்று எவரும் ஒப்புக்கொள்வார்கள்.

நாங்கள் சிறைக்குச் செல்வதற்கு முன், தலைவர் ராஜாஜீ எங்களைச் சிறைவாசத்துக்கு லாயக்கு ஆக்குவதற்காக, ஒரு பயிற்சி அளித்தார். எங்களை அவர் கூட்டமாகக் கூட்டி, சிறைவாழ்க்கை எவ்வாறு இருக்கும் என்பதைக் குறித்தும் அந்தச் சிறை வாழ்க்கையை எவ்வாறு நடத்தவேண்டு மென்றும் ஒரு உபன்யாசம் செய்தார்:

"வீட்டில் தாயாரோ, மனைவியோ, சகோதரியோ

இலையில் சாதத்தைப் போடுவாள். அந்தச் சாதத்திலே கொஞ்சம் காந்தல் வாசனை வந்துவிட்டால், நாம் என்ன செய்கிறோம்? 'இந்த வீட்டில் தினம் இந்த இழவுதான். இங்கே சோறு தின்னுவதைவிடப் பட்டினி கிடந்துவிடலாம். எனக்குச் சாப்பாடு வேண்டியதில்லை' என்று கையை உதறிவிட்டு எழுந்து விடுகிறோம். அன்புடன் சாதமிட்டவள் மனதை நாம் காந்துமாறு செய்கிறோம். நீங்கள் சிறைக்குச் சென்று திரும்பி வரும்போது, இந்தத் துர்க்குணம் நீங்கினவர்களாக வரவேண்டும். சிறையில் போடும் சாதம் காந்தலாகவும் இருக்கும்; வேகாமலும் இருக்கும்; கஞ்சிப் பசை மிகுந்து மிருக்கும். நமக்குச் சாதம் கொண்டுவந்து வைக்கும் வார்டரைப் பார்த்து, வீட்டில் தாயாரை நோவதுபோல் கோபித்தால், அநேகமாக மண்டை உடைந்துபோகும்; பட்டினி கிடக்கவும் நேரும். சிறையில் ஊற்றும் குழம்பில் புழுக்கள் இருக்கும். அந்தப் புழுக்களைப் பொறுக்கி எடுத்து வைத்துவிட்டு, மனங் கூசாமல், சோற்றையும் குழம்பையும் பிசைந்து, வாரி வாரி உண்ணவேண்டும்" என்று ராஜாஜீ எங்களுக்கு உபதேசம் செய்திருந்தார். ஆகவே, சிறையிலே எங்களுக்கு முதல் முதலில் குழம்பு ஊற்றப்பட்டதும், புழுக்களைப் பொறுக்கி வைப்பதற்காக, அவற்றைத் தேடினோம். அன்று புழுக்கள் கிடைக்கவில்லை. எங்களுக்கு மனச் சோர்வு ஏற்படாமலிருக்குமா? முதல் தினத்தன்று ஏற்பட்ட மனக்குறை அன்றோடு

நீங்கிவிட்டது. அடுத்த தினம் முதற்கொண்டு எங்களுக்குக் கிடைத்த சோற்றுக்கட்டியும் குழம்பும், ராஜாஜீ சொன்னமாதிரியே தரிசனமளிக்கத் தொடங்கின. சிறையில் அதிகாரிகள் வேண்டுமென்றே புழுக்களை வளர்த்து, குழம்பு காய்ச்சின பிறகு இரண்டு கை புழுக்களை அந்தக் குழம்பில் அள்ளிப்போட்டு, கைதிகளுக்கு அதை ஊற்றுகிறார்களா என்ன என்று சிலர் நினைக்கக்கூடும். நான்கூட அவ்வாறு நினைத்ததுண்டு. இல்லை, இல்லை. அதிகாரிகள் ஜப்பானிய ஆகார முறையில் நம்பிக்கை கொண்டவர்க ளல்ல. சிறைக்குக் காய்கறிகள் சப்ளையாகும் விதத்தைக் குறித்து, நான் ஏற்கனவே பிரஸ்தாபித்திருக்கிறேன். அதே முறையில்தான் சிறைக்கு அரிசியும், முழுத்துவரையும் சப்ளையாகின்றன. அந்த அரிசியிலும் துவரையிலும் உள்ள புழுக்கள்தான் சாதத்திலும் குழம்பிலும் வந்து தரிசனமளிக்கின்றன. உண்மையில் ஜப்பானியக் கைதிகளை இந்தியச் சிறைகளில் வைத்தால், அவர்கள் அந்த புழுக்கள் நிறைந்த குழம்பை 'ஸ்பெஷல்' பதார்த்தமாகக் கருதிச் சாப்பிடுவார்கள் அல்லவா? நாம் குறைகூறுவதைப் போல் அவர்கள் குறை கூறமாட்டார்கள். 'உலகத்தில் இந்தியச் சிறைகளைப் போன்ற சிறைகளும் உண்டா?' என்று அவர்கள் புகழ்ந்துகூடப் பேசுவார்கள்.

சிறைகளுக்குச் சாமான்கள் சப்ளை செய்யும் 'டெண்டர்'களில் முதல் தரமான நெல்லூர்ச் சம்பா அரிசியின் விலையையும் திருப்பத்தூர்த் துவரையின்

விலேயையுமே, கண்டிராக்டர்கள் எழுதிக் கொடுப்பார்கள். ஆனல், சிறைக்குள் வந்து சேரும் துவரையோ வண்டுகள் அரித்து மிஞ்சின தோலிகளாக இருக்கும். அரிசியும் அப்படித்தான். உதிரியாக அரிசியைப் பார்க்க முடியாது; கட்டி கட்டியாகப் புழுத்துப்போன அரிசியாகவே இருக்கும். கடையிலிருந்து சிறை உக்கிராணத்துக்கு அரிசியும் பருப்பும் வந்து சேருவதற்குள், இடையிலுள்ள 'பூதங்'களுக்கெல்லாம் வாய்க்கரிசி போட்டாக வேண்டுமென்ருல், சம்பா அரிசியும் திருப்பத்தூர்ப் பருப்பும் எப்படி வந்து சேரும்?

உக்கிராணத்துக்கு வந்த பிறகாவது, அரிசியும் பருப்பும் உப்பும் மிளகாயும் வெங்காயமும் களவு போகாமலிருக்குமென்று நினைக்கிறீர்களா? அது ஒன்றுமில்லே. தினப்படியை வாங்கிக்கொள்வதற்காக, உக்கிராணத்துக்குத் தினம் கைதிகள் செல்லுகிருர்கள் அல்லவா? அவர்கள், அதிகாரிக்குத் தெரியாமல், கையில் கிடைத்த பொருள்களேக் களவாடி மடியில் ஒளித்து வைத்துக்கொள்வார்கள். களவாடின அரிசியைப் பச்சையாகக் கைதிகள் மெல்லுவதைப் பார்க்கும்போது, பரிதாபமாக இருக்கும். புழுத்துப்போன பச்சரிசியையே பக்ஷணம் சாப்பிடுவதுபோல் சாப்பிடுவார்களானல், அவர்களுக்கு எவ்வளவு நாவரட்சி ஏற்பட்டிருக்குமென்பது விளங்குகிறதல்லவா?

உக்கிராணத்திலிருந்து சிறை மடப்பள்ளிக்குச் செல்லும் சாமான்கள் அவ்வளவும் சமைத்தாகி

விடமாட்டா. நடுவிலுள்ளவர்கள் அதில் கொஞ்சம் ஸ்வீகரித்துக் கொள்ளுவார்கள். இவ்வளவு பிரளயங்களையும் தாண்டி உணவாக எங்களுக்கு வந்து சேரும் சாதமும் குழம்பும், புழு மிருந்திருப்பதிலும் சாக்கடைத் தண்ணீரைப்போல் இருப்பதிலும் ஆச்சரியம் ஒன்றுமில்லை அல்லவா? சிறையில் இவ்வளவையும் சகித்துக்கொண்டு, கொடுத்த உணவை வாரி வாரிப் புசித்துவிட்டு, ஒன்று அல்லது இரண்டு ராத்தல் உடல் இடையை அதிகப் படுத்திக்கொண்டு வெளி வருகிறவனே உண்மையான சத்தியாக்கிரஹி.

சத்தியாக்கிரஹி சிறை செல்வதற்கு முன், வீட்டில் மனைவியும் தாயாரும் கண்ணீர்விட்டு அழுகிறார்கள். ஆனால், சிறைவாசத்தை மேலே சொல்லியபடி கழித்துவிட்டுத் திரும்பி வந்த சத்தியாக்கிரஹியை, அந்த மனைவியும் தாயாரும் போற்றுவார்கள். "புண்ணியவான் காந்தி நன்றாக இருக்கவேண்டும். அவன் புண்ணியத்தினாலே என் பிள்ளை இலையில் போட்டதைக் குற்றம் குறை சொல்லாமல் தின்று விட்டுப் போகிறான்" என்று சொல்லி, மகாத்மாவையும் வாழ்த்துவார்கள்.

சிறைக்குச் செல்லும் சத்தியாக்கிரஹிகள் சத்தியாக்கிரஹ தத்துவத்தை அறிந்து செல்லவேண்டும். யோகாப்பியாசத்தை முறையுடன் செய்தால், பலன் கிடைக்கிறது. அதுபோலவே சத்தியாக்கிரஹ தர்மத்தையும் முறையுடன் அனுஷ்டித்தால்தான் பலன் கிடைக்கும். சிறைக்குச் சென்று அங்கே கொடுக்

கும் சாதத்தைச் சாப்பிட முடியவில்லையென்று, அரைகுறையாகச் சாப்பிட்டு, உடல் நலத்தைப் பாழ் படுத்திக்கொள்வது சரியல்ல. அவர்கள் கொடுக்கும் உணவை அமிர்தமென்று நினைக்குமாறு, மனதை அப்பியாசப்படுத்திக் கொள்ளவேண்டும். அந்த உணவை ருசித்து உண்ணும்படி நாவுக்குப் பயிற்சி அளிக்கவேண்டும். நாங்கள் சிறைக்குச் சென்ற புதிதிலே எங்களுக்குக் கொடுக்கப்பட்ட ஆகாரம் முழுவதையும் எங்களால் தின்ன முடியவில்லை. என் நண்பர் ஸ்ரீ ஸி. ஆர். நரசிம்மன் முழு ஆகாரத்தையும் தின்பதற்குப் பயில ஆரம்பித்தார்; "இன்றைக்கு நான் அரைக் கட்டி சோற்றைச் சாப்பிட்டுவிட்டேன்", "இன்றைக்கு முக்கால் கட்டி தின்றுவிட்டேன்" என்றெல்லாம் பெருமையாகச் சொல்லிக் கொள்வார். இதே மாதிரி நாளுக்கு நாள் அவர் சாப்பிடும் உணவின் அளவு அதிகரித்துக்கொண்டே வந்தது. ஒரு நாள், "இன்றைக்கு முழுச் சோற்றுக் கட்டியையும் தின்று விட்டேன்" என்று தெரிவித்துக்கொண்டார். சிறையில் கொடுக்கப்படும் சோற்றினிடம் உண்டாகும் அருவருப்பை அவர் அவ்வளவு பிரயாசைப்பட்டு வென்று விட்டார். இது யோகாப்பியாசம் அல்லாமல் வேறு என்ன?

சிறையில் கிடைக்கும் சோறு எவ்வளவு துர் நாற்றமுள்ளதாகவும், கல்லும் மண்ணும் புழுக்களும் கலந்ததாகவும் இருந்தபோதிலும், அதை முகம் கோணாமல், அருவருப்படாமல், சத்தியாக்கிரஹிகள் சாப்

பிடவேண்டுமென்று சொன்னது எதற்காகவென்ருல், சத்தியாக்கிரஹிகள் எத்தன்மையாக நடந்துகொள்ள வேண்டுமென்பதைக் காட்டுவதற்காகத்தான்; சிறை அதிகாரிகள் தங்கள் மாமூல் வழக்கத்தைக் கைவிடாமல், அநாகரிக உணவைச் சத்தியாக்கிரஹிகளுக்கும் கிரிமினல் கைதிகளுக்கும் ஒரே விதமாய் வித்தியாசமின்றிக் கொடுத்து வருகிருர்களே என்று குற்றம் சாட்டுவதற்காகச் சொன்னதல்ல இது. சத்தியாக்கிரஹ தர்மத்தை முறையுடன் அப்பியாசம் செய்வதற்கு வசதியளிக்கும் பொருட்டே சத்தியாக்கிரஹிகளுக்கு இவ்விதமான ஆகாரத்தைக் கொடுப்பதாக, சிறை அதிகாரிகள் ஒருவேளை சாக்குச் சொன்னாலும் சொல்லுவார்கள். 'போலீஸ் சேவகர்களுக்குத் திருடனைப் பிடிக்க அப்பியாசம் ஏற்படுவதற்காகவே, நான் களவாடினேன்' என்று ஒரு திருடன் வாதித்தால், எவ்வளவு அழகாக இருக்கும்! அப்படித்தான் இதுவும்.

நான் சொன்னதுபோல, சிறையில் சத்தியாக்கிரஹ மனோபாவத்தை வளர்க்கப் பல சத்தியாக்கிரஹிகள் சாதகம் செய்தார்கள். நான் சென்னைச் சிறையில் இருந்தபோது, என் நண்பர் ஒருவர் 'பி' வகுப்பில் இருந்தார். அவர் சத்தியாக்கிரஹ தர்மத்தில் முழு நம்பிக்கை கொண்டவர். 'பி' வகுப்பில் சாதம், குழம்பு, ரசம், மோர் முதலியவைகள் கொடுக்கப்படுகின்றன—இவைகளெல்லாம் சென்னை 'கபேக்' களில் தயாரிக்கப்படுவதுபோல் இருக்குமென்று

நினைத்து விடவேண்டாம். குழம்பு-சாதம, ரசம்-சாதம், மோர்-சாதம் என்று அந்த நண்பர் தனித் தனியாகச் சாப்பிடமாட்டார். தட்டில் சோற்றைப் போட்டு, அதில் குழம்பு, ரசம், மோர், கறி எல்லாவற்றையும் ஒன்றாக ஊற்றி, நன்றாகக் கரைத்துக் குடித்து விடுவார். ருசியில்லாத பதார்த்தங்களை மென்று விழுங்குவதைவிடக் கரைத்துக் குடிப்பதுதான் சுலபம். "ருசி பார்த்துச் சாப்பிட வேண்டுமானால், சிறைக்கு வந்திருக்கக்கூடாது. கிடைத்ததைத் தள்ளுவோம் உள்ளே; நாவின் மத்தியஸ்தம் நமக்கு வேண்டியதில்லை" என்று அவர் சொல்லுவது வழக்கம். இவ்வாறு அந்த நண்பர் அனுஷ்டித்து வந்த உபாயமும் ஒரு வகையில் சௌகரியமாகத்தான் இருந்தது.

# 11. சுயம்பாக உரிமை

ஒரு மனிதன் சிறைவாசத் தண்டனையை அனுபவிக்க நேர்ந்தால், அதை அவனுடைய பாக்கியமாகக் கருதுவது சகஜமா? துர்ப்பாக்கியமாகக் கருதுவது சகஜமா? சிறைக்குச் செல்வதைவிட இறப்பதுமேல் என்றுதான் நம்முடைய ஜனங்கள் முன்னே கருதினார்கள்; இன்னும் கருதுகிறார்கள். தர்மமான ஒரு காரியத்தை முன்னிட்டும் சிறைக்குச் செல்ல, நம் தேசத்தில் யாரும் துணிந்ததில்லை. ஸ்ரீ ராமதாஸர் சிறையில் எவ்வளவு புலம்பினதாக எழுதப்பட்டிருக்கிறது, பாருங்கள்! அவர் என்ன தவறு செய்து விட்டார்? சர்க்காரின் பணத்தை ஸ்ரீ ராம கைங்கரியத்துக்குச் செலவு செய்தார். இம்மாதிரி தவறு செய்ததை, கேவலமான 'கிரிமினல்' குற்றங்களுடன் ஒப்பிட முடியாது. சர்க்காருக்குச் சேரவேண்டிய சொத்துக்களைச் சுயப் பிரயோஜனம் செய்துகொள்வது மிக ஈனத்தொழில்தான். ஏனெனில், சர்க்காருடைய சொத்துக்கள் பொதுஜன சொத்து. அந்தப் பொதுஜன சொத்தைச் சுயப்பிரயோஜனம் செய்துகொள்வது குற்றமே. ஆனால் ஸ்ரீ ராமதாஸர் ஒரு பொதுஜன சொத்தை மற்றொரு பொதுஜனப் பிரயோஜனத்துக்கே செலவு செய்தார். ஆகையினால், சர்க்கார் சொத்தைக் களவாடின

தோஷம் அவர்மீது சாராது. இந்த முறையில் வாதித்தால், ஸ்ரீ ராமதாஸரின் பேரில் குற்றமேயில்லை என்று ருஜூப்பித்துவிட முடியும். இது குதர்க்க வாதமல்ல; நியாயமான வாதந்தான். பொதுஜனங்களிடமிருந்து வரி வசூலிக்கவும் அதைத் தம்மிஷ்டம்போல் செலவு செய்யவும், நவாப்புக்கு யார் அதிகாரம் கொடுத்தார்கள்? கடவுள் கொடுத்த அதிகார மல்ல; தமது புஜபல பராக்கிரமத்தினால் அவர் பெற்ற அதிகாரம் அது. அப்பேர்ப்பட்ட அதிகாரத்தை மற்றொருவன் தன் மனோ பலத்தால் சுவாதீனப் படுத்திக் கொள்ள எண்ணுவானாகில், அதில் தவறொன்று மில்லை. அது பொதுஜனத் துரோகமும் ஆகாது. அதிலும், பகவத் கைங்கர்யத்தை முன்னிட்டு, அந்த அதிகாரத்தைச் சுவாதீனப்படுத்திக் கொள்வது தவறாகாது. ஆயினும், சிறைவாசத்தை ஸ்ரீ ராமதாஸ் அவமானமாகவே கருதினார்.

தர்ம மார்க்கத்தில் ஈடுபட்டு உழைக்கும்போது சிறைசெல்ல நேர்ந்தால், அதைப் பாக்கியமாகக் கருத வேண்டு மென்னும் எண்ணத்தை, மக்கள் மனதில் ஊன்றினார் மகாத்மா காந்தி. நாற்பது கோடி மக்கள் அடங்கிய பாரத சமுதாயத்தில், சிறைசெல்லும் சிலரிடம் மட்டிலுமன்றி, மற்றும் ஏராளமான ஏனையோருடைய மனதிலும் மேற்சொன்ன புதிய அபிப்பிராயத்தை வேர் ஊன்றச் செய்தார் காந்திஜீ. இப்பேர்ப்பட்ட அற்புதமான மனோபாவ மாறுதலை, அவரன்றி வேறு யாரால் செய்திருக்கமுடியும்? சுய

மனோபாவத்தையே திருத்திக்கொள்ள நம்மால் முடிவ தில்லை. நண்பர் இருவரது மனோபாவங்களைத் திருத் துவது அதைவிட அசாத்தியம். ஒரு சமுதாயத்தின் மனோபாவத்தையே திருத்திவிடுவது உண்மையில் ஈசுவரத் தன்மைவாய்ந்த செயலேயன்றி வேறல்ல.

நல்ல விஷயத்தை முன்னிட்டுச் சிறை செல்லு கிறோம் என்னும் திருப்தியும் தைரியமும் பெருமை யும் சிறை செல்லும் சத்தியாக்கிரஹிகளுக்கு இருந்த போதிலும், சிறைக்குள்ளே அனுபவிக்க நேரும் கஷ் டங்களை, ராஜபோகத்தை அனுபவிப்பதுபோல், அவர் களால் அனுபவிக்க முடியா தல்லவா? சாதாரணக் கைதிகளுக்கும் சத்தியாக்கிரஹிகளுக்கும் என்ன வித்தியாச மென்றால், சாதாரணக் கைதிகள் துக்கத் துடன் சிறைக் கஷ்டங்களை அனுபவிப்பார்கள்; அதா வது, உடல் வலி, மனோவலி ஆகிய இருவித அனுபவங் கள் அவர்களுக்கு. ஆனால், சத்தியாக்கிரஹிகளுக்கு உடல் வலி அனுபவம் ஒன்றுதான் உண்டு. இந்த வலியை அனுபவித்தோம் என்பதிலேயே அவர்க ளுடைய மனதில் உற்சாகம் பொங்கும்.

நாங்கள் திருச்சிச் சிறையில் இருந்த காலத்தில் எங்களோடு சி. து. கோபாலன் என்ற நண்பர் ஒரு வர் இருந்தார். இவர் சிறையில் மடப்பள்ளிக்கு 'ஸூப்பர்வைசர்' ஆகிவிட்டார். உத்தியோக தோரணை யில் கிடைத்த உத்தியோக மல்ல; சிறை அதிகாரி கள் கொடுத்த சலுகையினால் கிடைத்த உத்தியோகம். என்னுடைய சிறை அனுபவத்தை எழுதுகையில்,

கோபாலனைக் குறித்துப் பிரஸ்தாபிக்காமல் எப்படி இருக்கமுடியும்? சிறைக்குள்ளே இருந்த எங்களுக்கு, சிறையின் மதில்சுவர்களும் வார்டர்களும் அங்கு கொடுக்கப்படும் ஆகாரமும் வசதிக் குறைவுகளும், நாங்கள் சிறைவாசத்தி லிருக்கிறோம் என்பதை ஞாபகமூட்டின. ஆனால், கோபாலனைப் பார்த்தால் போதும்; அந்த ஞாபகம் மறந்தே போய்விடும். காலை ஐந்து மணிமுதல் மாலை ஆறு மணி வரையில், தமது வீட்டில் ஒரு திருமணம் நடந்தால் எப்படி ஓய்வில்லாமல் உழைப்பாரோ அவ்வாறே, தினமும் சிறையில் அவர் உழைப்பார். சிறையில் இருக்கிறோம் என்ற ஞாபகம் அவருக்குக் கிடையவே கிடையாது.

சிறையில் ஒவ்வொரு கைதிக்கும் கொடுக்க வேண்டிய உணவுப் பொருள்களின் ஜாபிதா ஒன்றைச் சர்க்கார் தயாரித்து வைத்திருக்கிறார்கள். அந்த ஜாபிதாவில் கண்டிருக்கும் பொருள்கள் அனைத்தும் கைதிகளுக்குக் கொடுக்கப்படுமாகில், அவற்றைக் கொண்டு நேர்த்தியான ஆகாரம் தயாரித்துக் கொள்ள முடியும். ஆனால், ஜாபிதாவில் குறிக்கப்பட்டிருக்கும் அளவு சாமான்கள் கைதிகளிடம் வந்து சேரமாட்டா. சிறையில் தயாரித்துக் கொடுக்கப்படும் ஆகாரம் வெகு 'திராபை'யாக இருப்பதற்குக் காரணம், இடையே போகும் இந்தக் களவுதான்.

அந்த ரகசியத்தை அறிந்த நண்பர் கோபாலன், "எங்கள் உணவுப் பொருள்களை எங்களிடமே கொடுத்துவிட்டால், நாங்களே சுயம்பாகம் செய்து,

எங்கள் ஆகாரத்தைத் தயாரித்துக் கொள்கிறோம்" என்று அதிகாரிகளிடம் கூறினர். அதற்கு அனுமதியும் பெற்றுவிட்டார். எங்களுக்கு ஓரளவு பஞ்சம் நிவர்த்தியாயிற்று. தினம் ஒவ்வொரு கைதிக்கும் கொடுக்கப்படும் நல்லெண்ணெய் ஒரு பலமாக இருந்த போதிலும், 400 கைதிகளுக்கும் சேர்ந்து மொத்தமாக எண்ணெய் வாங்கும்போது, ஒன்று அல்லது இரண்டு டின் எண்ணெய் கிடைக்கும். தினம் இரண்டு டின் எண்ணெய் கிடைத்தால், குழம்புக்கும் தாளிதத்துக்கும் எவ்வளவு நிறையப் பிரயோஜனப் படுத்தினாலும், கொஞ்சம் மிச்சப்பட்டு விடும். மிஞ்சிய எண்ணெயை யெல்லாம் நண்பர் கோபாலன் சேர்த்துச் சேர்த்து வைத்திருப்பார். அதிலிருந்து வாரத்துக்கு ஒரு முறை எங்களுக்கெல்லாம் எண்ணெய் ஸ்நானத்துக்கு எண்ணெய் கொடுப்பார். அது மாத்திரமல்ல. சில நண்பர்களுக்குச் சொறி சிரங்கு வந்திருக்கும்; அவர்கள் தினம் உடம்புக்கு எண்ணெய் பூசிக் குளிக்கவும் அவர் எண்ணெய் கொடுப்பார்.

தினம் கொஞ்சமாக மிகுந்து வந்த புளி, உப்பு, மிளகாய், வெங்காயம் முதலிய பொருள்களும் நிறைய மிஞ்சிவிடும். அவற்றைக் கொண்டு மாதத்துக்கு ஒருமுறை, அவர் எங்களுக்குச் 'சமாராதனை' யும் செய்து வைப்பார். நாங்கள் எதிர்பாராமல் இருக்கும்போது, "இன்றைக்கும் ரசம் தயாராகியிருக்கிறது" என்று சொல்லுவார். தினம் குழம்பும்

சோறும் தின்னும் எங்கள் செவிகளில், " இன்று ரசம் உண்டு " என்னும் வார்த்தைகள் விழும்போது, கர்ணாமிருதமாக இருக்கும்; ஐந்துவிதப் பாயச பக்ஷணங்களுடன் போஜனம் செய்ததுபோல், மனம் குளிர்ந்து போகும். ஆமாம், சிறையில் கைதிகள் அவ்வளவு காய்ந்திருப்பார்கள்.

திருச்சிச் சிறையில் நண்பர் கோபாலன் இவ்வளவு சேவையும் செய்தார். எங்களில் ஒரு பெரும் பகுதியினரைப் பின்னால் அலிபுரம் சிறைக்கு மாற்றி விட்டார்கள். கோபாலன் எங்களுடன் வரவில்லை. ஆனால், நாங்கள் அதனால் சிரமப்படவில்லை. எங்கள் கோஷ்டியில் ஒரு கோபாலனில்லாமல் போன சமயத்தில், பத்துக் கோபாலர்கள் தோன்றினார்கள். கோபாலன் சொல்லிக் கொடுத்த முறையை, அவர் இல்லாமலே, அலிபுரம் சிறையில் நாங்கள் அனுஷ்டித்தோம். அங்கேயும் எங்களுக்குச் சுயம்பாக உரிமை கிடைத்தது.

அக்காலத்தில் இதேபோல் சகல சிறைகளிலுமே, சுயம்பாகம் செய்துகொள்ளும் உரிமை சத்தியாக்கிரஹிகளுக்குக் கிடைத்தது. அதனால்தான் அவர்கள் சிறையின் நரக அவஸ்தையைச் சிறிது லேசாக்கிக் கொள்ள இயன்றது. சிறையில் ஒவ்வொரு கைதிக்கும் உணவுப்பொருள்களைக் கொடுத்துச் சுயம்பாகம் செய்துகொள்ள, சர்க்கார் அனுமதி கொடுப்பார்களாகில், கைதிகளுக்கு ஓரளவு செளகரியம் ஏற்படக் கூடும். 'ஏற்படக் கூடும்' என்று நான் சந்தேகமாகச்

சொல்வதற்குக் காரணமென்னவெனில், பிச்சைக் காரன் வைத்திருக்கும் சோற்றைக் களவாடுவது போல் கைதிகளின் ஆகாரப் பொருள்களைக் களவாடும் அந்தப் 'பூதங்'கள், ஜாபிதாவில் உள்ளபடி சாமான்களைப் பூராவும் கொடுப்பார்கள் என்பது என்ன நிச்சயம்? கொடுக்கவேண்டிய உணவுப் பொருள்களைச் சரியாகக் கொடுக்காவிட்டால், சுயம் பாகமாக இருந்தாலும் பிரயோஜனமில்லை யல்லவா?

கைதிகளுக்குத் தினம் 'ஏகாதிபத்திய பிரிட்டிஷ் மன்னர் பிரான் செலவில்' துவரம் பருப்புச் சேர்ந்த குழம்பு ஊற்றுவதென்றுதான் 'ஜெயில் மான்யுவல்' ஏட்டில் இருக்கிறது. ஆனால், சிறை அதிகாரிகள், துவரை போன்ற ஒரு வஸ்துவைப் போட்டே குழம்பு காய்ச்சி ஊற்றுகிறார்கள். சிறைகளில் உள்ள துவரை, மேலே பார்ப்பதற்குத்தான் துவரை மாதிரி இருக்கும். ஒவ்வொரு துவரை மணியும் உள்ளே வண்டு குடைந்த வெறுங் கூடாகவே இருக்கும். இந்தத் துவரையை உடைத்துப் பருப்பு ஆக்கிக் கொடுப்பதாக நினைத்து விடாதீர்கள்! இந்த உளுத்துப்போன துவரையை, இரவில் தண்ணீரில் ஊறவைப்பார்கள். காலையில், அதை வேகவைக்காமல், மத்தினால் நசுக்கி, மிளகாய், உப்பு முதலிய சரக்குகள் சேர்த்துக் காய்ச்சின கஷாயத்தில் ஊற்றிக் கலந்து விடுவார்கள். இரவு தண்ணீரில் ஊறின துவரை துர்நாற்றம் வீசும். இது தான் கைதிகளுக்குக் கொடுக்கப்படும் பருப்புக் குழம்பு; இப்பேர்ப்பட்ட குழம்பைக் காட்டியே,

"இந்தமாதிரி பேஷான சாம்பார் உங்கள் வீட்டில் பண்ணிப் போடுகிறார்களோ?" என்று ஸ்ரீ கோபதி நாராயணசாமி செட்டியார் ஒரு சமயம் சத்தியாக்கிரஹிகளை நோக்கிக் கூறினார். அடடா! என்ன கருணாமூர்த்தி!

# 12. சில தமாஷ்கள்

சிறைவாசம் செய்பவர்கள் ஹாஸ்யச் சுவையை அநுபவிக்காமலே வாழவேண்டி யிருக்குமோ என்று, சிறைக்குச் செல்லாதவர்கள் நினைக்கக்கூடும். மனிதனுடைய உடல் அமைப்பு ஒரு இனிமை யான சங்கீதக் கருவிபோன்றது. தம்புராவை மீட் டத் தெரிந்தவன் மீட்டினால், எல்லா ஸ்வரங்களும் அத னுள் அடக்கமாகி யிருப்பதைக் காண்பான். அது போலவே, மனித உள்ளத்திலும் சகல ரசங்களும் உறைகின்றன. இதை நிரூபிக்கத்தக்க சில சம்பவங் களைக் கூறுகிறேன்.

நாங்கள் பெல்லாரிச் சிறையில் இருந்தபோது, சென்னைச் சிறையிலிருந்த சில சத்தியாக்கிரஹ நண்பர் களை, பெல்லாரி அலிபுரம் சிறைக்கு மாற்றினார்கள். மாற்றப்பட்டு வந்த நண்பர்களில் ஒருவர் தஞ்சாவூர்ப் பேர்வழி. அவர் புசிக்கப் போஜனமில்லாம லிருந் தாலும் வருத்தப் படமாட்டார்; பூசப் புனுகும் ஜவ்வாதும் இல்லாவிட்டால் சங்கடப்படுவார். தமது தலைமயிரைவிடத் தாடி மயிரை அதிக வாசனைத் தைலங்கள் தடவி மிகச் சிரத்தையாய் வளர்த்து வந்தவர். அந்த மனிதர், தாம் அருமையாக வளர்த்த தாடியில்லாமல், ஒருநாள் சிறைக்குள்ளே வந்து நின்றார். "உம்முடைய தாடிக்கு ஹானி செய்தவன் யார், சுவாமி?" என்று நாங்கள் கேட்டோம்.

"அந்தத் துக்கக் கதையை ஏன் கேட்கிறீர்கள்?" என்று, அவர் தமது கதையைச் சொல்ல ஆரம்பித்தார்: "நான் தாடியை வளர்த்ததுபோல் இந்த உலகத்தில் யாரும் குழந்தைகளைக்கூட வளர்த்திருக்கமாட்டார்கள். எத்தனை தைலங்களைப் பூசி வளர்த்தேன் தெரியுமா? எத்தனை விதமான சீப்புகளால் வாரினேன் தெரியுமா? இப்படியெல்லாம் வளர்த்த அந்தத் தாடியை ஒரு விநாடியில் அந்தச் சென்னைச் சிறையிலுள்ள 'ஹௌ' என்னும் சிறை அதிகாரி அழித்துவிட்டானே! 'என் கரங்களை வேண்டுமானாலும் வெட்டிக்கொள். தாடியை மாத்திரம் வெட்டாதே. இது பிரார்த்தனைத் தாடி' என்று அவனை மிரட்டிப் பார்த்தேன். ஒன்றும் பலிக்கவில்லை. மாட்டைப் பலாத்காரமாகப் படுக்கவைத்து லாடம் கட்டுவதுபோல், அவன் என் தாடியை வெட்டிவிடுவான் என்று எனக்குத் தெரிந்துவிட்டது. அதன் பிறகுதான் அதை நான் மனமிசைந்து தியாகம் செய்தேன்" என்று அவர் கண் கலங்கிக் கூறினார். இந்தக் கதையை அவர் வர்ணித்துக்கூறுகையில், நாங்கள் அதன் ஹாஸ்யத்தை அனுபவிக்காமலா இருந்திருப்போம்? அதிலும் இந்தக் கதையைச் சொன்னவர் எப்பேர்ப்பட்டவர் தெரியுமா? வயிறு புண்ணாகும்படி சிரிக்கச் சிரிக்கக் கதை சொல்லும் திறமைவாய்ந்த தஞ்சை வெங்கடகிருஷ்ண பிள்ளைதான்.

சிறைக்குச் செல்லும் அரசியல் கைதிகளுக்கு மாத்திரமே 'ஏ,' 'பி' வகுப்புகள் கொடுப்பதாக

எண்ணவேண்டாம். கிரிமினல்களுக் கென்றுதான் அந்த வகுப்பு அதிர்ஷ்டம் ஏற்பட்டது. இந்த வகுப்புகள் ஏற்படுவதற்கு முன்பே, ஐரோப்பியர்களுக்கும் ஐரோப்பிய சம்பந்தமிருப்பதாகத் தெரிந்த மக்களுக்கும், தனி வகுப்பைச் சர்க்கார் ஏற்பாடு செய்திருந்தார்கள். பிறகு இந்தியக் கிரிமினல்களுக்கும் அந்தஸ்துப் பிரகாரம் வகுப்புகள் கொடுப்பதென்று சர்க்கார் தீர்மானித்தார்கள். இம்மாதிரி சர்க்கார் செய்த தீர்மானத்தைக் குறித்து, வெள்ளைக்காரர்களுக்கும் இந்தியர்களுக்கும் சம அந்தஸ்து வழங்கப்பட்டதாக, பல அரசியல் வாதிகள் அந்தக் காலத்தில் குதூகலம் அடைந்தார்கள்.

சென்னைச் சிறையில் நானும் என் நண்பர்கள் சிலரும் 'பி' வகுப்புக் கைதிகளாக இருந்தோம். ஒரு நாள் புதிய நண்பர் ஒருவர் காலில் பாதக்குறடு தரித்து, கழுத்தில் ருத்திராக்ஷ மாலை பூண்டு, தலையிலும் ஒரு ருத்திராக்ஷ மாலை யணிந்து, உடம்பெல்லாம் விபூதியைப் பட்டை பட்டையாகப் பூசிக் கொண்டு, சிவப் பழம்போல, கையில் நாயன்மார்கள் ஓதிய நூலொன்றை ஏந்தி, அடிமேல் அடிவைத்து உலாவிக் கொண்டிருந்தார். அவரைப் பார்த்த நாங்கள் அனைவரும் பிரமித்துப் போனோம். "இந்தச் சிறைக்குள்ளே சாக்ஷாத் பட்டினத்து அடிகள் வந்து விட்டாரே! இவர் என்ன தவறு செய்து சிறைப்பட்டாரோ, தெரியவில்லையே!" என்று எண்ணமிட்டுத் திகைத்தோம்.

அந்தப் பேர்வழி சென்னைவாசி. அவரைச் சிறைக்கு வெளியே நான் பார்த்திருக்கிறேன். ஆனால், இந்தப் பட்டினத்தடிகள் கோலத்தில் அல்ல; டம்பாச் சாரியார் கோலத்தில் கண்டிருக்கிறேன். அவரை உற்று நோக்கியதும், இவர்தான் அவர் என்பது எனக்குத் தெரிந்தது. அவர் யார் தெரியுமா? பெரிய ரத்தின வியாபாரி. பதினாயிரக் கணக்கான மதிப்புள்ள ரத்தினங்களைக் கபளீகரம் செய்துவிட்டுச் சிறைக்கு வந்ததால், அவருக்கு 'பி' வகுப்பு அளித்திருந்தார்கள். மூர்மார்க்கெட்டில் இரண்டணாக் களவாடினவனுக்கு, 'சி' வகுப்புத்தான் கொடுப்பார்கள். 'அற்பப் பயல்! களவாடுவதென்று தீர்மானித்த பிறகு, இரண்டணாவா களவாடுகிறது?' என்பது சர்க்காரின் எண்ணம் போலும்!

ரத்தின வியாபாரியின் கதையைச் சொல்லும்போது, மற்றொரு 'சி' வகுப்பு ரத்தின வியாபாரியின் கதையும் எனக்கு ஞாபகம் வருகிறது. 'சி' வகுப்பில் ஒரு கிரிமினல் கைதியிருந்தான். 'பி' வகுப்பிலிருந்த எங்களுக்குச் சமைத்துப்போடும் தொழிலை, அந்தக் கைதிக்குக் கொடுத்திருந்தார்கள். நாங்கள் சிறையில் குடிபுகுந்த முதல் தினத்தன்று காலையில் அந்தப் பேர்வழி எங்களுக்குப் போஜன வகைகளை எடுத்துக்கொண்டு வந்தான். அவன் என்னைப் பார்த்ததும், "அண்ணா, நமஸ்காரம்! நமஸ்காரம்!" என்று ஆரவாரம் செய்தான். என் தம்பி சிறைக்கு வரவில்லை என்பது எனக்கு நிச்சயமாகத்

தெரியும். அப்படி யிருக்க, "சிறையில் என்னைத் திடீரென்று 'அண்ணு' என்று அழைத்த இந்தப் புதிய தம்பி யார்?" என்று நான் யோசனை செய்துகொண்டே திரும்பி, என்னை அழைத்தவனது முகத்தை நோக்கினேன். "என்ன அண்ணு, இப்படிப் பார்க்கிறீர்கள்? என்னைத் தெரியவில்லையா? திருவல்லிக்கேணியில் பலான பொடிக்கடையில் இருந்த பலானவன் அல்லவா நான்?" என்று அவன் அடையாளம் சொன்னுன். "எனக்கு ஞாபகம் வரவில்லை" என்று நான் அவனுக்குப் பதில் சொல்லிவிட்டு, "நீ என்ன குற்றத்துக்காகச் சிறைத் தண்டனை பெற்ருய்?" என்று கேட்டேன்.

அவன் ஹாஸ்யமாகச் சொல்லத் தொடங்கினுன்: "நான் வைர வியாபாரம் செய்து கொண்டிருந்தேன். அது எப்படியோ தெரியவில்லை, பாருங்கோ, சுமார் இருபதினுயிரம் ரூபாய் மதிப்புள்ள வைரம் என்னிடமே தங்கிவிட்டது. எனக்கு வைரம் கொடுத்த வியாபாரி என்மீது வழக்குத் தொடர்ந்தார். நான் சிறைக்கு அனுப்பப்பட்டேன். பகவான் கிருபையாலே எனக்கு ஒன்றும் குறைவில்லை. ஆறு மாதம் சிறையில் கழித்து விட்டு வெளியே சென்ருல், எனக்கு இருபதினுயிரம் ரூபாய் சொத்து இருக்கிறது" என்று சொல்லி முடித்தான். இவன் மகா கைதேர்ந்த பேர்வழி அல்லவா? இவனது கதையைக் கேட்டு, நாங்கள் அனைவரும் சிரித்துச் சிரித்து அனுபவித்தோம் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

மற்ருெரு ருசிகரமான சம்பவம். என்னுடைய முஸல்மான் நண்பர் ஒருவர் நல்ல தேசபக்தி வாய்ந்தவர்; கதர் தவிர வேறு வஸ்திரத்தைத் தொடவும் மாட்டார். அவர் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த படியால், சிறைக்கு வரமுடியவில்லை. தமது சகோதரனைச் சிறைக்கு அனுப்ப ஏற்பாடு செய்யும்படி, என்னிடம் அவர் தெரிவித்தார். நான் அந்தச் சிறுவனைச் சிறைக்குள் தள்ளிவிட்டேன். அவனை 'சி' வகுப்பில் வைத்தார்கள். நான் 'பி' வகுப்பில் இருக்கும்போது, ஒரு நாள் அந்தச் சிறுவனைச் சந்தித்தேன். "எப்படி இருக்கிருய், தம்பி?" என்று கேட்டேன். "வேறு கஷ்டமொன்றுமில்லை, ஸார். ஒரே ஒரு கஷ்டம்தான். குழம்பு ரொம்பத் துர்க்கந்த வாடை அடிக்கிறது" என்று கூறினன்.

குழம்பு வாடை சகியாமல் மன்னிப்புக் கொடுத்துவிட்டு, அந்தச் சிறுவன் ஒருவேளை வெளியே ஓடிப் போய்விடுவானே என்று நான் பயந்தேன். "உனக்குச் சிறைவாச மனுபவிப்பது கஷ்டமாக இருந்தால் சொல்லிவிடு. உன் விடுதலைக்கு நான் ஏற்பாடு செய்து கொடுக்கிறேன்" என்று, அவனிடம் நான் தெரிவித்தேன். "ஸார், குழம்பு வாடை பிடிக்காத காலமெல்லாம் சிறையில் இருந்தாகிவிட்டது. அது சகஜமாகிவிட்ட சமயத்தில், மன்னிப்புக் கொடுத்து வெளியே போய், அண்ணனிடம் திட்டுக் கேட்டுக்கொள்ள வேணுமா? இனிச் சமாளித்துக் கொள்வேன், பாதகமில்லை" என்று அவன் சொல்லிவிட்டான்.

# 13. கானமும் சாவும்

திருச்சிச் சிறையில் ஒருநாள் இரவு 10 மணி இருக்கும். நான் இருந்த அறையின் தாழ்வாரத்தின் கோடியில் 'ஜம்'மென்று யாரோ ராக ஆலாபனை செய்ததை நாங்கள் கேட்டோம். "இந்த வேளையில், அதிலும் சிறையில், இவ்வளவு அமோகமாகப் பாடுவது யார்!" என்று நாங்கள் ஆச்சரியப்பட்டோம். எனக்கு அடுத்த அறையிலிருந்த நண்பர் பெயரைச் சொல்லி அழைத்தேன். "யார், ஐயா, இவ்வளவு ஜோராகப் பாடுகிறது?" என்று கேட்டேன். "அது தான் எனக்கும் தெரியவில்லை. ஆனால், சங்கீதமென்னவோ அபாரமாக இருக்கிறது. பாடி முடிக்கட்டும். யார் பாடுகிறதென்று பிறகு விசாரிப்போம்" என்று அவர் கூறினார்.

குறிப்பிட்ட சில புஷ்பங்களைத்தான் நகரத்திலுள்ளவர்கள் பார்த்திருப்பார்கள்; அவற்றின் நறுமணத்தைத்தான் அவர்கள் அனுபவித்திருப்பார்கள். நகரங்களில் வழங்கும் புஷ்பங்களைவிட அதிக மணமும் வனப்புமுள்ள புஷ்பங்கள் இருக்கவே முடியாதென்றுதான், நகர வாசிகள் நினைப்பார்கள். ஆனால், கானகத்தில் மனிதனுடைய கண்ணுக்குத் தெரியாத புஷ்பங்கள் பதினாயிரக் கணக்கில் இருக்கின்றன. நகரத்தில் வளரும் புஷ்பம் ஒரே ஒரு மாதின் கொண்டையை மணக்கச் செய்யலாம். கானகத்தில் மலரும்

ஒரே ஒரு புஷ்பமோ கானகமெங்கும் மணக்கச் செய்துவிடும். இம்மாதிரியான அபூர்வ ஜாதிப் புஷ்பங்கள் ரகம் ரகமாக இருக்கின்றன. அவ்வாறு இல்லாமல் எப்படி இருக்க முடியும்? பகவானுடைய கற்பனைக்கு எல்லை ஏது? அதற்கேற்பத் தானே அவருடைய சிருஷ்டியும் எல்லையற்றதாக இருக்கும்.

அன்று இரவு நாங்கள் சிறையில் கேட்ட அந்தச் சங்கீதத்தை, தேவ கானமென்று கூறலாம். ஆனால், அதே கானம் நகரத்துக் கடைத் தெருவுக்கு வந்துவிட்டால், சாதாரணமாகி விட்டாலும் ஆகிவிடக் கூடும். காலதேச வர்த்தமானமெல்லாம் கூடிய சமயத்தில், அந்த கானம் தேவேந்திர சபையில் கேட்கக்கூடிய கானம்போல் இருந்தது.

ஒரு ஆவர்த்தனம் சங்கீதம் பூர்த்தியானதும், "யார் அங்கே பாடுகிறது?" என்று எனது நண்பர் கூவி அழைத்தார். இந்த அழைப்பைக் கேட்டு எங்கள் அறைகளுக்கருகே வந்த மனிதனுக்கு, வயது 40 இருக்கலாம். குழந்தைகளை மிரட்டுவதற்காக, "வந்தான் பூச்சாண்டி" என்று சொல்லுகிறோமல்லவா? எங்கள் முன் வந்து நின்றவனைக் குழந்தைகள் கண்டால் போதும்; நாம் சொல்லாமலே 'பூச்சாண்டி வந்து விட்டான்' என்று அவைகளே தெரிந்து கொண்டு, ஆழாக்குச் சாதத்தை அரை நிமிஷத்தில் விழுங்கிவிடும். அவன் ஒரு 'கான்விக்ட் வார்டர்.'

வந்த மனிதன் "என் யஜமான் கூப்பிட்டீங்கோ?" என்று கேட்டான். "சங்கீதம் பலே

ஜோராக இருக்கிறது. இன்னும் இரண்டு பாட்டுப் பாடு பார்க்கலாம்" என்று என் நண்பர் சொன்னார். இதற்குள் எல்லா அறைகளிலிருந்தும் "கொஞ்சம் கச்சேரி நடக்கட்டும்" என்று குரல் கிளம்பிற்று. அந்த மனிதன் வெகு லஜ்ஜைப்பட்டுக் கொண்டே பாடத் தொடங்கினான். சுமார் ஒரு மணி நேரம் அமிருத வருஷம்போல் கானம் பொழிந்து முடித்தான்.

பாட்டுப் பாடி முடிந்தபின், அந்த மனிதனுடன் நான் கொஞ்சம் பேச்சுக் கொடுத்தேன். "உனக்கு எத்தனை வருஷம் தண்டனை?" என்று கேட்டேன். "எனக்கா ஆயுள் தண்டனை!" என்று அவன் பதில் சொன்னான். "இந்த இரவில் இந்த இடத்தில் இவ்வளவு ஜோராகப் பாட, உனக்கு என்ன அவ்வளவு உற்சாகம் வந்தது?" என்று கேட்டதற்கு, "உற்சாகமொன்றுமில்லை, எஜமானே! இந்த இடம் கொலை செய்தவர்களைக் காவலில் வைக்கும் இடம். இந்த அறைகளில் இருந்துவிட்டுத் தூக்கிடப்பட்டு இறந்து போகிறவர்களெல்லோரும் கொஞ்சகாலம் பிசாசுகளாக இங்கேயே அலைந்து கொண்டிருப்பார்களாம். என்னை இப்பேர்ப்பட்ட இடத்துக்குக் காவல் போட்டுவிட்டார்கள். பயம் தெரியாமல் இருப்பதற்காகவே நான் பாடிக்கொண்டிருந்தேன்" என்று அவன் சொன்னான்.

நாங்கள் அடைபட்டிருந்த அறைகள் தூக்குத் தண்டனைபெற்ற கொலையாளிகளை அடைத்து வைக்குமிடமென்பது முன்பே எங்களுக்குத் தெரியும். இது

தெரிந்தும், அந்த அறைகள்தான் எங்களுக்கு வேண்டு மென்று நாங்கள் கேட்டுக் கொண்டதன்பேரிலேயே, எங்களை அந்த அறைகளில் சிறை அதிகாரிகள் வைத் தார்கள். காங்கிரஸ்காரர்களில் எவருக்கும் பிசாசுப் பயம் உண்டாகவே இல்லை. 'இவர்கள் காங்கிரஸ்காரர் கள்; இவர்களிடம் நாம் போகக்கூடாது' என்று பிசாசுகளுக்கு மாத்திரம் தெரியாதா என்ன?

சிறைக்குச் செல்லுகிறவரையில்தான் பயம். சிறைக்குள் சென்ற பிறகு, 'கட்டை' தேர்ந்துவிடும். நாம் யாருடன் போராடுகிறோமோ அவர்களுடைய சிறையில் அகப்பட்ட பிறகு, தைரியம் ஒன்றுதானே நமக்குத் துணை. அதையும் போக்கடித்துக் கொண் டால், நிர்க்கதியாக அல்லவா நின்றுவிடுவோம்? எந்த நிலைமை ஏற்பட்டாலும் அதுவே சகஜமான நிலைமை என்று நினைக்குமாறு மனதைப் பக்குவப்படுத்தி வைத் துக்கொண்டால்,சிறைவாசத்தில் துக்கமே ஏற்படாது; பரமானந்தத்தை அனுபவிக்கலாம். அது மாத்திர மல்ல; தேசத்தின் விடுதலைக்காகச் சிறைத் தவம் செய் கிறோம் என்னும் பெருமை வாய்ந்த எண்ணத்தை ருசித்து அனுபவிக்கவும் முடியும்.

திருச்சிச் சிறை ஆஸ்பத்திரியில் ஒரு சம்பவம் நடந்தது. அதையும் சொல்லுகிறேன். ஒரு நாள் இரவு எட்டு மணி இருக்கும். ஆஸ்பத்திரியில் ஒரு நோயாளி வெகு அபாயமான நிலைமையில் இருந் தான். அந்த ஆஸ்பத்திரிக்குள் 10, 15 நோயாளி களும் ஒரு காவற்காரனும் தவிர, வேறு யாரும்

கிடையாது. இரவில் நோயாளிகளுக்கு ஏதாவது சிகிச்சை செய்யவேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்டால், பகவான் வந்து வைத்தியம் பண்ணினால் தான் உண்டு. பொழுது விடிந்த பிறகுதான் வைத்தியர் வருவார். அவர் வருவதற்குமுன் யாருக்காவது நோய் வலுத்துவிட்டால், அதற்கு அவர் ஜவாப்தாரியல்ல. வருகிற நேரத்தில்தான் அவர் வருவார். வந்த பிறகு, இரவு பைசலானவர்கள் போக மிஞ்சினவர்களுக்குத்தான் சிகிச்சை.

அன்று இரவு ஒரு நோயாளிக்குச் சிறைவாச சிரமத்தை நீக்குவதென்று பகவான் அருள்புரிந்தார். இரவு எட்டு மணிக்கு, அவன் பிதற்ற ஆரம்பித்தான். அவன் வாயிலிருந்து வந்த சொற்கள் அர்த்தமற்றிருந்த படியால், நமக்குப் பிதற்றலாகத் தோன்றின. ஒரு வேளை அவைதான் அவன் செல்லவிருந்த மறு உலகத்தின் பாஷையோ என்னவோ! யாருக்குத் தெரியும்? அந்த நோயாளி இரவு பன்னிரண்டு மணி வரையில் பிதற்றிக் கொண்டிருந்தான். சரியாய் நடு ராத்திரியில், சுமார் இரண்டு குடம் ரத்தத்தைக் கக்கினான். அவன் ஆவி உடலைவிட்டுப் பிரிந்துவிட்டது. சர்வ வல்லமைவாய்ந்த சர்க்கார், அவனை ஆயுள் காலம் வரைக்கும் சிறைப்படுத்தி வைக்கத் தண்டனை விதித்தார்கள். அவனோ அந்த உடலை உதறிவிட்டு ஓடிப் போனான். மண்ணை ஆளும் சர்க்காருக்கு அந்த உயிரில்லாத உடல் பிரயோஜனமில்லை. உயிரையோ அவர்களால் சிறைப்படுத்த முடியவில்லை.

இரவு பன்னிரண்டு மணிக்குச் செத்த பிரேதம், மறுதினம் பகல் பன்னிரண்டு மணி வரையில் அதே இடத்தில் கிடந்தது. நிர்வாக சம்பந்தப்பட்ட சடங்குகள் நடந்த பிறகுதான், பிரேதத்தை அந்த இடத்தை விட்டு நகர்த்த முடியுமென்று அதிகாரிகள் சொல்லி விட்டார்கள். நாங்களெல்லோரும் அந்தப் பிரேதத்தின் பக்கத்தில் படுத்திருந்தோம். அது பிரமாதமல்ல; அந்தப் பிரேதத்தை எதிரில் வைத்துக்கொண்டுதான், நாங்கள் ஆகாரமும் செய்யவேண்டியதாயிற்று. பாழாய்ப்போன ஈக்களுக்குத் தராதரம் தெரிகிறதா? அவை பிணத்தின் மீது உல்லாசமாக உட்கார்ந்திருந்துவிட்டு, நாங்கள் உண்ணும் சோற்றின்மீதும் வந்து குந்தி நடனமாடும். ஆனால், அங்கே இருந்தவர்களில் நாங்கள் காங்கிரஸ்காரர்கள் இரண்டு மூன்று பேர்தான். இந்த நிலைமையைக் கண்டு நாங்கள் மனம் சளைத்துப்போகவில்லை. எங்களுக்குள்ளே இவ்வாறு பேசிக்கொண்டோம்: "எந்தக் கஷ்டம் வந்தாலும் சஞ்சலமேற்படாமல் மனதைத் திடமாக்கிக்கொள்ளும் பயிற்சி புரிவதற்கு, இப்போது ஒரு நல்ல சந்தர்ப்பம் வாய்த்தது" என்று முடிவு கட்டினேம். அருகே இருப்பது சவமென்று நினையாமல், 'நண்பர் படுத்து உறங்குகிருர்' என்றே நினைத்து, எங்கள் ஆகாரத்தை உட்கொண்டோம்.

# 14. புண்ணிய ஸ்தலங்கள்

சிறைக்கு வெளியே புண்ணிய க்ஷேத்திரங்களும் தீர்த்தங்களும் ஆலயங்களும் இருப்பது போலவே, சிறைக்குள்ளும் சில புண்ணிய ஸ்தலங்கள் இருக்கின்றன. சிறைக்குள் இருக்கும் அவையும் பாடல் பெற்ற ஸ்தலங்கள்தான். வெளியிலுள்ள புண்ணிய ஸ்தலங்களைக் குறித்து, ஆன்மீக பக்தர்கள் பாடினார்கள். சிறைக்குள் இருக்கும் புண்ணிய ஸ்தலங்களைக் குறித்துத் தேச பக்தர்கள் பாடினார்கள்.

திருச்சிச் சிறையில் ஒரு மூலையில் எண்ணெய் ஆடும் செக்கு மரம் ஒன்று நிற்கிறது. இப்பொழுது அந்தச் செக்கில் எண்ணெய் ஆடுவதில்லை. ஆயினும் அந்த மரத்தை அதிகாரிகள் பெயர்த்து எறியவில்லை. இந்தச் செக்கில்தான் 1921-ஆம் வருஷம் சேலம் தேச பக்தர் வாஸுதேவ ஐயாவைச் சிறை அதிகாரிகள் மாட்டுக்குப் பதிலாகக் கட்டி ஓட்டினார்களாம். தமக்கு இந்தக் கடினமான வேலையைக் கொடுத்தார்களே என்று, ஸ்ரீ வாசுதேவ ஐயா சிறை அதிகாரிகளிடமோ, சர்க்காரிடமோ சினம் கொள்ளவில்லை. காந்தி தத்துவத்திலிருந்து ஸ்ரீ ஐயா கொஞ்சங்கூடப் பிசகாமல், மனதிலே அன்புடன் தேசத்தை நினைத்துக் கொண்டு, மாடாகச் செக்கிழுத்தார்!

ஸ்ரீ வாசுதேவ ஐயா இழுத்த அந்தச் செக்கு மரத்தை, திருச்சிச் சிறைக்குச் சென்ற சத்தியாக்

கிரஹிகள் ஓர் தேவாலயமாகவும் புண்ணிய ஸ்தலமாக வுமே கருதினர்கள். சத்தியாக்கிரஹச் சிறைவாசிகள் அந்த மரத்தடியைச் சுற்றி உட்கார்ந்துகொண்டு, பெரிய அரசியல் விஷயங்களைப்பற்றி விவாதிப்பார்கள்.

திருச்சிச் சிறையில்தான் துக்கிரால கோபால கிருஷ்ண ஐயாவும் ஒரு காலத்தில் சிறைப்பட்டிருந் தார். "அந்த ஆந்திரச் சிங்கத்தைப் பூட்டி வைத் திருந்த கொட்டடி இதுதான்" என்று, புதிதாக வந்த சிறைவாசிகளுக்கு, பழைய சிறைவாசிகள், வெகு பக்தியுடன் காட்டுவார்கள். இம்மாதிரி நம் முடைய மாகாணத்திலுள்ள ஒவ்வொரு சிறையிலும் புனித ஸ்தலங்கள் அமைந்திருந்தன. பெல்லாரிச் சிறை யில் ஸ்ரீ வ. வே. சு. ஐயர் சம்பந்தப்பட்ட சின்னங் கள் இருந்தன. சென்னைச் சிறையில் ஸ்ரீ நாராயண மேனன் சம்பந்தப்பட்ட சின்னங்கள் இருந்தன.

தேச சேவையின் பொருட்டுச் சிறை சென்று விடுவது ஒரு பெரிய காரியமல்ல. சிறை சென்ற பிறகும், புதிய ஆசிரமத்துக்கு ஏற்றவாறு நடந்து கொள்வதுதான் பெருமை தரக்கூடியது. ஸ்ரீ வாசுதேவ ஐயா போன்ற பெரியோர்கள் சிறைக் குள்ளே சென்றபின், விலங்கில் சிக்கிக்கொண்ட கோழிகளைப்போல் மனம் உடைந்து திண்டாடவில்லை. என்னுடன் கூடவந்த நண்பர்களில் இருவர் சிறைக் குள்ளே பட்ட பாட்டை, எங்களால் சகிக்கமுடிய வில்லை. அவ்விரு நண்பர்களில் ஒருவர் சிறைக்கு வெளியே இருந்தபோது, பொதுக்கூட்டங்களில்

அபாரமாய்க் கர்ஜனைகள் புரிந்து கொண்டுதான் பேசுவார். அவர் சிறைக்குள்ளே வந்ததும், அந்தக் கர்ஜனைக ளெல்லாம் எங்கேயோ போய்விட்டன. பகல் காலத்தை யெல்லாம் அவர் எப்படியோ பிர யாசைப்பட்டுக் கழித்துவிடுவார். சூரியன் அஸ்தமித்த தும் அவருக்குச் சங்கடந்தான். என் பக்கத்திலேயே அவருடைய படுக்கை. இரவெல்லாம் உறுமுவார்; பிதற்றுவார். 'அம்மாடி! அப்பா!' என்று கூச்சல் போட்டுக்கொண்டே யிருப்பார். "என்ன உடம்பு?" என்று கேட்டால், "ஒன்றுமில்லை" என்று பதில் சொல்லுவார். அந்த நண்பருக்கு உண்மையில் உடம்பு அசௌகரிய மொன்றுமில்லை. அவருக்கு மனோதிடம் இல்லை. சிறைவாசத்தை அவரால் சகிக்க முடிய வில்லை. அவ்வளவுதான் அவருக்கு உடம்பு.

இந்த நண்பராவது பாதகமில்லை யென்று நினைக்க லாம். மற்றொரு எழுத்தாள நண்பர் வந்திருந்தார். அவர் வெளியே இருந்தபோது எழுதின எழுத்துக்க ளெல்லாம், தொட்டால் சுடுமோவென்று அஞ்சக் கூடியவையாக இருந்தன. ஆனால், அவர் கற்ற கல்வி யொன்றும் சிறைக்குள்ளே அவருக்குப் பிரயோ ஜனப்படவில்லை. காந்திஜீயைச் சமாதானம் செய்து வைப்பதற்காக, ஸர் சாப்ரூவும் ஜெயகரும் பேட்டி காணச் சென்றார்க ளல்லவா? அதைக் கண்டு 'இன் னும் இரண்டு வாரத்துக்குள் நிச்சயமாகச் சமாதானம் ஏற்பட்டுச் சிறையிலுள்ளவர்களை யெல்லாம் விடுதலை செய்துவிடப் போகிறார்கள்' என்று அந்த எழுத்தாள

நண்பர் நினைத்தார். 'இந்தச் சமயத்தில் சிறைக்குச் சென்றால், இரண்டே வாரங்களில் விடுதலை அடைந்துவிடலாம்; சிறைக்குச் சென்ற பிரக்கியாதி யும் கிடைத்துவிடும்' என்று மனப்பால் குடித்துக் கொண்டு உள்ளே வந்துவிட்டார்.

அப்படி வந்தவர் சும்மா இருக்கக் கூடாதா? உள்ளே வந்ததும், "இன்னும் பதினைந்தே நாளில் எல்லோருக்கும் விடுதலை" என்று கோஷமிட்டார். உள்ளே இருந்தவர்களின் மனோநிடத்தைக் கலைத்தார். பதினைந்து தினமும் கழிந்தது. சமாதானம் ஏற்பட வில்லை. இதற்குள் சிறைவாசிகளில் இரண்டு மூன்று பேர்களுக்கு மனதில் கலக்கமுண்டாகி விட்டது. ஒரு நாள் காலையில் ஒரு முஸ்லீம் சத்தியாக்கிரஹி "விடு தலை! விடுதலை!" என்று கத்திக்கொண்டே, சிறை யைப் பிரதக்ஷணம் செய்ய ஆரம்பித்தார். அந்த முஸ்லீம் நண்பரை நாங்கள் அழைத்து, "இது என்ன கூச்சல்?" என்று விசாரித்தோம். அவருக்கு ஒன்றும் புரியவில்லை. அவர் மூளை கலங்கியிருந்தது. விடுதலையைக் குறித்து நினைத்து நினைத்து, அவ ருடைய மூளை அம்மாதிரி யாகிவிட்டது. பிறகு நாங்கள் அந்த நண்பரை எங்கள் அருகில் உட்கார வைத்துக்கொண்டு உபதேசம் செய்தோம்: "சிறையைவிட்டு வெளியே செல்ல வேண்டு மானால், இன்றைக்கே போய்விட முடியும். 'நான் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன்' என்று எழுதி யனுப்பினால், சர்க்கார் விடுதலை செய்துவிடுவார்கள்.

இதற்கு ஸர் சாப்ருவின் சமாதானம் வேண்டியதில்லை. நாம் இங்கே முழுத் தண்டனைக் காலத்தையும் கழிப்ப தென்றே வந்திருக்கிறோம். இதனிடையில் இவ்வாறு மனதை அதைர்யத்துக்கு உட்படுத்திக்கொள்ள லாமா?" என்று அந்த முஸ்லீம் நண்பருக்குச் சொன்னோம். அவருக்குச் சுயபுத்தி வந்தது. தமது செய்கையைக் குறித்து வெட்கப்பட்டார். அன்று முதல் அவரது மனம் மீண்டும் திட நிலைமையை அடைந்தது.

இந்தச் சம்பவங்களையெல்லாம் நான் எழுதுவதி லிருந்து, சிறைக்குச் சென்ற சத்தியாக்கிரஹிகள் எல்லோருமே இம்மாதிரியான பேர்வழிகளாக்கும் என்று நினைத்துவிடவேண்டாம். சுமார் 700 சத்தியாக்கிரஹி கள் சிறைப்பட்டிருந்த இடத்தில் ரசாபாசமாக நடந்து கொண்டவர்கள் ஒரு பத்துப்பேர்தான் இருப்பார்கள். ஒரு பெரிய கூட்டத்தில் இம்மாதிரி பத்துப்பேர்கள் இருப்பதில் அதிசயம் ஒன்றுமில்லை.

சிறைவாசத்தை அனுபவிப்பதற்கு மனோதிடம் வேண்டுமென்று கூறினேன் அல்லவா? எல்லோ ருக்குமே மனோதிடம் ஏற்பட முடியுமா என்று சந்தேகப்பட வேண்டியதில்லை. ஆயுள் தண்டனை பெற்றுச் சிறைக்கு வரும் கிரிமினல் கைதிகள் திகில் பட்டு இறந்து போவதில்லை. அவர்களுக்கு மாத்தி ரம் எவ்வாறு மனோதிடம் ஏற்படுகிறது? அவர்களைப் போல் சத்தியாக்கிரஹிகளும் மனோதிடம் வாய்ந் திருக்க முடியாதா என்ன?

ஒரு நாள் திருச்சிச் சிறைக்கு ஒரு கிரிமினல் கைதி கொண்டுவரப்பட்டான். அவன் உள்ளே வந்து மற்றவர்களுடன் கலந்துகொண்டதும், ஓயாமல் அழத் தொடங்கினான். அவனுக்கு இவர்கள் எவ்வளவோ தைரிய வார்த்தைகள் சொல்லிப் பார்த்தார்கள். அவனுடைய அழுகை ஓயவில்லை. ஆயுள் தண்டனை பெற்ற கைதி ஒருவன், இப்படி அழுதுகொண்டிருக்கும் புதிய கைதியைப் பார்த்து, "உனக்கு எவ்வளவு காலம் தண்டனை விதித்தார்கள்?" என்று அதட்டிக் கேட்டான். "ஆறுமாதம் போட்டு விட்டாங்களே" என்று சொல்லிவிட்டு, மீண்டும் அழத் தொடங்கினான் புதிய கைதி. "சே! இதுக்காடா இவ்வளவு அழுகை! ஆறு மாதம் என்பது எங்களுக்குப் பாக்குக் கடிக்கிற நேரமல்லவா? அழுதது போதும்; மூடடா வாயை! ஆயுள் தண்டனைக்காரர்களெல்லாம் சும்மா இருக்கிறார்கள்; ஆறுமாதக்காரன் விம்மி விம்மி அழுகிறான்!" என்று ஆயுள் தண்டனைக்காரன் அதட்டின பிறகுதான், அந்த அழுமூஞ்சியின் அழுகை ஓய்ந்தது.

# 15. கைதியிலே ஒரு காவலன்

சிறைச்சாலையிலும் பிரத்தியேகமான சில பரிபாஷை கள் உண்டு. "இன்று 'கமான்' எடுக்கப் போகிறார்கள்" என்று சிறையிலுள்ள கைதியும் சொல்லுவான்; வார்டர்களும் சொல்லுவார்கள். 'கமான்' என்ற சொல்லுக்கு என்ன பொருள் தெரியுமா? ஒரு சிறையினின்று மற்றொரு சிறைக்கு அழைத்துச் செல்வதென்று பொருள். இந்தச் சொல் எந்தப் பாஷையிலிருந்து வந்ததென்று யாரும் அதிசயப் படவேண்டியதில்லை. அது ஒரு காரியத்தைக் குறிக் கும் காரணச் சொல்.

சிறையினின்று ஒரு கைதியை மற்றொரு சிறைக்கு மாற்றுவதென்று சிறை அதிகாரிகள் தீர்மானித்தால், அந்தச் செய்தியை வெகு ரகசியமாக வைத்திருப் பார்கள்; யாருக்கும் சொல்லமாட்டார்கள். கைதியை வெளியே அழைத்துச் செல்வதற்குப் பத்து நிமிஷங்க ளிருக்கையில், ஒரு வார்டர் வருவான். "உன்னை அதிகாரி அழைக்கிறார்; கமான்" என்று கூப்பிடுவான். 'கமான்' என்பது ஆங்கிலச் சொல். அதற்கு 'வா' என்று பொருள். அம்மாதிரி அழைத்தவுடன், அந்தக் கைதியை மற்றொரு சிறைக்கு மாற்றப்போகிறார்கள் என்று எல்லோரும் தெரிந்துகொள்வார்கள். தங்க ளோடு இவ்வளவு காலம் பழகின ஒரு நண்பனை வார்டர் எங்கேயோ அழைத்துச் செல்வதைக் கண்டு,

மற்றக் கைதிகள் துக்கப்படுவார்கள். வார்டர் ஒரு கைதியைக் 'கமான்' அழைப்பதை, எமன் அழைப்பாகவே அங்கேயுள்ள மற்றக் கைதிகள் கருதுவார்கள்.

நாங்கள் திருச்சிச் சிறையில் இருந்தபோது, இந்தக் 'கமான்' அழைப்பை நாங்களும் அனுபவித்துப் பார்த்தோம். நண்பர்களை விட்டுப் பிரிவதென்ருல், வருத்தமாகத்தான் இருக்கிறது. நாங்கள் சிலர் பிரிந்து போவதைப் பார்த்து, அந்தச் சிறையிலேயே தங்கியிருக்க நேர்ந்த மற்ற நண்பர்களில் சிலர் கண் கலங்கியும் அழுதார்கள். "நாம் சிறைக்கு வருவதென்று தீர்மானித்தபோது, நாமனைவரும் ஒரே சிறையில் இருக்கப் போகிருேம் என்னும் எண்ணத்துடன் வரவில்லையே! ஒன்ருக ஒரு கூட்டமாக வைத்தாலும் தனித் தனியே பிரித்து வைத்தாலும், இருக்கச் சம்மதித்தே வந்தோமல்லவா? அவ்வாறிருக்க, இப்பொழுது பிரியும்போது, ஏன் வருத்தப் படவேண்டும்?" என்று நாங்கள் ஹிதோபதேசம் செய்து, வருத்தப்படும் நண்பர்களின் துக்கத்தை ஒருவாறு ஆற்றிேனும்.

சிறையில் சிலரைக் 'காணிக் வார்டர்' என்று சொல்லுவார்கள். இந்தச் சொல்லுக்கு நமக்குப் பொருள் விளங்காது. பிரிட்டிஷ் அரசாங்கத்தார் எவ்வளவு தந்திரமாக ராஜ்ய பரிபாலனம் புரிகிருர்கள் என்பதைப் பாருங்கள்! சிறைக்குள்ளிருக்கும் கைதிகளை நிர்வாகம் செய்வதென்ருல், அவ்வளவு சுலப

மான காரியமல்ல. நம்முடைய ஊரில் ஒரே ஒரு காலி அல்லது கொலையாளி இருந்தால், நாம் எவ்வளவு சிரமப்படுகிறோம்? சிறையிலோ கொலையாளிகளையும் கைதிகளையும் தவிர, வேறு யாரும் கிடையாதல்லவா? அவ்வளவு பேர்களையும் நிர்வகிப்ப தென்றால், அது சிரமமான காரியந்தான். ஆகவே, சிறை அதிகாரிகள் ஒரு தந்திரம் செய்திருக்கிறார்கள். நீண்ட காலத் தண்டனை பெற்ற கைதிகள் இருப்பார்களே; அவர்களில் இரண்டு மூன்று வருஷங்கள் அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிந்தும் அதிகாரிகளின் புன் முறுவலுக்கு ஆசைப்பட்டும் நடந்துகொண்டோரை, வார்டர்களாக நியமிப்பதுண்டு. இப்பேர்ப்பட்ட வார்டர்களுக்குத்தான் 'கான்விக்ட் வார்டர்கள்' என்று பெயர். (அதாவது 'கைதிக் காவலன்' என்று அர்த்தம்.) இந்தச் சொல்லைத்தான் 'காணிக் வார்டர்' என்று கைதிகள் சொல்லுவார்கள்.

சிறைகளில் சம்பளத்துக்கு வேலை செய்யும் வார்டர்களைவிட, கான்விக்ட் வார்டர்களே கடின நெஞ்சு வாய்ந்தவர்கள். அதிகாரிகளுக்குத் திருப்தியாக நடந்துகொள்ள வேண்டும் என்னும் எண்ணம் ஒன்றே அவர்களுக்குப் பிரதான மாகையினால், அவர்கள், இளகிய மனமில்லாமல், குரூரமாய், மற்றக் கைதிகளிடம் நடந்துகொள்வார்கள். அது மாத்திரமல்ல; அதிகாரிகளுக்குப் பக்தி செலுத்துவதில், கான்விக்ட் வார்டர்களுக்குள்ளாகவே போட்டி ஏற்பட்டு, கடின சித்தமாக இருப்பதில் முதல் மார்க்கு வாங்க

வும் பிரயாசைப் படுவார்கள். அவர்கள் இவ்வாறு பிரயாசைப்படப் பிரயாசைப்பட, சாதாரணக் கைதிகள் படும் தொந்தரவு சகிக்க முடியாததாகிவிடும்.

நாங்கள் பெல்லாரியிலுள்ள அலிபுரம் சிறைக்குச் சென்றபோது, அங்கே மலையாளம் மாப்பிள்ளைமார் கைதிகள் 700 பேர் இருந்தார்கள். அவர்கள் அவ்வளவு பேர்களையும் காவல்காரர்கள் வைத்து மேய்ப்பதென்றால், அசாத்தியமான செலவு பிடிக்கும். அவர்களில் சிலரைக் கான்விக்ட் வார்டர்களாக நியமிக்கவும் சர்க்காருக்குத் தைரியமில்லை யென்று தோன்றிற்று. ஏனெனில், அவர்கள் அத்தனை பேர்களும் முஸல்மான்கள். ஆகவே, ஜாதி அபிமானமும் ஒற்றுமையும் அவர்களிடையே இருக்குமே என்பது ஒரு சந்தேகம். அவர்கள் அனைவரும் காங்கிரஸ்காரர்களைப் போலவே, ஒரு இயக்கத்தில் சம்பந்தப்பட்டுக் கைதியானவர்கள். அப்பேர்ப்பட்டவர்கள் ஒருவரையொருவர் காட்டிக் கொடுக்க இசையமாட்டார்களே என்பது மற்றொரு சந்தேகம்.

சிறையதிகாரிகளுக்கு இப்பேர்ப்பட்ட சங்கடமான நிலைமை ஏற்பட்டதும், ஒரு காரியம் செய்தார்கள். எவ்வளவு சொற்பமாகச் சம்பளத்துக்குக் காவல்காரர்களை வைத்திருக்க வேண்டுமோ அவ்வளவே வைத்துக்கொண்டார்கள். ஆனால், கைதிகளையெல்லாம் தனிக் காவலில் வைத்துவிட்டார்கள். சிறையில் கடுங்காவல் என்பது ஒரு பயங்கரமான தண்டனை. இரவும் பகலும் 24 மணி நேரமும் ஒரு அறைக்குள்ளேயே

புதைந்து கிடக்கவேண்டும். உணவும் அங்கே; உறங்குவதும் அங்கே; மல ஜல உபாதைகளைக் கழிப் பதும் அங்கே. இப்பேர்ப்பட்ட இடத்தில் அதிகாரி களுக்குக் கீழ்ப்படியாத கேதியை வைத்தால், அவன் 'கடோற்கஜனுக' இருந்தாலும் வணங்கிவிடுவான்!

ஆனல், காங்கிரஸ்காரர்களாகிய நாங்கள் வேறே 500 பேர் அலிபுரம் சிறைக்குச் சென்றதும், எங்களைக் காவல் காக்க, அதிகாரிகள் ஒரு யுக்தி செய்தார்கள். மாப்பிள்ளைமார்களை அழைத்து, எங்களைக் காவல் காத்து மேய்க்கும் கௌரவத்தை, அவர்களுக்குக் கொடுப்பதாக ஆசை காட்டினர்கள். மாப்பிள்ளை மார்களும் அந்த யோசனையைச் சரியென்று அங்கீ கரித்தனர். ஆயினும், அவர்களுடைய தலைவர், எங் களில் முக்கியமானவர்களைச் சந்தித்து, "நீங்களும், நாங்களும் ஒரு துறையில் போர்செய்து சிறைத் தண்டனையை அனுபவிக்கிருேம். அதிகாரிகள் சிறை யிலும் நம்மைப் பிரித்தாளப் பார்க்கிருர்கள். உங்க ளைக் காவல் காக்கும் தொழிலை நாங்கள் ஏற்றுக் கொண்டால், எங்களுக்குச் சிறைக்குள் நடமாடக் கூடிய சுதந்திரம் கொஞ்சம் கிடைக்குமென்று கருதியே, இத்தொழிலை ஒப்புக்கொண்டோமே யன்றி வேறில்லை. உங்களை நாங்கள் தொந்திரவு செய்ய மாட்டோம். உங்களிஷ்டம்போல் நீங்கள் இருக்க லாம்" என்று வாக்குறுதி அளித்துவிட்டார்.

மேற்சொன்ன நிலைமை ஏற்பட்டதும் அதிகாரி களின் பாடு திண்டாட்ட மாகிவிட்டது. 'பெருமாள்

போய்ப் பெத்த பெருமாள் ஆனது 'போல், அவர்களுக்குச் சங்கடமாகிவிட்டது. எங்களை மாத்திரம் காவல் காக்க வேண்டியது போக, இதுவரையில் கடுங்காவலில் வைத்திருந்து இப்போது வெளியே விட்ட மாப்பிள்ளைமார்களையும் காவல் காக்கவேண்டி வந்தது. அந்தச் சிறையின் அதிகாரி ஒரு ஆங்கிலேயர். கைதிகளைக் கடுமையாய் நடத்துபவர் என்று பெயரெடுத்தவர். அப்பேர்ப்பட்டவர், சிறையில் ஏற்பட்ட புதிய நிலைமையைப் பார்த்துவிட்டு, அன்பு வடிவமாகிவிட்டார். ஒரு தொந்திரவுமில்லாமல் நிர்வாகத்தை அவரால் நடத்த முடிந்தது. இப்பேர்ப்பட்ட தந்திரசாலிகளாக இருப்பதனுலேதான், அவர்கள் உலகத்தையே கட்டி ஆளுகிருர்கள்.

சிறைகளில் பிரதி திங்கட்கிழமையும் ஒரு சடங்கு நடைபெறும். அதற்குப் 'பரேட்' என்று பெயர். அன்று காலையில் சிறையிலுள்ள கைதிகளெல்லாம் மைதானத்தில் வரிசையாக வந்து நிற்பார்கள். ஒவ்வொருவரும் தத்தம் ஆடைகளை நன்ருக வெளுத்து மடித்துத் தமக்கு எதிரே வைத்துக்கொள்ள வேண்டும். அதே மாதிரி, சாப்பாட்டுத் தட்டையும் தண்ணீர் குடிக்கும் குவளையையும் பள பள வென்று துலக்கித் துடைத்து, வெயிலில் காய வைத்து, எதிரில் வைத்துக்கொள்ள வேண்டும். கைதிகளையும் அவர்களுடைய சாமான்களையும் பார்வையிட, ஜில்லாவின் பெரிய வைத்தியரும் சிறை சூப்பரிண்டெண்டும் வருவார்கள். அந்த உத்தியோகஸ்தர்களுக்கு முன்

னும் பின்னும், கான்விக்ட் வார்டர்களும் சம்பள வார்டர்களும் தடி சகிதமாகச் செல்ல, ஜபர்தஸ்துடன் அவர்கள் வருவார்கள். அந்தச் சமயத்தில் தங்களுடைய தேவைகளையோ, குறைகளையோ அந்த வைத்தியரிடம் கைதி தெரிவித்துக் கொள்ளலாம். ஆனால், தெரிவித்துக் கொள்வதற்கு ஒரு முறை இருக்கிறது. அதன்படியே தெரிவித்துக் கொள்ள வேண்டும்.

உத்தியோகஸ்தர் அருகே வரும் சமயம் பார்த்து, தூக்கி வாரிப்போட்டதுபோல, "ஸார், எனக்கு மோர் வேண்டும்; பால் வேண்டும்" என்று சொல்லக் கூடாது. அவ்வாறு சொன்னால், கபாலம் திறந்து போகும். தொங்கவிட்டிருக்கும் வலது கையை 'ட' போல் வைத்துக்கொள்ள வேண்டும். அந்தச் சமிக்ஞையை உத்தியோகஸ்தர் பார்த்து "என்ன?" என்று மிடுக்காகக் கேட்பார். "எனக்கு மோர் வேண்டும்" என்று கேட்கவேண்டும். "எனக்கு" என்று கேட்காமல், 'எங்களுக்கு' என்று அலிபுரத்தில் ஒரு நண்பர் மனுச் செய்யத் தொடங்கினார். "ஷட் அப்!" என்று கர்ஜித்தார் உத்தியோகஸ்தர். 'எங்களுக்கு' என்னும் வார்த்தை புரட்சி லட்சணம் வாய்ந்ததென்று அவர் கூறினார். சிறையில் கைதிகள் கட்டுப்பாட்டுடன் இருப்பதாகத் தெரிவித்துக் கொள்ளக்கூடாது. அது அபாய மல்லவா?

சிறை விதிகளின் பிரகாரம் மனுச்செய்து கொண்டாலும், கேட்டதெல்லாம் கிடைத்துவிடு

மென்று நினைத்துவிடக்கூடாது. அநேகமாக மனுதார்களின் பெரும்பாலான வேண்டுகோள்களுக்கு 'ஷட் அப்' என்ற பதில் கிடைப்பது சித்தம். பூர்வ ஜன்மப் பிராப்தி இருந்தால், சில சமயத்தில் கேட்ட வரமும் கிடைக்கலாம்.

# 16. இதுவா சீர்திருத்தம்?

மனித சமுதாயத்தில் சிறைச்சாலைத் தண்டனை விதிப்பதென்னும் அபிப்பிராயத்தை முதன் முதலில் யார் புகுத்தினார்களோ தெரியவில்லை! அந்த அபிப்பிராயத்தைச் சிருஷ்டி செய்த மூளைக்கு முதல் பரிசு வழங்கத்தான் வேண்டும்! இந்த உலகத்தையே சிறையென்றும், இந்த உடலைச் சிறையென்றும், இவற்றினின்று விடுதலையடைந்து ஜனன மரண சம்சார சாகரத்தைக் கடக்கவே மனிதர்களைப் பகவான் உலகத்தில் பிறக்கச் செய்கிறார் என்றும் சொல்லும் வேதாந்த தர்ம சாஸ்திரக்காரர்கள் கூட, மனிதர்களைச் சிறைச்சாலையில் வைப்பதென்னும் அனுஷ்டானத்தைக் கடைப்பிடித்திருந்தார்கள்; இன்றும் கடைப்பிடித்து வருகிறார்கள். ஒரு பட்சியைச் சிறையில் வைத்திருந்ததற்காக, ஸ்ரீ ராமதாஸ் பன்னிரண்டு ஆண்டுகள் சிறைவாசத்தை அனுபவித்ததாகப் புராணம் கூறுகிறது. அவ்வாறிருக்க, வினையாற்றி விடுதலை யடைவதற்காகப் பிறந்த மனிதர்களைச் சிறைப்படுத்தி வைப்பது என்ன நியாயம்?

.வேதாந்தம் இந்த ஒரு பக்கம் இருக்கட்டும். நமது சிறைகளில் நிதர்சனமாக நடக்கும் விஷயங்களைக் கவனிப்போம். சென்னை நகரம் நீங்கலாக, மற்ற ஊர்களிலெல்லாம் ஊருக்கு வெளியேதான் சிறைச்சாலை இருக்கும். அதைச் சுற்றிப் பெரிய

மதில் எழுப்பப்பட்டிருக்கும். இந்த மதில் சுவருக்கு உள்ளே இருப்பவர்கள் எவ்வளவு நரக வேதனைகள் படுகின்றனரோ என்று நினைத்து வெளியே இருப்பவர்கள் நடுங்கவேண்டும். சிறைக்குள்ளே இருப்பவர்கள், 'வெளி உலகம் இருக்கிறதா? கடலில் மூழ்கிவிட்டதா?' என்று சந்தேகப் படவேண்டும். உள்ளே இருப்பவர்களுக்கும் வெளியே இருப்பவர்களுக்கும் இம்மாதிரியான எண்ணங்களை ஊட்டுவது இந்த மதில் சுவர்தான். உள்ளே இருக்கும் கைதிகளுக்கு இந்த மதில் சுவர்தான் 'சிறைப்பட்டிருக்கிறோம்' என்னும் ஞாபகத்தைச் சதா நினைவுறுத்திக்கொண் டிருக்கும். பூகம்பம் வந்து இந்த மதில் சுவர்கள் மாத்திரம் இடிந்து விழமாட்டாவா என்று, நாங்கள் எத்தனையோ முறை பகவானைப் பிரார்த்தனை செய்ததுண்டு.

"சிறைக்குள்ளே இருக்கும் கிரிமினல் கைதிகளுக்கு இந்த மதில் சுவரைத் தாண்டுவது ஒரு பிரமாதமான காரியமா? அவர்கள் வெளியே இருந்த போது, கோட்டைச் சுவர்களை யெல்லாம் தாண்டினவர்கள் அல்லவா? மஹா சாமர்த்தியசாலிகளாயிற்றே?" என்று சிலர் நினைக்கலாம். வேட்டை நாயாக இருந்தாலுங்கூட, நாய் அடிப்பவனைக் கண்டால், எச்சில் பொறுக்கும் நாயைப்போல் அது அவனிடம் பணிந்து வாலையிட்டுக் கழுத்தை நீட்டும். இது போலவேதான் கசாப்புக் கடைக்காரனைப் பார்த்த மாத்திரத்தில், ஆடுகளும் மாடுகளும்

சப்தநாடியும் அடங்கித் திகில்பட்டு நிற்கும். கடோற் கஜனைப்போன்ற பலசாலியாக விருப்பவனும் சாவைக் கண்டு நடுங்குகிறான் அல்லவா? இதே மாதிரிதான் சிறையில் அடைபட்ட கைதிகளும் பூனைமாதிரி ஆடுகிறார்கள். இப்பேர்ப்பட்டவர்களை அடக்குவதற்காகத் தான், சிறைச்சாலைகளில் பயங்கரமான 'ஜபர்தஸ்து' முறைகள் கையாளப் படுகின்றன! இம் முறைகளைக் கையாளும் வஸ்தாதுகளை, 'செத்த பாம்பை அடிக்கும் வீரர்கள்' என்றே சொல்ல வேண்டும்.

நாங்கள் சிறையில் இருக்கும்போது, ஒரு அதிசயமான சிறை அனுஷ்டானத்தைப் பார்த்தோம். மாலை 6-மணிக்கெல்லாம் கைதிகளை 'லாக் - அப்' செய்து விடுவார்கள். 'லாக் - அப்' என்றால், அறையில் தள்ளிப் பூட்டுவது என்று அர்த்தம். 'லாக் - அப்' என்னும் வார்த்தையை, கைதிகள் சர்வ சாதாரணமாக உபயோகிக்கிறார்கள். ஆகவே, அதற்குத் தனியாகத் தமிழ் வார்த்தை தேவையில்லை யென்றே தோன்றுகிறது. மாலை 6 மணிக்கு 'லாக் - அப்'பில் அடைபட்டவர்கள், மறுதினம் காலை 6 மணிக்குத் தான் கொட்டடியிலிருந்து வெளியே விடப்படுவார்கள். 'இந்த 12 மணி நேரமும் சொஸ்தமாகத் தூங்கலாமே' என்று, தூக்கத்தில் பிரிய முள்ளவர்கள் நினைத்து விடக்கூடாது. இரவெல்லாம் சிறையில் காவல்காரர்கள் ஒருவிதக் கூச்சல் போட்டுக் கொண்டே இருப்பார்கள். முதல் முதலில் அந்தக்

கூச்சலைக் கேட்கும்போது பயமாகக் கூட இருக்கும். பழக்கத்தில் அதுவும் சகஜமாகிவிடும்.

'ஆல் ஈஸ் ரைட்' என்று ஒரு காவலன் ஒரு மூலையிலிருந்து கத்துவான். 'எல்லாம் சரியாக இருக்கிறது' என்பது அந்தச் சத்தத்துக்கு அர்த்தம். அதை வார்த்தை வார்த்தையாக உச்சரித்துச் சொல்ல மாட்டான்; ராகம்போல நீட்டிச் சொல்லுவான். அது பேய் கத்துவதுபோல் இருக்கும். அந்தச் சத்தத்தைக் கேட்ட மற்றொரு காவல்காரன், 'ஆல் ஈஸ் ரைட்' என்று ஜவாப் கொடுப்பான். சிறையில் பல இடங்களில் காவல் காப்பவர்களும் இதே மாதிரி மாறி மாறிக் கூச்சலிடுவார்கள். இவ்விதமான கூச்சல் இரவெல்லாம் கேட்டுக் கொண்டேயிருக்கும். கொட்டடிக்குள் அடைபட்டிருக்கும் கைதிக்கு இந்தக் கூச்சலில் எப்படித் தூக்கம் பிடிக்கும்? "எல்லாம் சரியாக இருக்கிறது" என்று காவல்காரன் கூச்சலிடும்போது, "எல்லாம் சரியாக இருந்தால், நான் ஏன் சிறைப்பட்டிருக்க வேண்டும்? அவன் ஏன் இப்படிச் சுற்றவேண்டும்? இதை யெல்லாம் யோசியாமல், எல்லாம் சரியாகவே யிருப்பதாகக் கத்துகிறானே முட்டாள்!" என்று கைதி எண்ணமிட்டுக் கொண்டேயிருப்பான்.

கிரிமினல் குற்றம் செய்த கைதிகளுக்கு மாத்திரம் தான் மேற்சொன்ன விதமான பந்தோபஸ்துக்கள் என்று நினைத்து விடக்கூடாது. சத்தியாக்கிரஹிகளுக்கும் மேற்கூறிய பந்தோபஸ்துக்களெல்லாம் உண்டு.

இந்த உலகத்தில் யாருடைய மனதை மாற்றினாலும் மாற்றலாம்; சிறை அதிகாரிகள் இருக்கிறார்கள் அல்லவா, அவர்களுடைய அதிசயமான மனோபாவங்களை மாற்றவே முடியாது. அது அவர்களுடைய குற்றமல்ல. சதா சர்வ காலமும், கொள்ளைக்காரர்களுடனும் துன்மார்க்கர்களுடனும் பழகின சகவாச தோஷத்தினால், அவர்களுடைய மனோபாவம் அப்படியாகி விட்டது. அவர்கள் வேறு எந்த வேலைக்கும் லாயக்கற்றவர்களாகவும் ஆகிவிட்டார்கள். கைதிகள் சுவர் ஏறிக் குதித்துத் தப்பித்துக் கொள்ளாதபடி அவர்களைப் பாதுகாக்கும் வேலை ஒன்றுதான் அவர்களுக்குத் தெரியும். மற்ற எல்லா இலாக்கா உத்தியோகஸ்தர்களையும் சர்க்கார் அடிக்கடி இடம் மாற்றுவதில்லையா? அம்மாதிரி சிறை அதிகாரிகளையும் மாற்ற வேண்டும். ஒரு சிறையிலிருந்து மற்றொரு சிறைக்கு மாற்றப்பட வேண்டுமென்பதை நான் சொல்லவில்லை; சிறை இலாக்கா உத்தியோகஸ்தர்களை வேறு இலாக்காக்களுக்கும், வேறு இலாக்காவி லுள்ளவர்களைச் சிறை இலாக்காவுக்கும் மாற்றிக்கொண்டேயிருக்கவேண்டும் என்றே சொல்லுகிறேன்.

சமுதாயக் கட்டுப்பாடுகளுக்கு இணங்காதவர்களைச் சீர்திருத்தும் நோக்கத்துடன், சிறைகளை அதிகாரிகள் நிர்வகிக்கும் காலம் வருமானால், அக்காலத்தில் இப்பொழு திருக்கும் சிறைச்சாலை முறை கட்டாயம் ஒழிந்து போகும். இப்பொழுதுள்ளவர் போன்ற உத்தியோகஸ்தர்களும் அப்போது பிரயோ

மில்லை. அந்தக் கிரிமினல்களையும் தம்மைப்போல் மாற்றிவிடும் சக்தி மகாத்மாஜீக்கு இருக்கிறது. ஆனால், சாதாரண சத்தியாக்கிரஹிகளைக் கிரிமினல் கைதிகளுடன் வைப்பதனால், சத்தியாக்கிரஹிகளில் பலஹீனமுள்ளவர்கள் சுயகுணங்களை இழந்து, சகவாசத்தினால் கிரிமினல் கைதிகளின் தன்மைகளுக்கு இரையாகி விடுவார்கள். சிறைகளில் கிரிமினல் கைதிகளிடையே ஒரு பெரிய ஆபாசமான அநாகரிகப் பழக்கம் ஏற்பட்டிருக்கிறது. அது என்னவெனில், ஆயுள் தண்டனை பெற்ற கைதிகள் தங்களுடைய காமவெறியை அநாகரிக முறையில் தணித்துக் கொள்ளுகிறார்கள். சத்தியாக்கிரஹிகளை இப்பேர்ப்பட்டவர்களுடன் சேர்த்து வைப்பதனால், அவர்களில் உலக அனுபவ மில்லாதவர்களும் பால்யர்களு மிருப்பார்க ளல்லவா; அப்பேர்ப்பட்டவர்க ளெல்லாம் பெரும் அபாயத்துக்கு உட்படுகிறார்கள். குற்றம் செய்தவர்களைச் சமூகத்தில் வைத்திருக்கக் கூடாதென்னும் கொள்கையைக் கடைப்பிடித்து, அவர்களைச் சர்க்கார் சிறைக்குள் வைத்திருந்து வெளியே அனுப்புகிறார்கள். அவர்கள் வெளியே வரும்போது நூறு மடங்கு அதிக தோஷம் நிறைந்தவர்களாக வருகிறார்கள். இது சமூகத்துக்கு நன்மை பயக்கக் கூடியதா வென்று அனைவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.